3

293

நவீன வாசகம்

ஆறும் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 FEB 1943
MADRAS

தமிழாசிரியர் :
மயிலை. சிவ - முத்துக்குமாரசாமி முதலியார்

1206

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்
திருவல்லிக்கேணி, சென்னை

பதிப்புரிமை] 1941 [விலை அணா 8

2

நவீன வாசகம்

ஆரும் புத்தகம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 FEB 1943
MADRAS

தமிழாசிரியர் :
மயிலை. சிவ - முத்துக்குமாரசாமி முதலியார்

494.81186
1206

மாடர்ன் பப்ளிஷிங் ஹவுஸ்
திருவல்லிக்கேணி, சென்னை

பதிப்புரிமை] 1941 [விலை அணு 8

First Edition 1941

931,9

எமது பணிவார்ந்த கடமை:

பொது நலங் கருதி உழைக்கும் பெரியோர்களும் பத்திரிகைகளும் அவ்வப்போது உதவியுள்ள அரிய கருத்துக்களை மாணவர் இளமையிலேயே படித்துணர்ந்து பிற்காலத்தில் நல் வாழ்வை அடையவேண்டும் என்னும் நன்னோக்கத்தோடு அக்கருத்துக்களுட் சில இப்புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்ளப் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம்.

ஆக்கியோர்

முன்னுரை :

நவீன வாசகம் என்னும் இவ்வாசக வரிசை நம் தமிழ் நாட்டுக்கு முற்றிலும் நவீன முறையிலேயே வெளிவருகின்றது. கல்வியிலாகா அதிகாரிகள் புதிய முறையில் வகுத்துள்ள பாட திட்டத்தினைப் பன்முறை கூர்ந்து நோக்கி அவ்வதிகாரிகளின் நன்னோக்கம் சிறிதும் வழுவா வண்ணம் இவ்வாசக வரிசையில் உள்ள பாடங்கள் யாவும் அமைக்கப்பட்டுள்ளன.

குழந்தைகளின் பிற்கால வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாய சொற்களையும், சொற்றொடர்களையும் முதலில் முறைப்படி ஒழுங்குபடுத்திக்கொண்டு, அக்குழந்தைகளின் பழக்க வழக்கங்களையே பீடிகையாகக் கொண்டு, இப்புத்தகங்களில் வரும் படம், பயிற்சி, இலக்கணம், கதை, கட்டுரை, நாடகம் யாவும் ஒழுங்குபெற அமைக்கப்பட்டுள்ளன என்பதை அறிஞர்கள் ஒருமுறை மேற்போக்காகக் காணும்போதே நன்கு உணர்ந்து கொள்வர்.

சின்னஞ் சிறுவர்களுடன் பல ஆண்டு கல்வித்துறையில் பழகித்தேர்ந்த அனுபவத்தைக்கொண்டே நவீன வாசகம் என்னும் இந்நூல் வரிசை வெளியிடப்படுகின்றது.

சிறந்த சித்திரங்களுடனும், புதிய பயிற்சி முறைகளுடனும், இனிய இலக்கண பாடங்களுடனும் வெளிவரும் இவ் வாசக புத்தகங்களைக் கற்கும் மாணவர்கள் எடுத்த புத்தகங்களைத் தடுமாற்றமின்றிப் படிப்பர்; புதினத் தாள்கள், மாத சஞ்சிகைகள், துண்டு பிரசுரங்கள் முதலியவைகளைச் சிறிதும் சிரமமின்றி மனதிற்குள் படித்து மகிழ்வர்; நம் முன்னோர்களது சிறந்த காவியங்களையும், நீதி நூல்களையும் தாமே கற்க விழைவர்; எழுத்துப் பிழை, சொற் பிழை, வாக்கியப் பிழை முதலியன இன்றித் தாமே கட்டுரை எழுதும் வன்மையைப் பெறுவர்; ஒற்றுமை, அன்பு அடக்கம், வீரம், தாய்மொழிப் பற்று, தாய்நாட்டுப் பற்று, தியாக குணம், கடவுள் நினைவு முதலிய விழுமிய குணங்களைப் பெற்று நம் நாட்டின் நிலையினை உயர்த்த முந்துவர்.

பாட அமைப்பு, கதைகளின் போக்கு, பாஷை நடை, சொல்லும் முறை முதலியன யாவும் அந்த அந்த வயதிற்குத் தக்கவண்ணம் அமைக்கப்பட்டிருத்தலை அறிஞர்கள் கூர்ந்து நோக்கி, நம் தமிழன்னைக்குப் பாத காணிக்கையாகக் கொணரும் இவ்வாசக வரிசையினை அன்புடன் ஏற்பார்களாக.

சிவ - முத்து

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 FEB 1943
MADRAS

பொருளடக்கம்

எண்	பாடம்	பக்கம்
	என் முதல் வேலை	1
	குறிப்புப் புத்தகம்	2
1.	ஆத்திசூடிப் புலவன்	3
2.	உழவும் கைத்தொழிலும்	9
3.	பொங்கல் விழா (படம்)	15
4.	"எங்களை ஏளனஞ் செய்யாதீர்கள்"	17
5.	மனதிற்குள் படிக்கவேண்டிய அவசியம்	23
6.	பத்திரிகைக் குறிப்புகள்	27
7.	மனந்தடுமாறேல்	31
8.	உனக்கு வெட்கம் இல்லையா?	38
9.	நன்றி மறவேல் (படம்)	44
10.	விளையாட்டால் விளைந்த நன்மை	45
11.	தாயார் எழுதிய கடிதம்	54
12.	மக்களும் மாக்களும்	61
13.	காலத்தை வீணாக்காதே	68
14.	மகன் அளித்த பதில்	75
15.	பிராணிகள் செய்துகொள்ளும் மருத்துவ முறைகள்	80
16.	ஆலயம் தொழுவது சாலவும் நன்று (படம்)	89
17.	செங்கோல் முறைமை	90
18.	காணா நட்பு	95
19.	நீலகிரித் தோதவர்	101
20.	தாயில்லாக் குழந்தைகள் (நாடகம்)	106

எண் பக்கம்

செய்யுள் பகுதி

I.	பரம்பொருள் வாழ்த்து	115
II.	தனிப்பாடல்	116
III.	நீதிப்பாடல்கள்	117
IV.	எங்காளோ	124
V.	கதைப்பாடல்	125
VI.	ஆறு	127
VII.	ஓர் ஏழைச் சிறுவன்	129

என் முதல் வேலை

என் பெயர் :

நான் பிறந்த தேதி :

என் தந்தையார் பெயர் :

எங்கள் ஊரின் பெயர் :

எங்கள் வீட்டின் விலாசம் :

எங்கள் பாடசாலையின் பெயர் :

நான் மேல் வகுப்பு மாறிய நாள் :

நான் இப்புத்தகத்தை வாங்கிய நாள் :

பாட ஆரம்ப நாள் :

குறிப்புப் புத்தகம்

இவைகளை உன் மனதிற்குள் படி. பிறகு விடைகளை உன் குறிப்புப் புத்தகத்தில் எழுது.

1. நீ இந்த ஆண்டு மேல் வகுப்பு மாறி இருக்கின்றாயா ?

2. நீ சென்ற ஆண்டு படித்த தமிழ்ப்பாட புத்தகத்தின் பெயர் என்ன ?

3. அந்தப் புத்தகத்தின் ஆசிரியர் யார் ?

4. நீ அப்புத்தகத்தை என்ன செய்தாய் ?

5. நீ அப்புத்தகத்திலிருந்து சுமார் எத்தனை புதிய பதங்களைத் தெரிந்து கொண்டாய் ?

6 நீ உன் பாட புத்தகங்களைத் தவிர வேறு புத்தகங்கள் படித்ததுண்டா ?

7. நீ எந்த வகுப்பு வரையில் படிக்க விரும்புகின்றாய் ?

8. நீ உன் உடல் நலத்துக்காக என்ன விளையாட்டு விளையாடுகிறாய் ?

9. நீ அன்றாடம் நாட்குறிப்பு எழுதி வருகின்றாயா ?

10. நீ சென்ற விடுமுறை நாட்களை எவ்வாறு கழித்தாய் ?

1. ஆத்திசூடிப் புலவன்

ஓர் ஊரிலே உலகநாதன் என்னும் பெயர் வாய்ந்த ஓர் ஏழைச் சிறுவன் இருந்தான். அவன் இளம் பருவத்திலேயே தன் பெற்றோரை இழந்துவிட்டான். ஆதலால் அவன் பாடசாலைக்குச் சென்று அதிகமாகப் படிக்கவில்லை. அவ்வைப் பிராட்டியார் இயற்றிய ஆத்திசூடி என்னும் ஒரு நூலினையே அவன் கற்றிருந்தான். அந்தப் புத்தகத்தில் உள்ள நூற்றெட்டு நீதி வாக்கியங்களையும் அவன் நன்றாக நெட்டுருச்செய்து வைத்திருந்ததோடு அவைகட்குப் பதவுரை, பொழிப்புரை, விளக்கவுரை யாவும் தெளிவாகக் கூறுவான். அன்றியும் அவன் அச்சிறு நூலில் உள்ள நீதி வாக்கியங்களை வேத வாக்கியங்களாகக் கொண்டு அவைகளில் சொல்லியுள்ள வண்ணமே நடக்க முயன்றதோடு சமயம் நேரும்போதெல்லாம் அவைகளைப் பிறர்க்கும் எடுத்து விளக்குவான்.

அவனிடம் யாரேனும் ஒருவர் வந்து ஒரு சிறிது உரையாடினால் இரண்டொரு நீதி வாக்கியங்களையேனும் தெரிந்துகொள்ளாமற் போகமாட்டார். அவன் பேசும்போதெல்லாம் ஆத்திசூடி வாக்கியங்களையே உதாரணங் காட்டிக் காட்டிப் பேசிவந்ததால் அவ்வூரில் உள்ளோர் அவனை ஆத்திசூடிப் புலவன் என்று அழைக்கத் தொடங்கினர். விளையாட்டாக இட்ட அந்தப் பெயரே பிறகு அவனுக்கு உண்மைப் பெயராக நிலைத்து நின்றுவிட்டது.

உலகநாதன் பெரியவன் ஆனன். "பூமி திருத்தியுண்" என்று அவ்வையார் கூறியுள்ளதைக் கடைப்பிடித்து உழுதுண்டு வாழ்வதே சிறந்ததென்று அவன் உழவுத் தொழிலினை மேற்கொண்டான். உலகநாதன் பருவத்தே பயிர்செய்து ஊக்கத்தோடு உழைத்து வந்தமையால் அவனுக்கு நாளடைவில் பொருளும் சேரலாயிற்று. அவன் அப்பொருளினை வீணில் செலவிடாமல் போற்றிவந்ததோடு அறஞ்செய்யும் விருப்பம் உடையவனுய் இயல்வது கரவாமல் ஐயமிட்டு உண்டு கிழமைப்பட வாழ்ந்து வந்தான்.

உலகநாதன் திறமையைக்கண்டு மனம்பொருத ஒரு கயவன், அவன் படித்த ஆத்திசூடியைக் கொண்டே அவனை ஏமாற்றிப் பொருள் பறிக்க எண்ணி ஒரு நாள் அவன் வீட்டை அடைந்தான்.

கயவன்: ஐயா, ஆத்திசூடிப் புலவரே, வணக்கம்; அவ்வையார் இயற்றியுள்ள நீதிநூலின்படியே தாங்கள் நடப்பதாகக் கேள்விப்பட்டு நானும் அங்ஙனமே நடக்க முயன்று வருகின்றேன். நான் ஏறக்குறைய எல்லா விஷயங்களிலும் ஆத்திசூடியில் சொல்லியுள்ள வண்ணமே மிகவும் கருத்துடன் நடந்து வருகின்றேன். என் கையில் போதிய பணம் இன்மையால் சில நீதிவாக்கியப்படி என்னல் நடக்க இயலவில்லை. நம் அவ்வைப் பிராட்டியார் "இலவம் பஞ்சில் துயில்" என்று சொல்லியிருந்தும் நான் கோரைப்பாயில் நித்திரை செய்கின்றேன். இயல்வது கரவாதவராகிய தாங்கள் தங்கள் தோட்டத்தில் உள்ள இலவம் பஞ்சினை எனக்குத் தந்து உதவிபுரியும்படி நான் தங்களைப் பெரிதும் கேட்டுக்கொள்கின்றேன்.

அந்தக் கயவனுடைய வஞ்சக எண்ணத்தை உலக நாதன் அவன் முகக் குறிப்பால் உணர்ந்துகொண்டான். அவனுக்கு அப்போது கோபம் வந்தது. "ஆறுவது சினம்" என அவ்வையார் கூறியிருத்தலால், அவன் அந்தக் கோபத்தை உடனே ஆற்றிக்கொண்டு ஞயம்பட உரைத்து அந்தக் கயவனை நல்வழிப் படுத்தவேண்டும் என்று எண்ணினன்.

உலகநாதன்: ஐயா, அவ்வையார் "ஏற்பது இகழ்ச்சி" என்று சொல்லி இருப்பதை நீர் கவனிக்கவில்லையா? ஆத்திசூடியின்படி நடக்க எண்ணும் நீர் பிறர்பொருளை யாசித்து வாழ எண்ணலாமா? உமக்கு இயல்பல்லாத தும், மிகவும் கீழ்மையானதுமாகிய யாசிக்கும் தொழிலினை நீர் இன்று முதல் விட்டொழித்துச் சோம்பித் திரியாது ஊக்கமது கொண்டு உழைத்துப் பொருள்தனைப்போற்றி வாழ்வீராக.

இவ்வாறு உலகநாதன் உரைத்ததைக்கேட்டு அந்தக் கயவன் வெட்கித் தலைகுனிந்து சென்றான்.

வேறொரு நாள் உலகநாதன், தனக்கு உடல் நல மின்மையால் கம்பளத்தைப் போர்த்துக்கொண்டு படுத் திருந்தான். அப்போது ஒரு குதர்க்கவாதி அங்கே வந்து உலகநாதனைப் பார்த்து, "ஐயா, அவ்வையார் 'நோய்க்கு இடங்கொடேல்' என்று கூறியிருக்க நீர் அந்த நோய்க்கு இடங்கொடுத்துக்கொண்டு பாயும் படுக்கையுமாய் இருக்க லாமா?" என வினவினன்.

உடனே உலகநாதன், "நான் நோயினை வளர்த்துத் துன்பத்துக்கு இடங்கொடாமல் இருப்பதற்காகவே இந்தக்

கம்பளியினைப் போர்த்துக் கொண்டு இருக்கின்றேன். இவ்விதம் செய்வது நமது தொன்மையான முறை. நாம் செய்யவேண்டுவனவற்றைக் காலம் அறிந்து சரியாகச் செய்யாவிட்டால் மாற்றானுக்கு இடங்கொடுத்தவராகவே ஆவோம்'' என்றான்.

உலகநாதன் அந்த ஆத்திசூடி என்னும் ஒரு சிறு நூலைப்படித்தே பெரிய அறிவாளியாக விளங்கினான் என்பதை நாம் இதனால் உணர்ந்து கொள்ளலாம். ஓதுவது ஒழியாது பல நூல்களையும் கற்கும் மாணவர்கள், படித்த விஷயங்களைச் சிறிதும் மறவாமல் மனதில் இருத்திப் படித்தபடியே நடக்கவும் முயன்றால் எவ்வளவு பேரும் புகழும் பெறலாம்! மாணவர்களே, நீங்கள் இன்று முதலேனும் நம் உலகநாதனைப்போல் கற்ற வண்ணம் நடக்க முயலுங்கள்.

அரும்பதம் :

பிராட்டி	திறமை	யாசித்தல்
வண்ணம்	கயவன்	தொன்மை
காத்தல்	ஏற்பது	மாற்றான்

அருந்தொடர் :

நெட்டுரு	பேரும் புகழும்	வேத வாக்கியம்
குதர்க்கவாதி	முகக் குறிப்பு	பாயும் படுக்கையும்

வினா :

1. ஆத்திசூடியின் ஆசிரியர் யார்?
2. பதவுரை, பொழிப்புரை — வித்தியாசம் கூறு.

3. இலவம் பஞ்சினைக் கேட்ட கயவனுக்கு உலக நாதன் எவ்விதம் நன்மதி புகட்டினான்?
4. 'நோய்க்கு இடங்கொடேல்' என்பதற்குப்பொருள் என்ன?
5. உலகநாதன் கற்றவண்ணம் நடந்ததற்கு ஓர் உதாரணம் கூறு.

பயிற்சி :

1. 'அறஞ்செய விரும்பு' — இதற்குப் பதவுரையும் பொழிப்புரையும் எழுது.
2. இந்தப் பாடத்தில் வரும் ஆத்திசூடி நீதி வாக்கியங்களை எடுத்து எழுது.
3. ஐயம் — இதற்கு இரு பொருள் எழுது.
4. பாயும் படுக்கையும், பேரும் புகழும் — இவைகளை ஒவ்வோர் வாக்கியத்தில் அமைத்து எழுது.

இலக்கணம் :

I. எழுத்து, பதம், தொடர், வாக்கியம் இவைகளை நீங்கள் ஐந்தாம் வகுப்பிலே கற்றிருக்கிறீர்கள்.

புத்தகம், சிறுவன் — இவை பதங்கள்.

பதத்திற்குக் காரணமாக இருப்பவை எழுத்துக்கள்.

பு, த், த, க, ம் சி, று, வ, ன்	இவை எழுத்துக்கள்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதங்களைத் 'தொடர்' என்று சொல்ல வேண்டும்.

ஏழைச் சிறுவன் சிறு புத்தகம்	இவை தொடர்கள்.

எழுவாய், பயனிலை முதலியன பெற்று வரும் தொடர்களுக்கு 'வாக்கியம்' என்று பெயர்.

1. ஒரு சிறுவன் இருந்தான்.

சிறுவன் — எழுவாய்; இருந்தான் — பயனிலை.

2. உலகநாதன் ஆத்திசூடி படித்தான்.

உலகநாதன் — எழுவாய்; படித்தான் — பயனிலை; ஆத்திசூடி — செயப்படு பொருள்.

ஆதலின் இவை இரண்டும் வாக்கியங்கள்.

II. வாய்மொழிப் பயிற்சி :



இந்தப் படத்தைப் பார்த்து நான்கு பதங்களும், மூன்று வாக்கியங்களும் சொல்லு.



2. உழவும் கைத்தொழிலும்

நம்முடைய நாட்டிலே உழவும் கைத்தொழிலுமே மிகவும் தாழ்வான நிலையில் இருக்கின்றன. கல்வியில் வல்லவர்கள் இவ்விரண்டினையும் புறக்கணித்து உத்தியோகத்திற்குச் செல்கின்றார்கள். ஆதலால் உழவுத்தொழிலும், கைத்தொழிலும் கல்வியற்றவர் கையில் சிக்குண்டு மிகவும் தாழ்ந்த நிலையை அடைந்துவிட்டன.

அயல்நாடுகளில் உள்ள உழவர்களும், தொழிலாளர்களும் படித்தவர்களாக இருக்கின்றமையால் காலத்திற்கு ஏற்ற வண்ணம் அவர்கள் புதுப்புது யந்திரங்களைக் கொண்டு தொழில்செய்து ஊதியம் மிகுதியாகப் பெற்றுப் பெருமையோடு வாழ்கின்றார்கள். நம்மவர்கள் நிலையோ மிகவும் பரிதபிக்கத் தக்கதாக இருக்கின்றது.

நம் நாட்டு உழவன் மகன் தன் தந்தையின் தொழிலைப் பிறரிடம் சொல்லவும் நாணமடைகின்றான். நம் நாட்டுப் புலவர்கள் எல்லாம் உழவுத் தொழிலையே மிகுதியும் பாராட்டிக் கூறியுள்ளார்கள். "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்றும், "தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது" என்றும், "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்றும் வழங்கும் முதுமொழிகளே இதற்குச் சான்று பகரும். நம் நாட்டு அரசர்கள்கூட ஏர்பிடித்து உழுததாகக் கதைகள் வழங்குகின்றன.



நம் நாட்டுப் புலவர்களுள் பலர் உழவுத்தொழிலையும், கைத்தொழிலையுமே மேற்கொண்டு வாழ்ந்தனர். கம்பர் சிறு வயதில் உழவுத்தொழிலில் ஈடுபட்டு இருந்ததால்தான் அவர் பெரிய புலவராக அரச சபையில் இருந்தபோதும்

"ஏர் எழுபது" என்னும் நூலை இயற்றி உழவுத்தொழிலைச் சிறப்பித்துக் கூறினர். திருவள்ளுவர் நெசவுத் தொழிலைச்செய்து வாழ்ந்தனர். நக்கீரர் என்னும் புலவர் சங்கு வளையல் செய்து விற்கும் குலத்திற் பிறந்தவர் என்பர்.

மாணவர்களே, நீங்கள் பெரியோர்களானல் என்ன தொழில் புரிந்து வாழப்போகிறீர்கள்? நம் நாடும் பிறநாடுகளைப்போல் மேல் நிலையை அடையவேண்டாமா? கற்றவர்களாகிய நீங்கள் உழவுத்தொழிலையும், கைத்தொழிலையும் கடைப்பிடித்தால் நம் நாட்டில் புதிய யந்திரங்களும், யந்திரங்களைச் செய்யும் தொழிற்சாலைகளும் அதிகமாகும்; உழவுத்தொழிலைக் குறித்த புத்தகங்களும், கைத்தொழிலைக் குறித்த புத்தகங்களும் அதிகமாகும்.

மாணவர்களே, உழவு கைத்தொழில் ஆகிய இவைகள் நம் நாட்டிலும், அயல் நாடுகளிலும் நடைபெறும் முறைகளை விளக்கும் படங்கள் இங்கே அச்சிடப்பட்டுள்ளன. அவைகளை நீங்கள் ஒப்பிட்டுப் பாருங்கள். அயல் நாடுகளில் ஏர் உழவும், விதை விதைக்கவும், களையெடுக்கவும், கதிர் அறுக்கவும், நெல் குவிக்கவும் யந்திரங்கள் வேலை செய்கின்றன. நம் நாட்டு உழவும், கைத்தொழிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலையிலேயே இன்றும் இருக்கின்றன. இந்த இழிவான நிலையினை நீங்கள் போக்க முயலுதல் வேண்டும். பாடசாலை மாணவர்கள், தங்கள் கல்வியை முடித்துக்கொண்டவுடன் தற்போது அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள விவசாயக் கல்லூரிக்கும், தொழிற் கல்லூரிக்கும் சென்று பயின்று அவ்வப்பரீட்சைகளில் தேறி நம் நாட்டு உழவுத்

தொழிலையும், கைத்தொழிலையும் விருத்தி செய்ய முயன்றால் அவர்களும் சீரும் செல்வமும் பெற்று வாழ்வதோடு, அவர்களால் நம் நாட்டுக்கும் பேரும் புகழும் உண்டாகும்.

அரும்பதம் :

ஊதியம்	பகர்தல்	கல்லூரி
புறக்கணி	இயற்றல்	பயிலல்
சான்று	புரிதல்	கடைப்பிடி

அருந்தொடர் :

முதுமொழி சீரும் செல்வமும்

வினு :

1. நமது நாட்டில் உழவும் கைத்தொழிலும் எத்தகைய நிலையில் இருக்கின்றன? காரணம் என்ன?
2. உழவர்களும், தொழிலாளர்களும் படித்தவர்களாக இருத்தல் வேண்டும். — ஏன்?
3. நம் நாட்டுப் புலவர்கள் உழவுத்தொழிலை எவ்வெவ்வாறு பாராட்டிக் கூறுகின்றனர்?
4. அரசர்கள் கூட ஏர் பிடித்து உழுததாகக் கதைகள் வழங்குகின்றன. — இதற்கு ஓர் உதாரணம் சொல்.
5. நம் நாட்டுப் புலவர்களுள் பலர் உழவுத்தொழிலையும், கைத்தொழிலையுமே மேற்கொண்டு வாழ்ந்து வந்தனர் என்பதற்கு ஒவ்வோர் உதாரணம் கூறு.
6. "ஏர் எழுபது" — இதைப் பாடியவர் யார்?
7. திருவள்ளுவர் — இவரைக் குறித்து உனக்கு என்ன தெரியும்?

பயிற்சி :

I. கோடிட்டுள்ள இடங்களில் ஏற்ற பதங்களை அமைத்து எழுது.

(1) "சீரைத்தேடின் ஏரைத்தேடு" என்னும் முதுமொழியே ________________ என்பதைத் தெரிவிக்கும்.

(2) நக்கீரர் என்னும் புலவர் ____________ குலத்திற் பிறந்தவர் என்பர்.

(3) பாடசாலை மாணவர்கள் தங்கள் கல்வியை முடித்துக் கொண்டவுடன் ________________

II. இப்பாடத்தில் தரப்பட்டுள்ள படங்களைப் பார்த்து உழவும் கைத்தொழிலும் நம்நாட்டில் உள்ள நிலையைக் குறித்தும் அயல் நாட்டில் உள்ள நிலையைக் குறித்தும் இரண்டிரண்டு வாக்கியங்கள் எழுது.

III. சான்று, ஊதியம், கடைப்பிடி — இவைகளின் பொருள் விளங்கும்படி ஒவ்வொன்றையும் ஒவ்வோர் வாக்கியத்தில் அமைத்து எழுது.

இலக்கணம் :

I. வாக்கியம் என்பது பொருள் முடிந்து எழுவாய் பயனிலைகளோடு கூடியிருக்கும் என்பது உங்களுக்குத் தெரியும்.

கீழே வருபவைகளுள் இவை வாக்கியங்கள், இவை வாக்கியங்கள் அல்ல என்பதைக் காரணங்களுடன் விளக்கு.

1. அரசர்கள் கூட ஏர் பிடித்து உழுதனர்.
2. அயல் நாடுகளில் உள்ள உழவர்கள்
3. கதைகள் வழங்குகின்றன.
4. இந்த இழிவான நிலையினை
5. பேரும் புகழும் உண்டாகும்.

II. முற்றுப் புள்ளி வாக்கிய முடிவைக் காட்டும்; கேள்விக் குறி வினாவைத் தெரிவிக்கும்; 'காமா' என்னும் காற்புள்ளி நிறுத்த வேண்டிய அளவைத் தெரிவிக்கும் என நீங்கள் ஐந்தாம் வகுப்பிலேயே கற்றிருக்கிறீர்கள். அடியில் வருபவைகளுக்குத் தக்க இடங்களில் தக்க குறிகளை அமைத்துக்காட்டு.

1. நீங்கள் என்ன தொழில் புரிந்து வாழப் போகிறீர்கள்
2. இந்தப் படங்களை ஒப்பிட்டுப் பாருங்கள் உண்மை வெளியாகும்
3. ஏர் உழவும் விதை விதைக்கவும் கதிர் அறுக்கவும் யந்திரங்கள் வேலை செய்கின்றன

III. இந்தப் பாடத்திலிருந்து ஐந்து பெயர்ச் சொற்களையும் ஐந்து வினைச்சொற்களையும் எடுத்து எழுது.

IV. **வாய்மொழிப் பயிற்சி:**



1. இதன் பெயர் என்ன?
2. இது மனிதர்க்கு எவ்வெவ்வாறு பயன்படுகிறது?

விடை வாக்கியங்களாகவே இருத்தல் வேண்டும்.

3. பொங்கல் விழா



I. கட்டுரை: மேலேயுள்ள படங்களைப் பார். கீழே தரப்பட்டுள்ள பதங்களையும் தொடர்களையும் உபயோகித்துச் சில வாக்கியங்கள் எழுது.

1. போகி, 2. பெரும் பொங்கல், 3. மாட்டுப் பொங்கல், 4. காணும் பொங்கல், 5. பறை யடித்தல், 6. பொங்கலோ பொங்கல், 7. உழவர்கள், 8. மாடு - கன்று, 9. வேலையாட்கள், 10. பரிசு வழங்குதல்.

II. வாய்மொழிப் பயிற்சி :

(விடைகள் யாவும் வாக்கியங்களாக இருத்தல் வேண்டும்.)

வினு :

1. முதல் படம் எந்தப் பண்டிகையைக் குறிக்கிறது?
2. முதல் படத்தில் உள்ள சிறுவர்கள் என்ன செய்கிருர்கள்?
3. நீ போகி பண்டிகை கொண்டாடுவதுண்டா? எவ்விதம் கொண்டாடுகிருய்?
4. இரண்டாவது படம் என்ன பண்டிகையைத் தெரிவிக்கிறது?
5. இரண்டாவது படத்தில் யார்யார் என்ன என்ன செய்கிருர்கள்?
6. உங்கள் வீட்டினர் பொங்கல் பண்டிகை கொண்டாடுவதுண்டா? அவர்கள் எவ்விதம் கொண்டாடுகிருர்கள்?
7. மூன்ருவது படம் எந்தப் பண்டிகையைக் குறிக்கின்றது?
8. மூன்ருவது படத்தில் நீ என்னென்ன காண்கின்ருய்?
9. நான்காவது படத்தில் யார் யார் என்ன என்ன செய்கிருர்கள்?
10. காணும் பொங்கல் என்ருல் என்ன?



4. "எங்களை ஏளனஞ் செய்யாதீர்கள்"

குட்டிக் கழுதை: அம்மா, இந்த மானிடச் சிறுவர்கள் நம்மைப் பார்த்துப் பார்த்து நகைக்கின்றூர்களே! சுட்டிக் காட்டித் தமக்குள் ஏதேதோ பேசிக் கொள்கின்றூர்களே! கைகொட்டி ஏளனமுஞ் செய்கின்றூர்களே! ஏன் அம்மா?

தாய்க் கழுதை: குழந்தையே, நாம் பார்ப்பதற்கு விகாரமாகத் தோன்றுகின்றேமாம். நாம் என் செய்வது! நம்மைக் கடவுள் இவ்விதம் படைத்துவிட்டார்!

குட்டி: அம்மா, நாம் விகாரமாகவா தோன்றுகின்றேம்! அவ்விதம் சிறிதும் இல்லையே! நம்முடைய நாசி யானையின் நாசியைப்போல் நீண்டு தொங்குகின்றதா? நம் பிடரி மயிர் சிங்கத்தின் பிடரி மயிர் போல் நீண்டு அலங் கோலமாக இருக்கின்றதா? நம் தலை ஆட்டின் தலை

யைப்போல் சிறுத்து இருக்கின்றதா? அவர்கள் நம்மை ஏன் வீணே ஏளனம் செய்யவேண்டும்?

தாய்: குழந்தாய், நம்முடைய உருவம் மட்டும் அன்று; நம் நிறமும் அவர்கள் மனதிற்குப் பிடிக்கவில்லையாம்.

குட்டி: அப்படியா! நம்முடைய நிறத்துக்கு என்ன குறை? நல்ல அழகான நிறந்தானே! நாம் பசுவைப் போல் நரைத்த உரோமங்களைப் பெற்றிருக்கின்றோமா? குதிரைக்கு இருப்பதுபோல் நமக்குச் செம்பட்டை மயிர் இருக்கின்றதா? அல்லது கன்னங்கறேல் என்று தோன்றும் கரடியைப்போல் நாம் இருக்கின்றோமா? சாம்பல் நிறம் மிகவும் சாந்தமான நிறமாயிற்றே! அந்த மானிடர்களே இந்த நிறங்கலந்த சட்டையைத் தைத்துப் பெருமையோடு தரித்துக் கொள்ளுகின்றார்களே!

தாய்: குழந்தையே, மானிடர்கள் நம்மைக்காட்டிலும் அறிவாளிகள். அவர்கள் நம்மை வெறுப்பதற்கு வேறு சில காரணங்களும் இருக்கின்றன. அவைகளுள் முக்கியமானது நம்முடைய குரல்.

குட்டி: நம்முடைய குரல் அவர்கள் காதுகளுக்கு விருப்பமாக இல்லையா? அதற்கு நாம் என் செய்வது? அது அவர்கள் காதின் குற்றம். சிறிய காதுகளையுடைய அவர்கட்கு நம் இசையின் இனிமை எவ்விதம் புலனாகும்? நாம் சிங்கத்தைப் போன்று வாயை மூடிக்கொண்டு உறுமுகின்றோமா? அல்லது நரியைப்போல் ஊளையிடுகின்றோமா? 'வள் - வள்' என்று குரைக்கும் நாயை அந்த மானிடர்கள் மடியில் வைத்துக் கொஞ்சுகின்றார்களே!

இவை கிடக்கட்டும்; இவர்கள் வாயையும் கழுத்தையும் வளைத்துக்கொண்டு கோணல்கோணலாகக் கத்தி அதற்கு இன்னிசை என்று பெயர் சொல்லி மகிழ்கின்றார்களே! அது எவ்வாறு பொருந்தும்?

தாய்: என் அருமைக் குழந்தையே, நீ மானிடர்மீது சிறிதும் குறை கூறவேண்டாம். அவர்கள் என்ன செய்வார்கள்? நம் அறிவு, குணம், செயல் இம் மூன்றில் ஒன்றாவது அவர்கள் மனதிற்குப் பிடித்தால்தானே!

குட்டி: அம்மா, நான் இது வரையில் மனம் பொறுத்துத் தங்கள் சந்தேகங்களை யெல்லாம் தீர்க்க முயன்றேன். இனி என்னால் சிறிதும் பொறுக்க இயலாது. வேறு எந்தக் குறைகளையேனும் மானிடர் கூறிக்கொள்ளலாம். அவர்கள் நம் அறிவைக் குறை கூறவே முடியாது. நாம் அந்த அறிவற்ற பசுவைப்போல் உலர்ந்த வைக்கோலைத் தின்று கழிநீரைக் குடித்து மகிழ்கின்றோமா? அல்லது ஆட்டைப் போல் கண்ட இலைகளையும், தழைகளையும் மேய்கின்றோமா! பச்சைப் பசேலெனத் திகழும் பசும்புல்லையும், சுத்தமான நீரையும் அல்லவா நாம் உணவாகக் கொள்கின்றோம்! குணத்தில்தான் என்ன குறை? நாம் புலியைப் போல் மூர்க்க குணம் உடையவர்களா? பூனையைப்போல் திருட்டுக் குணம் உடையவர்களா? பழிக்குப் பழி வாங்கும் யானையைப்போல் வஞ்சகர்களா? பசுவைப்போல் கபடர்களா? நாம் நம் எஜமானனிடம் எவ்வளவு விசுவாசமாக இருக்கின்றோம்! அவனுக்காக நாம் அல்லும் பகலும் வருந்தி உழைக்கின்றோம். இன்னும் என்ன வேண்டும்? — ஆனால் ஒரே ஒரு குறை உண்டு. நம்முடைய செயலில்

மட்டும் குறை இருக்கிறது. நாம் அடிமை வாழ்வு வாழ்கின்றோம்; அவன் காலாலிடும் வேலைகளைத் தலையால் செய்கின்றோம். அம்மா, இன்னும் என்னல் பொறுத்திருக்க இயலாது. உடனே புறப்படுங்கள். நாமும் அந்த மூர்க்கப் பிராணிகளைப்போல் அவர்களை முட்டித் தள்ளலாம்.

தாய்: குழந்தாய், மனம் பதறவேண்டாம். எவர் நம்மை ஏளனம் செய்தாலும், நம் எஜமானனும், எஜமானியும் நம்மிடம் ஆசையாகத்தான் இருக்கின்றார்கள். மானிடர்கள் நம் அறிவு குணம் செயல்களை நினைத்துப் பார்த்து நமக்கும் மரியாதை புரியும் காலம் என்றேனும் வரலாம். யார் அறிவார்? என் கண்ணே, அந்தக் காலம் வரும்வரையில் நீ சிறிது மனம் பொறுத்து நம் குலத்தின் பெருமையைக் காப்பாற்றிக்கொள்.

குட்டி: அம்மா, அவ்விதமே செய்கின்றேன். — அறிவின் மிக்க மானிடர்களே, நீங்கள் தயை செய்து எங்களை ஏளனம் செய்யாதீர்கள். — கடவுளே, பிற மிருகங்களைப் போல் நாங்களும் பெருமையோடு வாழத் தாங்கள் அருள் செய்யுங்கள்.

அரும்பதம்:

ஏளனம்	உருமுதல்	கபடம்
பிடரி	கழிநீர்	வஞ்சகம்

அருந்தொடர்:

சுட்டிக்காட்டு	அல்லும் பகலும்
புலனுகும்	பச்சைப் பசேல்

வினா :

1. பசுவுக்கும், கழுதைக்கும் உருவ அமைப்பில் உள்ள வித்தியாசங்களில் மூன்று சொல்.
2. மானிடர் கழுதையை வெறுப்பதற்கு முக்கியமான காரணம் என்ன ?
3. எந்த வகையில் கழுதை பசுவைக் காட்டிலும் சிறந்தது ?
4. நாம் கழுதையை ஏளனம் செய்யலாமா? காரணமும் கூறு.
5. தாய் தன் குட்டிக்கு உரைத்த நன்மதி யாது ?

பயிற்சி :

1. எஜமானன் — இதற்குப் பெண்பால் எழுது.
2. பசுவின் கன்று மானிடர்மீது என்னென்ன குறை கூறலாம்? சில வரிகள் எழுது.
3. பச்சைப் பசேல் — இது போன்ற இன்னொரு தொடர் எழுது.
4. இன்னிசை, பசும்புல் — இவைகளைப் பிரித்து எழுது.
5. அல்லும் பகலும் — இதனை ஒரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

இலக்கணம் :

I. நீ, போ, வா — இவை ஓர் எழுத்துப் பதங்கள்.
நாம், தாய், யானை — இவை இரண்டெழுத்துப் பதங்கள்.
குட்டி, குதிரை, பிடரி — இவை மூன்றெழுத்துக்கள் கொண்ட பதங்கள்.

நான்கெழுத்துக்கள் கொண்ட பதங்கள் மூன்று சொல்.

II. பதங்களில் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச்சொல் என நான்கு வகைச் சொற்கள் உண்டு என நீங் கள் முன்பே கற்றிருக்கிறீர்கள்.

கீழே தடித்த எழுத்தில் உள்ளவை இன்ன பதங்கள் என எழுது.

1. நமது பிடரி மயிர் சிங்கத்தின் பிடரி மயிர் போல் இருக் கிறதா?
2. நாம் அல்லும் பகலும் உழைக்கின்றோம்.
3. எஜமானன் நம்மிடம் ஆசையாக இருக்கிறான்.

III. கேள்விக் குறி, காமா — இவை வரும்படி இரண்டு வாக்கியங்கள் எழுது.

IV. கட்டுரைப் பயிற்சி:



இந்தப் படங்களைக் கவனித்துப் பார்; இவைகளைக் கொண்டு பத்து வரிக்குள் ஒரு கதை எழுது.

5. மனதிற்குள் படிக்கவேண்டிய அவசியம்

ஒரு நாள் மாலை, சுமார் ஐந்து மணி இருக்கும். அப்போது ஒருவன் தன்னந்தனியே வேகமாக ஒரு பெரிய தெருவின் வழியாகச் சென்று கொண்டிருந்தான். அவன் நடை உடைகளைக் கவனிக்கும்போது அவன் ஒரு நாகரிகமுள்ள மனிதனாகவே காணப்பட்டான். அவ்விதம் இருந்தும் அவன் ஏதோ தனக்குத்தானே பேசிக்கொண்டே சென்றான். அவன் பேசிக்கொண்டு சென்ற விஷயங்கள் கீழ் வருவன ஆகும்.

"என்ன ஐயா, ஒரு நாளா — இரண்டு நாளா — எத்தனை நாள் நடப்பது?"

"வாங்கும்போது இருந்த கவலை கொடுக்கும்போது இருக்கவேண்டாமா?"

"அவள் அப்பொழுதே வேண்டாம் - வேண்டாம் என்று தலைப்பாடாகக் கூறினாள்."

"நான் புத்தி கெட்டுக் கொடுத்துவிட்டேன்; இப்போது அலைகின்றேன்."

மாணவர்களே, இவ்விதம் பலர் தமக்குத் தாமே பேசிக் கொள்வதை நீங்கள் பலமுறை கவனித்திருக்கலாம். இதற்குக் காரணம் என்ன? மனதில் நினைக்கவேண்டிய விஷயங்களை யெல்லாம் இவர்கள் வாயினால் சொல்லிக்கொண்டே செல்வதுதான் காரணம். இதனால் எத்தனை விஷயங்கள் பலர்க்கும் தெரிந்து விடுகின்றன? இவர்களால் எதையும் மனதிற்குள் நினைத்துப் பார்க்க முடிவதில்லை. வாய்விட்டுச்

சொல்லிக் கொண்டால்தான் அவ்விஷயங்கள் இவர்களுக்கு நன்ருக விளங்கும். சிலர் தமக்குள் முணுமுணுத்துக் கொள்வதற்கும் இதுவே காரணம். இத்தகைய அநாகரிகமான பழக்கங்களை நாம் முற்றிலும் ஒழித்து விடவேண்டும்.

இவ்விதமே சிலர்க்கு எத்தகைய இரகசியமான கடிதங்களையும் மனதிற்குள் படித்துக்கொள்ள முடிவதேயில்லை. மனதிற்குள் படித்துக்கொள்ளும் பழக்கம் இல்லாதவர்களே, குடிகாரர்களைப்போல் தமக்குத் தாமே பேசிக் கொள்ளவும் முயல்கின்ருர்கள். ஆதலால் நீங்கள் மாணவர்களாய் இருக்கும்போதே மனதிற்குள் படிக்கப் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

நாம் ஒரு நூல் நிலயத்திற்குச் சென்று படிக்க எண்ணும்போது அங்கே நம்மைப்போல் பலர் வந்து யாதேனும் ஒரு புத்தகத்தையோ அன்றிப் பத்திரிகையையோ எடுத்துப் படிக்க விரும்புகின்ருர்கள். அங்குள்ள எல்லோரும் வாய் விட்டுப் படிக்க ஆரம்பித்தால் அப்போது அவ்விடம் எவ்விதம் காணப்படும் என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள். ஒருவர் படிக்கும் விஷயம் மற்றவர் காதுகளில் விழுவதால் எவராலும் எந்த விஷயத்தையும் கருத்தூன்றிப் படிக்க இயலாது. இவ்விதமே உத்தியோக சாலையிலும் எந்த விஷயமும் கவனிக்க இயலாமற் போய்விடும். பாடசாலையில்கூட மாணவர் அனைவரும் ஒரே சமயத்தில் வாய் விட்டுப் படிக்க ஆரம்பித்தால் அது எவ்வாறு இருக்கும் என்பதை நான் உங்களுக்கு விளக்கிச் சொல்லவேண்டியதில்லை.

மனதிற்குள் படிப்பது என்பது ஒரு புதிய முறை அன்று. நாகரிகம் வாய்ந்த மக்கள் பலராலும் நெடுங்காலமாகக் கையாளப்பட்டு வரும் ஒரு பழைய பழக்கமேயாகும். மனதிற்குள் படிக்கும் பழக்கம் இருந்தால் நாம் எதனையும் மிக வேகமாகப் படிக்கலாம். இதனால் நமக்குக் காலமும் கூடி வருகிறது. மனதிற்குள் படிப்பதால் கருத்தூன்றிப் படிக்கும் பழக்கமும் அதிகப்படுகின்றது. பெரிய ஞானியாக விளங்கிய சுவாமி விவேகானந்தர் என்பவர் எத்தகைய பெரிய புத்தகங்களையும் மிக வேகமாகவும்,கருத்தூன்றியும் மனதிற்குள் படித்து முடித்துவிடுவாராம். அவர் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய இடங்களுக்கெல்லாம் சென்று பல அரிய சொற்பொழிவுகள் ஆற்றிப் பேரும் புகழும் எடுத்ததற்கு இதுவும் ஒரு காரணமே யாகும். ஆதலால் மாணவர்களே, நீங்களும் மனதிற்குள் படிக்கும் பழக்கத்தை இளமையிலிருந்தே விருத்தி செய்ய முயலுங்கள்.

அரும்பதம் :

நாகரிகம் தலைப்பாடு

அருந்தொடர் :

தன்னந்தனியே முணுமுணுத்தல்

வினா :

1. நாகரிகம் என்றால் என்ன ?
2. அந்த மனிதன் எதற்காகப் பலமுறை நடந்து அலைந்தான் ? — நினைத்துப் பார்த்து எழுது.
3. முணுமுணுத்தல் என்றால் என்ன ?

4. மனதிற்குள் படிப்பதால் உண்டாகும் நன்மைகள் யாவை?

5. சுவாமி விவேகானந்தர் — இவரைக் குறித்து நீ அறிந்ததை எழுது.

6. சுவாமி விவேகானந்தரிடம் இருந்த நல்ல பழக்கம் என்ன?

7. அமெரிக்கா, இங்கிலாந்து — இவைகளை நீ பூகோள படத்தில் காட்டுவாயா?

பயிற்சி :

1. எழுத்து, பதம், தொடர், வாக்கியம் — இவைகட்கு ஒவ்வோர் உதாரணம் எழுது.

2. தொழிற்பெயர், இடப்பெயர் — இவைகட்கு இப்பாடத்திலிருந்து ஒவ்வோர் உதாரணம் எழுது.

3. கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதிக்குத் தக்க இடத்திலே தக்க நிறுத்துக் குறிகளை இடுக.

நூல் நிலயத்தில் பலவகைப் புத்தகங்கள் இருக்கும் கதை சரித்திரம் கட்டுரை முதலிய பலவகைப் புத்தகங்களையும் நாம் அங்கே காணலாம் அல்லவா நூல் நிலயத்தில் மனதிற்குள் படிப்பதே நலம்

4. இந்தப் பாடத்தின் துவக்கத்தில் காணும் பகுதிக்கு என்ன தலைக் குறிப்பு இடலாம்?

5. இந்தப் பாடத்தை ஒரு முறை வாய்விட்டுப் படி; பிறகு மனதிற்குள் படி; இவை இரண்டிற்கும் நேர்ந்த கால அளவுகளை வேறு வேறு எழுது.

6. பத்திரிகைக் குறிப்புகள்

கீழ் வருபவை **தமிழரசு** என்னும் வாரப் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டவை. இவைகளை மனதிற்குள் படி.

20-1-1930

1. **எலுமிச்சம் பழம் :**

எலுமிச்சம் பழச் சாற்றையும், நல்ல தேனையும் சமமாகக் கலந்து வைத்துக்கொண்டு, அதில் அரை அவுன்ஸ் எடுத்துக் கொஞ்சம் தண்ணீர் சேர்த்து, மூன்று மணி நேரத்துக்கு ஒரு முறை உட்கொண்டுவரின் முறைக் காய்ச்சல், குளிர்ஜுரம், பித்தஜுரம், கபஜுரம் இவை நீங்கும்.

எலுமிச்சம் பழச்சாற்றுடன் உளுந்து மாவினைக் குழைத்துக் கால் விரல்களுக்கு இடையில் காணும் சேற்றுப் புண்களுக்குப் பூசப் புண் ஆறிவிடும்.

13-3-1930

2. **விநோதம் :**

சென்னையிலே சிறிது காலத்துக்கு முன்பு இருந்த **பூண்டி-அரங்கநாத முதலியார்**, எம். எ. அவர்களைக் கற்றோர் அனைவரும் அறிவர். அவர் ஆங்கிலப் புலமையோடு செந்தமிழ்ப் புலமையும், சாதுரியமாகப் பேசும் திறமையும் வாய்ந்தவர். அப்பெரியாரிடம் ஒரு நாள் நண்பர் ஒருவர் வந்து, "புதிதாக மிருகக்காட்சிச் சாலையில் வந்திருக்கும் 'கல்லானை' காண்போம் வருகிறீர்களா ?" என அழைத்தார். அதற்கு முதலியார் உடனே, "கல்லானைக் காண்பதற்கா என்னை அழைக்கிறீர்கள் ? கற்றானை எனக்குக் காட்டலாகாதா ?"

எனக்கூறி நகைத்தனர். கல்லானை என்னும் சொல் கல் ஆனை என்றும், கல்வி கற்காதவனை என்றும் இரு பொருள் படுதல் காண்க.

20-3-1930

3. கொசு - கொசு - கொசு :

கொசு மலேரியாவைப் பரவச்செய்யும்; தூக்கத்தைப் பங்கப்படுத்தும். இதற்காகச் சிலர் கொசுவலை போட்டு உறங்குவர். நம்மிடம் கொசு அணுகாதபடி இருக்க நல்லெண்ணெய் இலேசாக உடம்பில் தடவிக்கொண்டு படுத்தல் நலம். முக்கியமாய்க் கொசுக்களுக்குக் காலில் உள்ள இரத்தத்தில்தான் மிகவும் விருப்பம். காலில் எண்ணெய் தடவினுல் கொசு கடிக்காது; மூட்டுப் பூச்சியும் அணுகாது.

24-7-1930

4. எள்ளுச் செடி :

எள்ளுச் செடியை இந்தியர் புன்செய்ப் பயிராகப் பயிர் செய்கிருர்கள். அச்செடி விதை விதைத்த தொண்ணூறு நாட்களில் முளைத்துப் பெருத்துப் பூத்துக் காய்த்துவிடுகிறது. எள்ளுக்காய் காய்த்த பின் செடியைப் பிடுங்கி உலர்த்தித் தட்டினுல், எள் விதைகள் உதிர்ந்துவிடும். எள் உஷ்ணமுடையது; இரத்த சுத்திக்கு ஏதுவானது.

10-7-1930

5. தீ அணைக்கும் எறும்புகள் :

இயற்கை விநோதங்களைப் பார்வையிடுகிற ஒரு நிபுணர் எறும்புகள் தீயணைப்பதைப் பற்றிப் பன்முறை படித்திருந்தார். ஆனுல் அவர் எதையும் நேரில் பார்த்த பிறகே நம்பிக்கை கொள்ளுபவர். எறும்புகள் எவ்விதம்

தீயை அணைக்கிற தென்பதைப் பார்க்க அவருக்கு அதிக ஆவலுண்டாயிற்று.

ஒரு நாள் அவர் ஒரு காட்டிற்குச் சென்று எறும்புப் புற்று ஒன்றைக் கண்டுபிடித்தார். அவர் அந்தப் புற்றின் மத்தியில் ஓர் அங்குலம் நீளமுள்ள மெழுகுவத்தித் துண்டொன்றை நட்டு எரியவிட்டார். உடனே உள்ளிருந்த எறும்புகளெல்லாம் வெளிக்கிளம்பிச் சிறிது தூரத்திலிருந்து மெழுகுவத்தி எரிவதைப் பார்க்கத் தொடங்கின.

சிறிது நேரத்தில் அங்கிருந்த எறும்புக் கூட்டங்களெல்லாம் தங்கள் வீட்டிற்குப்பெரிய ஆபத்து வந்துவிட்டதென்று அங்கு மிங்கும் பரபரப்பாய் ஓட ஆரம்பித்தன. அந்த எறும்புகளில் நிதான குணமுள்ள பெரிய எறும்புகள் பல சேர்ந்து மிகவும் ஜாக்கிரதையாக மெழுகுவத்தியின்மீது ஏறி அதன் முனையைத் தங்கள் பின்னங் கால்களால் பற்றிக்கொண்டு தொங்கின.

பிறகு சிறிது சிறிதாகத் தலையை நிமிர்த்தி எரிகின்ற சுடரின்மேல் ஒரு வித நீரை உமிழத் தொடங்கின. அந்த நீர், சுடரில் பட்டதும் சுடர் ஒரு வித ஓசையோடு எரியத் தொடங்கிற்று.

இவ்வாறு அநேக எறும்புகள் மெழுகுவத்தியின்மீது ஏறி அவ்விதமான நீரைச் சொரிந்தன. இந்த எறும்புகள் இவ்வாறு செய்யும்பொழுது மற்ற எறும்புகள் அந்த மெழுகுவத்தியின் உயரத்துக்குச் சமமாக இருக்கத் திரடு ஒன்றைக் கட்டிவிட்டன. ஆதலால் மேலும் பல எறும்புகள் அந்த இடத்திற்கு வந்துவிட்டன. இந்த முயற்சியால் பல இறந்தன; பல மயங்கித் தரையில் விழுந்தன.

எனினும் இவ்வாறு நாலரை நிமிடங்களுக்குள் அந்த எறும்புகள் மெழுகுவத்தி எரிவதை அணைத்து வெற்றி பெற்றன.

அரைமணி நேரம் கழித்து அவர் மீண்டும் அந்த மெழுகுவத்தியை எரியவிட்டார். மறுபடியும் எறும்புக் கூட்டங்கள் தீயை அவிக்க ஓடி வந்தன. ஆனால் இந்தத் தடவை முப்பது வினாடிகளில் அவை நெருப்பை அணைத்து விட்டன.

வினா :

1. எலுமிச்சம் பழச்சாற்றை எவ்வாறு உட்கொண்டால் ஜுரம் நீங்கும்?
2. சேற்றுப்புண் ஆறுதற்குக் கூறும் வைத்திய முறை யாது?
3. கல்லானை — இருபொருள் சொல்லு.
4. பூண்டி - அரங்கநாத முதலியாரைக் குறித்து இரண்டு வாக்கியங்கள் சொல்.
5. கொசு, மூட்டுப் பூச்சி — இவைகளின் துன்பத்தைப் போக்க ஒரு வழி கூறு.
6. எள்ளின் குணம் என்ன?
7. எறும்புகள் மெழுகுவத்தியை எவ்வாறு அணைத்தன?

பயிற்சி :

1. மிருகக் காட்சிச்சாலை என்றால் என்ன? சில வரி எழுது.
2. இந்தப் பாடத்திலிருந்து, பொருட் பெயர், சினைப்பெயர், தொழிற் பெயர் ஆகியவைகட்கு ஒவ்வோர் உதாரணம் எழுது.

7. மனந்தடுமாறேல்

சில ஆண்டுகளுக்கு முன்பு வங்காளப் பிரதேசத்தைச் சார்ந்த ஒரு காட்டிலே பதினறடி வேங்கை என்று சொல்லும் ஒரு கொடிய புலி இருந்தது. அது அந்தக் காட்டின் சுற்றுப் புறங்களில் உள்ள கிராமங்களில் புகுந்து அங்குள்ள ஆடு மாடுகளை அடித்துத் தின்று வந்தது. அதனால் அங்கே வசித்துவந்த குடியானவர்கள் பெரிதும் துன்புறலாயினர். இதனை அறிந்த ஓர் ஐரோப்பிய மேன்மகனர் அந்தக் கொடிய விலங்கினை எவ்விதமேனும் வேட்டையாடி ஒழித்துவிடத் தீர்மானித்தனர்.

ஒருநாள் அந்தத் துரைமகனர் வேட்டைக்கு வேண்டிய ஆயுதங்களுடன் தன்னந்தனியே அந்தக் காட்டிற்குள் நுழைந்தனர். அவர் அந்தக் காடு முழுதும் நெடுநேரம் சுற்றிச் சுற்றி அலைந்தனர். அந்தக் கொடுவிலங்கின் இருப்பிடத்தை அவரால் அறிந்துகொள்ள முடியவே இல்லை.

பகல் சுமார் இரண்டு மணி இருக்கும். அப்போது அவர், புதர்களால் சூழப்பெற்றிருந்த ஒரு தடாகத்தைக் கண்டனர். வெயிலில் சுற்றி யலைந்ததால் துரைமகனருக்கு நாவறட்சி அதிகமாய் இருந்தது. ஆதலின் அவர் அந்தத் தடாகத்தை அடைந்து தாகவிடாய் தீர்த்துக் கொண்டு கரையேறினர். பிறகு அவர் சிறிது இளைப்பாற எண்ணி அதற்கு அருகே ஒரு பெரிய மரத்தின் அடியில் கிடந்த ஒரு கல்லின்மீது அமர்ந்தனர். அங்கே காற்றும் "குளு - குளு" வென்று வீசியதனல் மிகுதியும் களைப்புற்

றிருந்த அவர், தாம் கொண்டுவந்த துப்பாக்கியினைத் தமக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு, அந்த மரத்தைச் சார்மணையாகக்கொண்டு ஒரு சிறிது கண்ணயரலாயினர்.

வெயிலின் கொடுமையினுலும், சுற்றியலைந்த களைப்பினுலும் அந்தத் துரைமகனுர் சிறிது நேரத்திற்குள் நல்ல நித்திரையில் ஆழ்ந்து விட்டார். மணி சுமார் ஐந்திருக்கலாம்; சூரியன் மேற்கே மறையும் தருணம்; சூரியகிரணம் அந்த மரத்தின் அடியில் அமர்ந்திருந்த துரைமகனுர் கண்களில் பட ஆரம்பித்தது. ஆதலால் அவர் நித்திரையினின்றும் தெளிந்து மெதுவாகக் கண்திறந்து பார்க்கலாயினர்.

ஆ! என்ன ஆச்சரியம்! அவர் எந்தப் பிராணியினை வேட்டை யாடுதற்காக அவ்வளவு நேரம் சுற்றிச் சுற்றி

அலைந்தனரோ அந்தக் கொடிய வேங்கைப்புலியே அவர் தம் கண்களுக்கெதிரே சிறிது தூரத்தில் நின்று தம்மைப் பார்த்துக் கொண்டிருத்தலை அவர் கண்டனர்!

மாணவர்களே, இத்தகைய ஆபத்தான நிலைமையில் நீங்கள் இருக்க நேர்ந்தால் என்ன செய்வீர்கள்? மிகுதியும் அச்சங்கொண்டு "ஓ" வென்று வாய்விட்டுக் கத்த ஆரம் பிப்பீர்கள்; அல்லது எழுந்து ஓட ஆரம்பிப்பீர்கள். ஆனால் மிகவும் தைரியம் வாய்ந்த அந்தத் துரை மகனரோ அவ்விதம் யாதும் புரியவில்லை. அவர் காட்டில் வாழும் கொடு விலங்குகளின் இயல்புகளை யெல்லாம் நன்கு உணர்ந்தவர். புலியினைக் கண்டால் மனிதர்கள் அஞ்சுவது போன்று புலிகளுக்கும் மனிதர்களிடம் அச்சம் உண்டு என்பது அவருக்கு நன்கு தெரியும். தம்மீது பாய்வதற் காகத் தம்மை உருத்துப் பார்த்துக்கொண்டிருந்த அந்த வேங்கையின் மீது தாமும் பாயக் குறிபார்ப்பவர்போன்று அவர் அதனை உருத்துப் பார்க்கலாயினர். ஆதலால் அந்த வேங்கைப் புலியும் அவர் என்ன செய்வாரோ என்னும் அச்சத்தால் ஒன்றும் தோன்றப்பெறுமல் அவரையே நோக்கிக்கொண்டு இருந்தது.

இந்த நிலையில் சூரியன் மெதுவாக மேற்கே மறைய லாயினன். ஆனல் அந்தத் துரைமகனரின் நல்ல காலம் — அதே சமயத்தில் கிழக்கே சந்திரனும் சிறிது சிறிதாகத் தோன்றி அவருக்குப் போதிய ஒளியினைத் தந்து உதவி ஞன். ஆதலால் இருளை எதிர்பார்த்திருந்த அந்தப் புலி யின் எண்ணம் ஈடேறவில்லை. அன்றியும் அந்த வேங்கை அவர் மீது உடனே பாயாதிருந்தமைக்கு மற்றுமோர்

காரணமும் உண்டு. அவ்வேங்கை அந்தத் துரைமகனுருக்கு மிகவும் அருகே இருந்தமையால், அது அவர்மீது குறி பார்த்துப் பாய்வதற்குப் போதிய தூரம் இல்லை. அந்தத் துரைமகனுர் தம்மிடம் இருந்த துப்பாக்கியினுல் அதனை உடனே சுட்டுக் கொன்றிருக்கலாம். ஆனுல் அப்போது அந்தத் துப்பாக்கி அவருக்குச் சிறிது தூரத்தில் இருந்தமையால் அவரால் அவ்விதம் செய்ய முடியவில்லை.

இவ்விதம் அவ்விருவரும் நெடுநேரம் ஒருவரை ஒருவர் குறிபார்த்த வண்ணம் இருந்தனர். இரவு மணி ஏழு ஆயிற்று; எட்டும் கடந்தது; ஒன்பதும் அடித்தது; பத்தும் நெருங்கியது. அப்போது அந்தப் புலி அவர் மீது பாய்வதற்கோ திரும்பிப் போய்விடுவதற்கோ மிக மெதுவாக அடிமேல் அடி வைத்துப் பின்னுக்கு நகர்ந்து செல்லத் தொடங்கியது. உடனே அந்தத் துரைமகனுர் தமது கையைச் சிறிது சிறிதாகத் துப்பாக்கியின் அருகே நகர்த்தலாயினர். இதனை அறிந்த அந்த வேங்கைப் புலி யாது காரணங் கருதியோ முன்பு இருந்த இடத்துக்கே வந்து நின்றுகொண்டது. அந்தத் துரைமகனுரும் உடனே தமது கையினைப் பழைய நிலையில் நகர்த்திக்கொண்டனர்.

இரவு பன்னிரண்டு மணி ஆயிற்று; ஒன்று அடித்தது; இரண்டும் ஆயிற்று. அப்போதும் அவ்விருவரும் அதே நிலையில் குறி பார்த்த வண்ணம் இருந்தனர். எனினும் இரண்டொரு முறை அந்தப் புலி பின்னுக்குச் செல்ல முயன்றது. அப்போது அந்தத் துரைமகனுரும் தம் கையை நகர்த்தத் தொடங்கினர். ஆனுல் புலியும் பின்னே செல்லவில்லை; துரைமகனுரும் துப்பாக்கியை

எடுக்கவில்லை. இவ்விதம் பொழுதுவிடியும் வரையில் அந்தக் கொடிய வேங்கைப் புலி குறிபார்த்த வண்ணமாகவே இருந்தது; அந்தத் தைரியம் மிக்க துரைமகனாரும் அதற்கு ஏற்ற வண்ணம் நடந்துவந்தனர்.

தாகம் தீர்த்துக்கொள்ள நீர்த்துறையை அடைந்த அந்த வேங்கைப் புலி மறுநாள் சூரியன் புறப்பட்ட பின்னரும் அச்சத்தால் அந்த இடத்தைவிட்டுச் செல்லவில்லை. அந்த வீரத் துரைமகனாரும் அதே நிலையில் சிறிதும் மனந் தளராது இருந்தார்.

காலை சுமார் பத்து மணி இருக்கலாம். அப்போது வழிப்போக்கர் சிலர் மிக்க ஆரவாரம் செய்துகொண்டு அவ்வழியே வரலாயினர். அவர்தம் பேரிறைச்சலைக் கேட்ட அந்த வேங்கைப் புலி மிகுந்த அச்சத்தால் சரேலென்று அருகே இருந்த புதரில் தாவிக் குதித்துப் பதுங்கிக்கொள்ள நினைத்தது. உடனே அந்த வீரத் துரை மகனார் அதனைக் குறி பார்த்துச் சுட்டுக் கொன்றனர். பிறகு அவர் எழுந்து நிற்க முயன்றனர். அவர் நீண்டநேரம் பதுமைபோல் இருக்க நேர்ந்த காரணத்தால் அப்போது அவர்தம் கால்கள் நிற்கவும் இயலாத நிலையில் இரத்த ஓட்டம் குறைந்து இருந்தன. ஆதலின் அந்த வழிப்போக்கரின் உதவியால் அவர் தம் இருப்பிடம் அடைந்தனர்.

மாணவர்களே, இத்தகைய வீரத்தினையும், மனந் தளரா நிலையினையும் நீங்களும் பெற்றுப் பேரும் புகழும் அடைய முயல்வீர்களாக.

அரும்பதம் :

பிரதேசம்	தருணம்	இயல்பு
தடாகம்	கிரணம்	ஆரவாரம்
அமர்தல்	உருத்து	பதுமை

அருந்தொடர் :

சுற்றுப்புறம்	கண்ணயர்தல்	நீர்த்துறை
தன்னந்தனியே	ஈடேற	சரேலென

வினா :

1. பதினறடி வேங்கை — இதற்கு இப்பெயர் ஏன் வந்தது ?
2. அந்தத் துரைமகனர் காட்டில் வாழும் விலங்குகளின் இயல்புகளை உணர்ந்தவர் என்பது எவ்வாறு தெரிகிறது ?
3. துரைமகனரைக் கண்ட புலி அவர் மீது ஏன் உடனே பாயவில்லை ?
4. மனந்தடுமாறேல்— என்பதற்குப் பொருள் என்ன ?
5. வழிப்போக்கர் ஏன் ஆரவாரம் செய்துகொண்டு வந்தனர் ?
6. வங்காளப் பிரதேசம் — இதைத் தேச படத்தில் பார்த்திருக்கிருயா ?

பயிற்சி :

I. (1) துரைமகனர் வேட்டைக்குச் சென்ருர்.
   (2) அவர் தன்னந்தனியே சென்ருர்.

இந்த இரண்டு வாக்கியங்களையும் ஒரே வாக்கியமாக எழுது.

II. புலியினைக் கண்டால் மனிதர் அஞ்சுவது போன்று, புலிகளுக்கும் மனிதர்களிடம் அச்சம் உண்டு என்பது அவருக்கு நன்கு தெரியும் — இதனை மூன்று சிறு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

III. ஈடேற, சரேலென — இவைகளின் பொருள் விளங்கும்படி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

IV. இந்தப் பாடத்திலிருந்து இடைச்சொல் இரண்டும், வினைச்சொல் இரண்டும் எடுத்து எழுது.

இலக்கணம் :

I. பெயர்ச்சொற்கள் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என ஆறு வகைப்படும் என்பதை நீங்கள் முன்பே கற்றிருக்கிறீர்கள்.

ஆடு, கல், மரம், மனிதன் — பொருட்பெயர்கள்.

வங்காளம், கிராமம், காடு, தடாகம் — இடப்பெயர்கள்.

ஆண்டு, மணி, பகல், இரவு — காலப்பெயர்கள்.

கண், கால், கிளை, கை — சினைப்பெயர்கள்.

கொடுமை, நன்மை, வெண்மை, கருமை — குணப்பெயர்கள்.

பாய்தல், வருகை, ஓட்டம், உதவி — தொழிற்பெயர்கள்.

கீழே தடித்த எழுத்தில் உள்ளவை என்ன பெயர்ச்சொற்கள் ?

(1) துரை மகனுருக்கு நா வறட்சி அதிகமாய் இருந்தது.

(2) புலி அவர் மீது பாய்தற்கு அடி மேல் அடி வைத்துச் சென்றது.

II. எண் இருவகைப் படும் : ஒருமை - பன்மை.

(1) ஒரு புலி இருந்தது — இதைப் பன்மையாக மாற்றி எழுது.

(2) வழிப்போக்கர் வந்தனர் — இதை ஒருமையாக மாற்றி எழுது.

8. உனக்கு வெட்கம் இல்லையா?

மணி : அப்பா - அப்பா, நான் இன்றைக்குப் படக் காட்சிச்சாலைக்குப் போய் இருந்தேன். எங்கள் ஆசிரியர் இன்று எங்களை யெல்லாம் அழைத்துச் சென்றார்.

தந்தை : அப்படியா! இன்றைக்கு அங்கே என்ன விசேஷம்?

மணி : மலேரியா ஜுரம் எவ்வாறு வருகிறது என் பதையும், தொத்து நோய் பரவும் விதத்தையும், அம்மை குத்திக்கொள்ள வேண்டிய அவசியத்தையும் எங்களுக்கு விளக்கிக் காட்டுவதற்காக எங்கள் ஆசிரியர் எங்களை யெல் லாம் படக்காட்சிச்சாலைக்கு அழைத்துச் சென்றார்.



தந்தை : நல்லது; மணி, மலேரியா ஜுரம் எவ்வாறு உண்டாகிறது? சொல் பார்க்கலாம்.

மணி: மலேரியா ஜுரத்திற்குக் கொசுக்களே முக்கிய காரணம். அந்தக் காய்ச்சல் பலருக்கும் தொத்துவதற்கும் கொசுக்களே காரணமாக இருக்கின்றன. — அப்பா, கொசுக்கள் எவ்விதம் உண்டாகின்றன என்பதையும், அவை கடிப்பதால் நமக்கு மலேரியா ஜுரம் எப்படி உண்டாகின்றது என்பதையுங்கூடப் படத்தில் எங்களுக்கு மிக விளக்கமாக அவர்கள் காட்டினார்கள். அப்பா, நான் அதை மற்றும் ஒரு முறை போய்ப் பார்க்கவேண்டும்.

தந்தை: பார்ப்பது நல்லதுதான். ஆனால் அவ்விதம் பார்த்து மகிழ்ந்துகொண்டிருப்பதால் மட்டும் பயனில்லை. அதற்கு ஏற்றவண்ணம் நடக்கவும் முயலவேண்டும் — அது கிடக்கட்டும்; குழந்தாய், இந்த மலேரியா ஜுரத்தின் காரணத்தை முதன் முதலில் கண்டுபிடித்தவர் எவர்? அவர் எப்படிக் கண்டறிந்தார்? உனக்குத் தெரியுமா?

மணி: தெரியாது அப்பா; நீங்கள் தயைசெய்து சொல்லுங்கள்.

தந்தை: மலேரியா ஜுரம் கொசுக்களால்தான் உண்டாகிறது என்பதை நம்மவர்கள் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே கண்டறிந்து அதற்கு வேண்டிய மருந்தையும் தேடி வைத்தார்கள். ஆனால் அவர்கள் மக்களுக்கு அவைகளை விளக்கமாக எடுத்து உரைக்கவில்லை. சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்புதான் சர். ரோனல்டு ராஸ் என்னும் ஆங்கில மருத்துவர் நம் இந்தியாவுக்கு வந்து பல கொசுக்களைப் பிடித்துப் பரீட்சை செய்து பார்த்து மலேரியா ஜுரத்தைக் குறித்த பல அரிய விஷயங்களையெல்லாம்

சர். ரோனல்டு ராஸ்

கண்டறிந்து மக்களுக்குத் தெரிவித்தார். அதனால் நம் நாட்டில் மலேரியா ஜுரம் இப்போது மிகவும் குறைவாக இருக்கிறது.

மணி : அப்படியானால் நாம் அவருக்கு மிகவும் நன்றி செலுத்தவேண்டும்.

தந்தை : ஆம்; உண்மையே. ஆனால் நன்றி செலுத்துவது மட்டும் போதாது. நாமும் அவர்களைப்போல் பல அரிய புதுமைகளைக் கண்டறிந்து பேரெடுக்கவும் முயல வேண்டும்.

மணி : அப்பா, அது எப்படி முடியும்? அந்தப் பாக்கியம் நம் எல்லோருக்கும் கிடைத்து விடுமா?

தந்தை : குழந்தாய், நம்மவர்கள் எதற்கும் இப்படித்தான் சொல்லித் தம் மனதைத் தேற்றிக்கொள்கின்றார்கள். புதிய விஷயங்களைக் கண்டு பிடிக்கும் பெருமை மேல் நாட்டாருக்குத் தானா கிடைக்க வேண்டும்? நாம் அதனை அடைய முடியாதா? குழந்தாய், நன்றாக யோசித்துப் பார். புகைப்படம், ஆகாய விமானம், ஒலி பரப்பும் கருவி, மின்சார யந்திரம், மின்சார விளக்கு முதலிய யாவும் அந்த மேல் நாட்டார் கண்டுபிடித்தனவே ஆகும். நம்மவர்கட்கு அறிவு இல்லையா! ஆற்றல்

இல்லையா! போதிய ஊக்கமும் விடாமுயற்சியும்தான் இல்லை. பிறர் வருந்திக் கண்டு பிடித்தால் நாம் அவைகளைச் சுகமாகப் பெற்று மகிழ்வதா? — குழந்தாய், இதை நினைத்தால் உனக்கு வெட்கம் உண்டாகவில்லையா?

மணி: ஆம்; அப்பா, எனக்கு மிகவும் வெட்கமாகவே இருக்கிறது. சிறியவனாகிய என்னால் இப்போது என்ன செய்ய முடியும்?

தந்தை: குழந்தாய், உனக்கு இந்தச் சிறுவயதி லிருந்தே அந்த எண்ணம் இருந்தால்தான் பிறகு நீ பெரிய வனாகும்போது ஏதாவது ஒரு புதுமையைக் கண்டுபிடிப் பாய். நீராவி யந்திரம் கண்டுபிடித்த ஜேம்ஸ் வாட் என் பவன் சின்னஞ் சிறியவன்தானே! நீ இப்போது பார்த்து விட்டுவந்த பேசும் புகைப்படம் கண்டுபிடித்த தாமஸ் ஆல்வா எடிசன் என்பவர் மிகச் சிறு வயதிலேயே எத்தனையோ புதுமைகள் கண்டறிந்தார்!

மணி: அப்பா, அவர்கள் எல்லா விஷயங்களையும் கண்டுபிடித்து விட்டார்களே. இன்னும் புதிதாகக் கண்டு பிடிப்பதற்கு என்ன இருக்கிறது?

தந்தை: குழந்தாய், மக்கள் கண்டுபிடித்ததைவிட இன்னும் கண்டறிய வேண்டியவைகளே மிக அதிகமாக இருக்கின்றன. ஓடுகிற நீர், எரிகிற நெருப்பு, வீசுகிற காற்று ஆகிய இவைகளைக் கொண்டே நாம் இன்னும் எவ்வளவோ புதுமைகள் கண்டறியலாம். எதற்கும் முயற்சி வேண்டும்; மன உறுதி வேண்டும்; நல்ல எண்ணமும் வேண்டும்; இவைகட்கெல்லாம் அடிப்படை

யாகவுள்ள கல்வியைக் கற்பதில் அளவு கடந்த ஆர்வமும் வேண்டும்.

மணி: அப்பா, நான் இன்று முதல் அதே எண்ணமும் ஏக்கமுமாய் இருப்பேன்; கருத்துடன் கற்று வருந்தி உழைப்பேன்; நம் நாட்டுக்குப் பேரும் புகழும் உண்டாகப் பாடுபடுவேன். இது நிச்சயம் — நிச்சயம்.

அரும்பதம் :

புதுமை	ஆற்றல்	ஊக்கம்
பாக்கியம்	ஆர்வம்	தேற்றுதல்

அருந்தொடர் :

நன்றி செலுத்துதல்	மன உறுதி
சின்னஞ் சிறிய	எண்ணமும் ஏக்கமும்

வினு :

1. மலேரியா ஜுரத்திற்கு முக்கிய காரணம் என்ன?
2. மலேரியா ஜுரத்தின் காரணத்தைக் கண்டறிந்த பெரியாரின் பெயர் என்ன?
3. அந்தப் பாக்கியம் நம் எல்லோருக்கும் கிடைத்துவிடுமா? — எந்தப் பாக்கியம்?
4. இதை நினைக்கும்போது உனக்கு வெட்கம் உண்டாகவில்லையா? — எதை நினைக்கும்போது?
5. "சிறியவனுகிய என்னுல் இப்போது என்ன செய்யமுடியும்?" என்று சொல்லிய மகனுக்குத் தந்தையார் யாது விடை யளித்தனர்?
6. பேசும் புகைப்படம் கண்டு பிடித்தவர் யார்?

பயிற்சி :

1. ஆற்றல், ஆர்வம் — இவைகளின் பொருள் விளங்கும்படி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

2. ஓரெழுத்துப் பதம், ஈரெழுத்துப் பதம் — இவைகளை உதாரணத்துடன் விளக்கி எழுது.

3. இடப்பெயர், காலப்பெயர் இவைகட்கு இப்பாடத்திலிருந்து ஒவ்வோர் உதாரணம் எழுது.

4. கீழ்வருபவைகட்கு எழுவாய், பயனிலை முதலியன எழுது.

(1) ஆசிரியர் எங்களை அழைத்துச் சென்றார்.

(2) நம்மவர்கள் முன்பே கண்டறிந்தார்கள்.

(3) நீ ஒரு புதுமையைக் கண்டுபிடிப்பாய்.

இலக்கணம் :

திணை இரண்டு வகைப்படும்: உயர்திணை, அஃறிணை.

பால் ஐந்து வகைப்படும்: ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்.

ஆண், பெண், பலர் — இவை உயர்திணை.

ஒன்று, பல — இவை அஃறிணை.

(1) ஒரு சிறுவன் கண்டறிந்தான் — இதற்குப் பெண்பால் கூறு.

(2) கொசு தொத்து நோயைப் பரப்புகின்றது — இதற்குப் பலவின்பால் என்ன?

(3) அவை வாழ்கின்றன — இதற்குப் பலர்பால் எழுது.

(4) இவை மேல் நாட்டாரால் கண்டு பிடிக்கப்பட்டன — இதற்கு ஒன்றன்பால் என்ன?

9. நன்றி மறவேல்



1. இப்படங்களைப் பார்த்து ஒரு கதை எழுது.
2. இச்சம்பவத்தை நீ நேரில் கண்டதுபோல் சொல்லு.
3. அந்த இரு சாரணச் சிறுவர் கூறுவதுபோல் எழுது.



10. விளையாட்டால் விளைந்த நன்மை

'விளையாட்டே வினையாயிற்று' என்பது பழமொழி. இங்கு வினையென்பது தீவினையைக் குறிக்கும். எனினும் அந்த விளையாட்டினால் நன்மை விளைந்த வரலாறுகளும் பல உண்டு. இன்று நமது வாழ்க்கைக்கு இன்றியமையாது உள்ள சாதனங்கள் யாவும் விளையாட்டாகக் கண்டுபிடிக்கப்பட்டவைகளே.

சுமார் இருநூறு ஆண்டுகட்கு முன்பு ஸ்காட்லாந்து தேசத்தில் இருந்த ஜேம்ஸ் வாட் என்னும் சிறுவன் விளையாடிய விளையாட்டின் பயன் இன்று நீராவி யந்திரமாக இருந்து மக்களுக்குப் பயன்படவில்லையா? நீராவி வண்டியைக் கண்டுபிடித்தவர் யார்? ஜார்ஜ் ஸ்டீபென்ஸன்

என்று கூற நீங்கள் முன்வருவீர்கள். அதனை முதலில் கண்டுபிடித்தவர் அவரல்லர். ஜான் மர்டாக் என்னும் ஓர் எளிய தபாற்காரரே யாவர். அவர் அந்த அருமையான வண்டியை விளையாட்டாகவே செய்து முடித்தார். அந்த வண்டியும் ஒரு விளையாட்டுக் கருவி போன்றே இருந்தது. அதன் நீளம் ஓர் அடி; உயரமும் அதற்கு மேல் இல்லை. அந்தச் சிறிய வண்டி பிற்காலத்தில் பெரிய அளவிற்குக் கட்டப்பட்டுப் பெரிய வேலைகளைச் செய்ய உதவும் என்று அவர் நினைத்திரார். அச்சிறு வண்டி ஒரு கறுப்புப் பூனைக் குட்டியைப்போல் சீறிக்கொண்டும், சிடுசிடுத்துக் கொண்டும் அவர்தம் வீட்டின் அறையில் முன்னுக்கும் பின்னுக்கும் ஓடிக்கொண்டிருந்தது. அவர் அதைக் கண்டு களிப்புற்றிருந்தார். அதை லண்டன் மாநகருக்குக் கொண்டு சென்று தம் பேரில் உரிமைப் பதிவு செய்து கொள்ளக்கூடிய படிப்பும் சாமர்த்தியமும் அவருக்கு இல்லை. அன்றியும், அவரை அத்துறையில் ஊக்குவிக்கும் நண்பரும் அவருக்கு வாய்க்கவில்லை. ஆகவே நீராவி வண்டியைக் கண்டுபிடித்த பேரும் புகழும் அவர் அடைவதற்கின்றி இறந்தார்.

அவருக்குப் பின் ட்ரேவிதிக் என்னும் பெயருள்ள ஒருவர் 1804-ஆம் ஆண்டில் பெரிய அளவிற்கு ஒரு நீராவி வண்டியைச் செய்து முடித்தார். அது ஒன்பது மைல் வேகம் சென்றது. அன்றியும் அது பலர் வியக்கத்தக்க அளவிற்குப் பளுவான சாமான்கள் ஏற்றப்பட்ட வண்டித் தொடரை இழுத்துச் சென்றது. ஆனால் அது நெடுநாள் உழைக்கவில்லை; அடிக்கடி கெட்டுப்போய் விடுவதாயிற்று.

அதற்குக் காரணம் அதிகமான நீராவி, ஓட்டைகள் மூலம் வீணாக வெளியே போய்க்கொண்டிருந்ததே ஆகும். நல்ல வண்டிகள் செய்வதற்கு வேண்டிய எஃகும் ட்ரெவிதிக் என்பவருக்கு அக்காலத்தில் கிடைக்கவில்லை. ஆகவே அவர் முயற்சிகளனைத்தும் உடனே பயன் தரவில்லை.

சில வருடங்கள் கழித்து வில்லியம் ஹெட்லி என்னும் மற்றொருவர் "புகையும் பில்லி" என்னும் பெயருள்ள ஒரு நீராவி வண்டியைச் செய்து காண்பித்தார். அதுவும் மிக்க பயனைத்தரவில்லை.

இஃது இவ்வாறிருக்க இந்நிகழ்ச்சிகளுக்குச் சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் இங்கிலாந்தில் டைன் என்னும் பிரதேசத்தில் ஒரு குழந்தை பிறந்து வளர்ந்து கொண்டிருந்தது. அது சிறு வயதிலேயே நீராவி வண்டி போன்ற விளையாட்டுக் கருவிகளைக் களிமண்ணினால் செய்து விளையாடியது. அக்குழந்தை வயதில் முதிர்ந்த பின்பு நீராவி யந்திரத் துறையிலே ஈடுபட்டுத் தன் நாற்பதாவது வயதில் ஒரு ரெயில்வே கம்பெனியில் என்ஜினீயர் உத்தியோகத்தில் அமர்ந்திருந்தது. அக்குழந்தையின் பெயர்தான் ஜார்ஜ் ஸ்டீபென்ஸன் என்பது.

இப்பெயரைக் கேட்டவுடனே உங்களுக்கு நீராவி வண்டியைப் பற்றிய ஞாபகம் தானாகவே வரும். ஆம்; அவரின்றி நீராவி வண்டிச்சாதனம் பொதுமக்களின் நன்மைக்குரிய சாதனமாக இவ்வளவு முன்னேற்றமடைந்திருக்க முடியாது. பலருக்கு அவர்தாம் நீராவி யந்திர வண்டியை முதன் முதலாகத் தோற்றுவித்தவர் என்பது

கருத்தாகும். அதைச் செய்தவர் உண்மையில் அவரல்லர். முன்னரே குறிப்பிட்டபடி ஜான் மர்டாக் என்பவரே அதனைச் செய்தார். அது நாட்டிற்குப் பயன்படும்படி அதை விருத்திசெய்தவர் ஜார்ஜ் ஸ்டீபென்ஸன் என்பவர். ஆதலின் நீராவிச் - சாதன - இயக்கத் - தந்தை ஜான் மர்டாக் என்பவரே யாவர்.

அக்காலத்தில் ரெயில்வே என்று சொல்லப்படும் இருப்புப்பாதை இருந்தபோதிலும், அதன் மீது குதிரைகளால் இழுக்கப்பட்ட வண்டித் தொடர்களே ஓடிக்கொண்டிருந்தன. ஸ்டீபென்ஸன் என்ஜினீயர் உத்தியோகத்திலமர்ந்ததும், குதிரைகளுக்குப் பதிலாக நீராவி வண்டியை உபயோகிக்கத் துணிந்தார். அதற்காக அவர் பெரிதும் முயன்று 1830-ஆம் ஆண்டில் தாமே ஒரு நீராவி வண்டியைச் செய்து முடித்தார். அதற்கு அவர் 'ராக்கட்' (Rocket) என்று பெயர் கொடுத்தார். அதன் வேடிக்கையான உருவ அமைப்பைப் படத்தில் பாருங்கள். தற்போது தெருக்களில் தார் போடுவதற்காக உபயோகிக்கப்படும் தார் உருக்கும் யந்திரத்தைப்போல் அது காணப்படவில்லையா? இப்பொழுதுள்ள வலிவுள்ள இன்ஜின்களுக்கும் இதற்கும் எவ்வளவோ வேறுபாடுகள் காணலாம். ஆயினும் இது தான் அக்காலத்திய மக்களுக்கு வியப்பைத் தரக்கூடிய ஒரு விந்தையாயிருந்தது. இது இன்றும் இங்கிலாந்தில் ரயில்வே பொருட்காட்சிச் சாலையில் காணக்கிடக்கின்றது.

"ராக்கட்" என்னும் இந்த நீராவி வண்டி 1830ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் முதன் முதலாக ஓட்டுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. அக்காலத்தில், அங்குள்ள மக்கள்

இந்நீராவி வண்டி குதிரையைவிட வேகமாகச் செல்லக் கூடும் என்று நம்பவில்லை. ஆயினும் இதனுடைய ஓட்டத்தைப் பார்க்கப் பலர் குழுமியிருந்தனர். முதன் முதலாக ஓடும் புகைவண்டித் தொடரில் ஏறிச்செல்லும் பாக்கியத்தைப் பெற அக்காலத்திய பெரியார்களில் பலர் அந்த வண்டிகளில் ஏறினர். இங்கிலாந்தின் பிரதம மந்திரியாரே அதில் அமர்ந்திருந்தனர் என்றால் மக்கள் காட்டிய உற்சாகம் எவ்வளவு என்பதை நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

குறித்த மணிக்குப் புகை வண்டியானது கூவிப் புகைந்து பலவித ஓசைகளைச் செய்து ஓட ஆரம்பிக்கும் போது மக்கள் எவ்வளவு குதூகலமடைந்தனர் என்பதைச் சொல்லவும் வேண்டுமா! குதிரை மேலேறிக்கொண்டு சிலர் அதனோடு பந்தயம்போட்டனர். பாவம்! அவர்கள் சீக்கிரத்தில் தோற்கடிக்கப்பட்டனர். அந்த வண்டித்தொடர் மணிக்கு 29 மைல் வீதம் ஓடவே அவர்கள் பின் தங்க வேண்டியதாயிற்று. அப்பொழுதுதான் பொது மக்கள் நீராவி வண்டியினால் ஏற்படும் பல நன்மைகளையும் உணரலாயினர். அது பளுவான சாமான்களை ஏற்றிச் செல்லும் என்பதும், ஜனங்களை ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு விரைவாகக் கொண்டுபோகும் என்பதும் அவர்கட்குப் புலனாயின. அக்காலத்திய அரசாங்கத்தாருக்குக்கூட அது இவ்வளவு உபயோகப்படும் என்று முதலில்தோன்றவில்லை. அதன் புதுமைக்காகவும் வேடிக்கைக்காகவுமே சர்க்கார் ஸ்டீபென்ஸனை ஊக்குவித்தனரே யன்றி வேறு காரணங்களுக்கல்ல. ஆனால் இராணுவப் படைகளை மிகச் சீக்கிரமாக ஏற்றிச் செல்லவும், உள்நாட்டுக் கலகங்களை

ஆங்காங்கு அடக்கவும் புகை வண்டி ஓர் இன்றியமையாச் சாதனமென்பதை அவர்கள் பின்னர் உணரலாயினர். ஆகவே, பல ரெயில்வே கம்பெனிகளையும் அரசாங்கத்தார் வாங்கிக்கொண்டு புகை வண்டிச் சாதனத்தைத் தாங்களே சீர்திருத்தி யமைக்க ஆரம்பித்தனர். அரசாங்கத்தார் இவ் வேலையை மேற்கொண்ட பிறகு, நல்ல உரமான இரும் பினல் வேயப்பட்ட இருப்புப் பாதையென்ன! பெரிய அள விற்குச் செய்யப்பட்ட வலிமையுள்ள புகை வண்டிக ளென்ன! நினைத்தமாத்திரத்தில் வண்டியை நிறுத்தக்கூடிய சக்கரப் பிடிப்புகளென்ன! இராப்பகலுக் குகந்த சமிக்கை அமைப்புகளென்ன! டெலிபோன் போன்ற தொலை தூரப் பேச்சுச் சாதனங்களென்ன! மற்றும் கணக்கு வழக்கு முறைகளென்ன! — ஆக எல்லாத் துறைகளிலும் ஒன்றன் பின் ஒன்ருகப் புகை வண்டிச் சாதனம் முன்னேறிக் கொண்டே வந்தது. இப்போதோ அது சர்வசாதாரணமாகிவிட்டது.

பிள்ளைகளே, விளையாட்டாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு செயல் எத்தகைய நல்வினையை விளைவித்தது பார்த் தீர்களா! உங்கள் விளையாட்டுக்களும் அத்தகைய நன்மை களை விளைவிப்பனவாக இருத்தல் வேண்டும்.

அரும்பதம் :

சாதனம்	குழுமி	உகந்த
துறை	உரம்	சமிக்கை
ஊக்குவித்தல்	பிரதமம்	வேய்தல்

அருந்தொடர் :

இன்றியமையாத	சர்வ சாதாரணம்
உரிமைப் பதிவு	கணக்கு வழக்கு

வினா :

1. பழமொழி என்றால் என்ன ?
2. 'விளையாட்டே வினையாயிற்று' என்னும் பழமொழிக்குப் பொருள் என்ன ?
3. நீராவி யந்திரம் கண்டுபிடித்தவர் யார் ?
4. நீராவி வண்டியைக் கண்டுபிடித்தவர் யார் ?
5. ஜார்ஜ் ஸ்டீபென்சன் செய்த நன்மை என்ன ?
6. நீராவி வண்டி எவ்வெவ்வாறு பயன்படுகிறது ?

பயிற்சி :

I. படத்தைப் பார்த்துப் பழைய நீராவி வண்டியைக்குறித்தும், இப்போதுள்ள நீராவி வண்டியைக் குறித்தும் சில வாக்கியங்கள் எழுது.

II. இன்றியமையாத, கணக்கு வழக்கு — இவைகளை ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

III. கோடிட்டுள்ள இடங்களில் தக்க பதங்களை அமைத்து எழுது.

1. ஜார்ஜ் ஸ்டீபென்சன் நீராவி வண்டியைக் கண்டுபிடிக்கவில்லை ; ஆனால்.........
2. "ராக்கட்" என்னும் நீராவி வண்டி இன்றும்.............. இருக்கிறது.

இலக்கணம் :

I. வேற்றுமை எட்டு வகைப்படும் என்பதை நீங்கள் முன்பே அறிந்திருக்கிறீர்கள்.

1. ஒரு சிறுவன் இருந்தான் — 'சிறுவன்' என்பது முதல் வேற்றுமை; உருபு இல்லை.

2. அவன் ஓர் ஏழையைக் கண்டான் — 'ஏழையை' என்பது இரண்டாம் வேற்றுமை — ஐ உருபு.

3. அந்த ஏழையால் நடக்கவும் முடியவில்லை. அந்த ஏழையுடன் ஒரு நாயும் வந்தது. சிறுவன் அந்த ஏழையோடு பேசினான். — 'ஏழையால்,' 'ஏழையுடன்' 'ஏழையோடு, என்பவை மூன்றாம் வேற்றுமை — ஆல், ஓடு, உடன் உருபுகள்.

4. அந்த ஏழைக்குச் சிறுவன் காசு தந்தான் — 'ஏழைக்கு' நான்காம் வேற்றுமை — கு உருபு.

5. சிறுவன் குணத்தில் சிறந்தவன். அறிவின் மிக்கது குணம் அல்லவா? அந்த ஏழையின் வாயிலிருந்து வார்த்தைகள் வந்தன; உள்ளத்தினின்று உவகை தோன்றியது. — 'குணத்தில்,' 'அறிவின்,' 'வாயிலிருந்து,' 'உள்ளத்தினின்று' இவை ஐந்தாம் வேற்றுமை — இல், இன், இருந்து, நின்று உருபுகள்.

6. சிறுவனது நற்குணத்தை ஏழை புகழ்ந்தான்; நாயும் தன்னுடைய வாலை ஆட்டியது. — 'சிறுவனது', 'தன்னுடைய' இவை ஆறாம் வேற்றுமை — அது, உடைய உருபுகள்.

7. சிறுவன் கையில் தின்பண்டம் இருந்தது; அதையும் அவன் அந்த ஏழையினிடத்தில் தந்தான். பிறகு சிறுவன் வீட்டின்கண் நுழைந்தான். — 'கையில்,' 'ஏழையினிடத்தில்', 'வீட்டின்கண்' இவை ஏழாம் வேற்றுமை — இல், இடத்தில், கண் உருபுகள்.

8. 'தம்பீ, நீ வாழ்வாயாக' என்று ஏழை அச்சிறுவனை வாழ்த்தினான். 'கடவுளே, இந்த ஏழையைக் காப்பாற்று' என்று சிறுவன் கடவுளை வேண்டினான். — 'தம்பீ', 'கடவுளே' என அழைக்க உதவும் சொற்கள் எட்டாம் வேற்றுமை — இதற்கு உருபு இல்லை.

II. ஒரு சிறுவன் இந்த வண்டியைச் செய்தான் — தடித்த எழுத்தில் உள்ளவைகட்குத் திணை, பால், எண், இடம், வேற்றுமை கூறு.

11. தாயார் எழுதிய கடிதம்

"பொன்னரங்கம்"
15, முத்து கிருஷ்ணன் தெரு,
சென்னை, 23-9-1941

அருமை மைந்தன் புருஷோத்தமனுக்கு :

என் செல்வமே, நீ நவராத்திரி விடுமுறைக்காகத் திருக்கழுக்குன்றம் சென்று ஒரு வாரமாகியும் இன்னும் ஒரு கடிதமும் எழுதவில்லை. நானும், உன் அப்பாவும் உன் விஷயத்தில் எவ்வளவு கவலைப்படுகிறோமென்பதை இளம்பிள்ளையாகிய நீ அறிந்துகொள்ளவில்லை. ஒவ்வொருவரும் அவரவருடைய கடமையைச் செய்யவேண்டும். நீ உன் கடமையில் தவறிவிட்டாயென்றுதான் சொல்லவேண்டும்.

உன்னைப்பற்றி நாங்கள் மிகவும் கவலை கொள்வதற்கு இடம் வைக்காமல் உன் தாத்தா எங்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். நீ அதிக விளையாட்டுப் பராக்காயிருக்கிறாய் என்றும், அவர் சொற்படி நீ நடப்பதில்லையென்றும் அவர் வருத்தப்பட்டிருக்கிறார். நீ இத்தகைய பேர் எடுக்கலாமா? சென்ற ஆண்டு நீ படித்த "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்" என்னும் மூதுரையை இதற்குள் மறந்து விட்டாயா? கற்றபடி நடக்காவிட்டால், கல்வியினால் ஆய பயன் என்ன?

இத்தனை நாள் பட்டணத்தில் அடைபட்டிருந்த உனக்குத் திருக்கழுக்குன்றம்போன்ற வசீகரமான இடம் புதுமையாகவே இருக்கும். கோயிலுக்குப் போகலாமா, மலைமேல் ஏறலாமா, கழுகுகள் சாப்பிடுவதைப் பார்க்கலாமா, குளத்தில் நீராடலாமா, மலையைச் சுற்றி வரலாமா — என்றெல்லாம் உனக்குத் தோன்றுவது இயற்கைதான். ஆனால், எல்லாவற்றிற்கும் ஒரு வரம்பு உண்டு.

இது மழைகால ஆரம்பமாகையால் நீ சங்கு தீர்த்தத்தில் குளிக்கவே கூடாது. படிகளில் பாசி பிடித்திருக்கலாம். அன்றியும், குளத்தில் நீர் நிரம்பி இருக்கும். உனக்கு நிதானமாய் நடக்கத் தெரியாதாகையால், கால் சறுக்கிக் குளத்தில் விழுந்து விடுவாய். அதோடுகூட, உடம்பைத் திறந்து போட்டுக்கொண்டு, சில்லென்று காற்று வீசத் தண்ணீரில் மூழ்குவாயானல், உனக்கு உடனே மார்பில் சளி பிடிக்க, அதனல் காய்ச்சலும் இருமலும் வந்துவிடும். ஆயாவை வெந்நீர் வைக்கச் சொல்லி, நாடோறும் வெந்நீரில் குளிப்பதே நல்லது. இது கோடைக்காலமா யிருந்தால், நானே உன்னை நாடோறும் சங்கு தீர்த்தத்தில் குளிக்கச் சொல்லி யிருப்பேன்.

ஒவ்வொரு நாளும் மலைமேல் ஏறவேண்டுமென்று பிடிவாதம் செய்கிருயெனத் தாத்தா எழுதியிருக்கிருர். திருக்கழுக்குன்றத்து மலை மிகவும் செங்குத்தும் உயரமும் வாய்ந்தது. இதன்மேல் நீ நாடோறும் ஏறினல், உன் இளங்கால்கள் என்னத்திற்கு உதவும்? இனிமேல் அப்படிச் செய்யக்கூடாது. செவ்வாய்க்கிழமைகளில் மலையின்

மேல் விசேஷம் என்று சொல்வார்கள். அன்று மட்டும் நீ மலைமேல் ஏறினால் போதுமானது. மலையேறும்போது படிக்கட்டுகளின்மேல் ஓடக்கூடாது. அப்படிச் செய்தால், மிக விரைவில் உனக்கு மேல்மூச்சு உண்டாகும். அது மட்டுமன்று; ஒரு வேளை கால் தவறிவிட்டால், உன்னை உருட்டிவந்து கீழே எங்கேயாவது தள்ளிவிடும். நீ மலை உச்சியில் பாறாங்கற்களின் ஓரத்தில் போகவே கூடாது. இது மிகவும் ஆபத்தானது.

மழை நாட்களிலே நீ மலை சுற்றப் போகக்கூடாது. கோவிலுக்கு மட்டும் போகலாம். மற்ற நாட்களில் மலை சுற்றப் போகக்கூடாதென்று நான் சொல்லவில்லை. மலை சுற்றப் போவதாயிருந்தால், மாலை நான்கு மணிக்குப் புறப்பட்டு ஆறுமணிக்குள் வீடுவந்து சேரவேண்டும்.

ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் நீ கோயிலுக்குப் போகலாம். இது நவராத்திரி காலமாகையால், திரிபுரசுந்தரி அம்மைக்குச் சிறப்புகள் பல நிகழும். அலங்காரங்களும், ஆராதனைகளும், விளக்கொளிகளும் பார்ப்பதற்கு அழகாயிருக்கும். நீ கற்றுக்கொண்ட கடவுள் வணக்கப் பாடல்களை மனமுருகிப் பாடி, "நான் குணசாலியாயிருக்கவேண்டும்; எனக்கு நல்ல படிப்பு வரவேண்டும்; நான் நோயில்லாமல் வாழவேண்டும்" என்று வேண்டிக்கொள். தேவி உனது வேண்டுதலுக்கு இசைவாள்.

உன் பாடசாலை 30ஆம் தேதி திறக்கப்படும் அல்லவா? நீ இரண்டுநாள் முன்னதாகவே பட்டணத்துக்கு வந்துவிடு. வரும்போது தாத்தாவையும் அழைத்துக்கொண்டுவா. இனி

மேலாவது பராமுகமாயிராமல் உடனே பதில் எழுது. நாங்கள் சுகமாயிருக்கிறோமென்று தாத்தாவுக்குத் தெரிவி.

இங்ஙனம்: உன் அருமைத்தாய்,

வ. பா. தாமரைக்கண்ணி.

பின் குறிப்பு— இரண்டொரு சங்கதிகள் மறந்துவிட்டேன். நல்ல வேளையாக, கடிதத்தை மடித்து உறையில் போடும் சமயத்தில் அவை ஞாபகத்துக்கு வந்தன. மலையுச்சியிலிருந்து நேர்கிழக்கில் உற்றுப்பார்த்தால், ஒன்பது மைலுக்கப்பால் **மகாபலிபுரம்** விளக்குக் கூண்டு தெரியும். தெரிகிறதாவென்று பார்த்து எழுது. மலையைச்சுற்றி வரும்போது வடகிழக்கு மூலையில் ஓரிடத்திலே நின்றுகொண்டு, "திருமலை சொக்கம்மா" என்று கூவினால், "ஏன்" என்பதுபோல் எதிரொலி கேட்பது வேடிக்கையாயிருக்கும்.

வ. பா. தா.

விலாசம்:

திருவாளர் **பு. குருசாமி முதலியார் அவர்கள்**
பார்வையிட்டு,

செல்வன் **வ. பா. புருஷோத்தமனுக்கு**
அளிப்பது.

இராஜகோபால் செட்டியார் சத்திரம்,
சந்நிதித் தெரு, திருக்கழுக்குன்றம்.
(செங்கற்பட்டு மார்க்கம்)

அரும்பதம் :

மூத்தோர்	ஆய	ஆராதனே
அமிர்தம்	வரம்பு	பராமுகம்
மூதுரை	வசீகரம்	சந்நிதி

அருந்தொடர் :

பராமுகம் செங்குத்து எதிரொலி

வினு :

1. திருக்கழுக்குன்றம் — இது எங்கே இருக்கிறது ?
2. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் — இதற்குப் பொருள் என்ன ?
3. நீ கோயிலுக்குச் சென்ருல் உனக்கு என்ன என்ன வேண்டும் என்று வேண்டிக்கொள்வாய் ?
4. மகாபலிபுரம் — இது எதற்குப் பேர் போனது ?
5. எதிரொலி என்ருல் என்ன ? நீ இதை எங்கே யாவது கேட்டிருக்கிருயா ?

பயிற்சி :

1. பாட்டனுர் தாமரைக்கண்ணியம்மைக்குப் புருஷோத்தமன் விஷயமாகக் கடிதம் எழுதியதுபோல் சில வரிகள் எழுது.
2. நீ உன் தம்பிக்குப் படிப்பு விஷயமாகச் சில நன்மதி கூறுவதுபோல் ஒரு கடிதம் எழுது.
3. எட்டு வேற்றுமைகளில் இக் கடிதத்தில் என்ன என்ன வேற்றுமைகள் இருக்கின்றன ?

இலக்கணம் :

I. வினைச் சொல் இருவகைப்படும்: 1. முற்று 2. எச்சம்

"முற்று" என்பது முடிந்த கருத்தைத் தெரிவிப்பது அல்லது ஒரு வாக்கியத்தின் முடிவைக் காட்டுவது ஆகும்.

புருஷோத்தமன் மலைமீது ஏறினான்.

தாயார் கடிதம் எழுதினார்.

சில சங்கதிகள் ஞாபகத்திற்கு வந்தன.

ஏறினான், எழுதினார், வந்தன — இவை ஒரு வாக்கியத்தின் முடிவைத் தெரிவிக்கும் வினைச்சொல்லாய் இருப்பதால் வினை முற்று எனப்படும்.

எச்சம் என்பது கருத்து முடியாத வினைச் சொல்.

முற்று	எச்சம்
ஏறினான்	ஏறி அல்லது ஏறிய
எழுதினார்	எழுதி அல்லது எழுதின
வந்தன	வந்து அல்லது வருகிற

எச்சம் இரண்டு வகைப்படும். பெயர்ச்சொல்லைத் தழுவி நிற்கும் எச்சம், பெயரெச்சம்.

ஏறிய மலை, எழுதின கடிதம், வருகிற மாதம் — இவை மலை, கடிதம், மாதம் ஆகிய பெயர்ச்சொற்களைத் தழுவி நிற்பதால் பெயரெச்சம் எனப்படும்.

வினைச் சொல்லைத் தழுவி நிற்கும் எச்சவினைக்கு வினையெச்சம் எனப் பெயர்.

ஏறிச்சென்றான்; எழுதி அனுப்பினார்; வந்து போனான் — இவை சென்றான், அனுப்பினார், போனான் ஆகிய வினைச்சொற்களைத் தழுவி நிற்பதால் வினையெச்சம் ஆகும்.

II. பெயரெச்ச வினையெச்சங்களுக்கு இந்தக் கடிதத்திலிருந்து உதாரணம் காட்டு.

III. நாம் வினைமுற்றுச் சொற்களைக்கொண்டு திணை, பால், எண், இடம் ஆகிய இவைகளை அறியலாம்.

சென்றான் — உயர்திணை, ஆண்பால், ஒருமை படர்க்கை.

தந்தன — அஃறிணை, பலவின்பால், பன்மை, படர்க்கை.

IV. திறக்கிறார்கள், வைப்பான், இருப்பேன் — இவைகட்குத் திணை, பால், எண், இடம் எழுது.

V. **கட்டுரைப் பயிற்சி:**



இந்தப் படத்தைப் பார்த்துச் சில வாக்கியங்கள் எழுது.

12. மக்களும் மாக்களும்

இவ்வுலகில் கோடிக்கணக்கான உயிர்த்தொகுதிகள் காணப்படுகின்றன. அவைகளுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விசித்திர சக்தியினைப் பெற்றுள்ளதை நாம் நேரிலும், அரிய நூல்களின் மூலமாகவும் அறிகிறோம். சில உயிர்கள் ஸ்பரிசம் என்னும் ஓர் அறிவைக் கொண்டே தமக்குத் தேவையான எல்லாவற்றையும் தேடிக்கொள்கின்றன; சில உயிர்கள் சுவை வேறு பாட்டினால் பொருள்களைத் தெரிந்து கொள்கின்றன; வேறு சில உயிர்கள் தம் கைகளால் செய்யவேண்டிய வேலைகளைக் கால்களாலும் செய்து கொள்கின்றன; சில தம் உடம்பின் தோலைச் சட்டை போன்று கழற்றிக் கொள்கின்றன; சில இரவிலும் விளக்கொளி இன்றி உலவுகின்றன.

மனிதனே தனக்கு இருந்த பல சக்திகளையும் ஒவ்வொன்றாக இழந்து கொண்டே வந்துவிட்டான். இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களும் பிறர் உதவியினையோ, பிற பொருள்களின் உதவியினையோ வேண்டாது, தமக்கு இயல்பின் அமைந்துள்ள அவயவங்களைக் கொண்டே தங்களைக் காத்துக் கொள்கின்றன. அந்தோ பாவம்! மனிதனே நாகரிகம் என்னும் ஒரு புதிய உணர்ச்சியினால் தேகவன்மையை இழந்தான்; கனத்த தோலினை இழந்தான்; அடர்ந்த உரோம ஆடையை இழந்தான்; உறுதியான பற்களை இழந்தான்; அவனது அகன்ற மார்பு சுருங்கியது; பருத்த கழுத்தும் மெலிந்தது; கைகளும் கால்களும் பஞ்சு போன்று மென்மையடைந்தன;

காதுகள் அசைக்கும் சக்தியை இழந்தன; கண்களோ கூர்ந்த பார்வையை இழந்தன; மிகவும் மென்மையான



உணவினை உண்பதனல் குடலும் மெலிவடைந்தது. முடிவாகக் கூறுமிடத்து இவ்வகைகளில் மனிதன் மாக்களினும் தாழ்ந்தவனுகவே தன்னை ஆக்கிக்கொண்டான்.

"ஆயின், மக்கள் நாகரிக நிலையிலிருந்து மாறிப் பழையபடி ஆடுமாடுகள் போல் திரியவேண்டுமோ? அவ்வாறு திரிவதுதான் உயர்ந்த நிலையோ?" என நீங்கள் வினவுதல் கூடும். மக்கள் மறுபடியும் மிருகத்தன்மையை

அடைதல் வேண்டும் என்பது சிறிதும் பொருந்தாது. மக்கள் மாக்களினும் சிறந்தவர்களே. அவர்கள் அடைந்துள்ள நாகரிக நிலையும் சிறந்ததே. ஆனல் அம்மக்களுள் பலர் இப்போது அடைந்துள்ள நிலை மிருகத்தன்மையினும் தாழ்வானதென்றே கருதவேண்டி இருக்கிறது.

பறவை, மிருகம் முதலிய பிற உயிர்கள் புரியும் பல்வேறு தொழில்களும், பொதுவாக உண்ணுதல் உறங்குதல் என்னும் இவ்விரண்டிலே அடங்கி விடுகின்றன. ஆறறிவு படைத்தவன் என்னும் மனிதனும் தன் தொழில்களை அவ்விரண்டினுள் அடக்கிக்கொண்டு அவைகளைச் சரிவரச் செய்வதற்குப் போதிய வன்மையும் இல்லாதவனாய் இருந்தால் அவன் மாக்களினும் தாழ்வாக மதிக்கப்படுதல் நியாயமே அன்றோ?

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவைகளால் அறியும் அறிவோடு பகுத்தறிவையும் பெற்றுள்ள மனிதன் பல அற்புதங்களைக் கண்டறியும் ஆற்றல் வாய்ந்தவனாய் இருத்தல் வேண்டும். இக்கருத்தை ஒட்டியே திருவள்ளுவரும்,

“செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார்”

என்று கூறியுள்ளார். நீராவி யந்திரம், வானவூர்தி, ஒலி பரப்பும் கருவி, மின்சார ஒளி முதலிய அற்புதங்களைக் கண்டவர்கள் செயற்கரிய காரியங்களைச் செய்த பெரியோரே ஆவர். புத்தர் பெருமான், இயேசுநாதர், மகமதுநபி நாயகம் முதலிய மதத் தலைவர்களும் செயற்கரிய செய்த பெரியோர்கள் என்பதைக்கூறவேண்டுவதில்லை. அவ்வாறே

பல அற்புதங்களை இயற்றிய நாயன்மார்களும், ஆழ்வாராதியரும், திருவள்ளுவர், கம்பர் போன்ற அரிய பெரிய நூல்களை இயற்றிய பெரியோர்களும் செயற்கரிய செய்தவர்களே யாவர். இவ்வாறன்றி வேறு எத்தகைய பொதுச் செயலையும் கருதாது உண்டு உடுத்து உறங்கி உயிர் வாழும் சாதாரண மக்கள் அவ்வாறு உயர்ந்தோர்களாகக் கருதப்படமாட்டார்கள்.

ஆதலின் மாணவர்களே, நீங்கள் மக்களிற் சிறந்தவர்களாக ஆகுதற்கு முந்துதல் வேண்டும். மக்களிற் சிறந்தோராதல் எவ்விதம் என்பதை நீங்கள் அறிய விழைதல் கூடும். அதனைச் சிறிது ஆராயலாம்: கண், காது, வாய் முதலியவைகளைக் கடவுள் நமக்கும் தந்திருக்கின்றார்; மிருகங்களுக்கும் தந்திருக்கின்றார். மிருகங்கள் அவைகளைத் தம் உயிர் வாழ்க்கைக்கே பயன்படுத்திக் கொள்கின்றன. நாமும் அவைகளை அவ்வளவில் நிறுத்திக் கொள்ளுவதால் பயன் சிறிதும் இல்லை. பகுத்தறிவு வாய்ந்த மனிதன் அவைகளைக் கல்வி கேள்வி ஆராய்ச்சிகளில் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். மக்கள் தம் பகுத்தறிவின் சக்தியால் பேசுந்தன்மையைப் பெற்றிருக்கின்றார்கள். மிருகங்களுக்கோ இந்தச் சக்தி அவ்வளவு அதிகமாக இல்லை. இந்த ஒன்றினைக் கொண்டே மனிதன் மகிழ்ந்திருத்தல் ஆகாது. அவன் அந்தச் சக்தியினை மேலும்மேலும் வளர்த்தல் வேண்டும். அவ்வாறு வளர்ப்பதற்கு ஆதாரமாக இருப்பவைகள் கல்வி கேள்வி ஆராய்ச்சிகளே ஆகும்.

கல்வி என்பது நாமே ஒன்றைப் படித்துத் தெரிந்து கொள்வது. கேள்வி என்பது படிப்பதோடு நில்லாமல்

கற்றுவல்ல பெரியோர்பால் சென்று நமக்குள்ள ஐயங்களைக்கூறி அவைகளை விளக்கிக்கொள்ளுதல். ஆராய்ச்சி என்பது அவைகளைக் கொண்டு நம் அறிவால் யோசித்துப் பார்த்தல். இத்தகைய கல்வி கேள்வி ஆராய்ச்சிகள் இன்றி உயிர் வாழ்ந்து வருபவர்களைத் திருவள்ளுவர் என்னும் பெரியார் மிருகங்களுக்குச் சமம் என்றே கூறுகின்றார்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்"

என்று அவர் கூறியுள்ள பாடலை நன்கு கவனியுங்கள்.

ஆதலால், மனிதர்களாகிய நாம் சிறந்த நூல்களைக் கற்று அதன்படி நடந்து பேரும் புகழும் பெற முயல வேண்டும். அப்போதுதான் நாம் மிருகங்களினும் சிறந்தவர்களாகக் கருதப்படுவோம்.

அரும்பதம் :

மாக்கள்	கூர்ந்த	ஐயம்
ஸ்பரிசம்	ஆற்றல்	இலங்கு
விசித்திரம்	முந்துதல்	விழைதல்

அருந்தொடர் :

பகுத்தறிவு	கல்வி கேள்வி	வானவூர்தி

வினா :

1. மனிதர்களால் இயலாத சில விசித்திர சக்தியினைப் பிராணிகள் பெற்றுள்ளன என்பதற்கு இரண்டு உதாரணம் சொல்.

2. மனிதனுக்கு உள்ள ஆறு அறிவுகள் யாவை?

3. மெய், வாய், கண், மூக்கு, செவி — இவ்வைந்தினை யும் குறிக்கும் ஒரு சொல் எது?

4. எத்தகையினர் மனிதர்களுள் பெரியர், எவர் சிறியர்?

5. செயற்கரிய காரியங்களைச் செய்த பெரியோர்களுள் இருவர் பெயரைக் கூறு.

6. விலங்குக்குச் சமம் எவர்?

7. கல்வி கேள்வி — இத்தொடரை விளக்கு.

8. நாம் எப்போது மிருகங்களினும் சிறந்தவர்களாகக் கருதப்படுவோம்?

பயிற்சி:

1. விழைதல், முந்துதல், ஆற்றல்: இப்பதங்களின் பொருள் விளங்கும்படி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுது.

2. படத்தில் காட்டப்பட்டுள்ள காட்டு மனிதன், நாகரிக மனிதன் இவ்விருவருக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை களைப் படத்தைப் பார்த்து எழுது.

3. கீழ்வரும் தொடர்களைக் கருத்து முடிந்த வாக்கியங்களாக ஆக்கு.

(1) மனிதன் ஆறறிவை (2) பகுத்தறிவு பெற்ற
(3) செய்தற்கு அரிய செயல் (4) கல்வி கேள்வி

இலக்கணம்:

I. நாம் சில பதங்களைக் கவனித்துப் பார்த்தால் இது இன்ன பதத்திலிருந்து வந்தது என்று தெரிந்து கொள்ளலாம்.

உதாரணம் :

வந்தான் — வா	ஓடின — ஓடு
போனான் — போ	கண்டேன் — காண்
பறக்கிறது — பற	நின்றான் — நில்
எழுதுகிறான் — எழுது	வாங்கினோம் — வாங்கு

அடியில் வரும் பதங்கள் இன்னின்ன பதங்களிலிருந்து வந்தன என்று சொல்.

(1) தூங்கினான் (2) பேசுகிறாள் (3) படிக்கிறோம்
(4) தின்கிறாள் (5) நீந்துகிறது (6) கேட்டன.

II. 1 , இதற்குக் கால் புள்ளி என்று பெயர்.

2 ; இதற்கு அரைப்புள்ளி என்று பெயர்.

3 ? இதற்குக் கேள்விக்குறி என்று பெயர்.

4 ! இதற்கு வியப்புக்குறி என்று பெயர்.

ஆடு, மாடு, நாய், பூனை முதலியன வீட்டில் வளரும் பிராணிகள். — இங்கே கால் புள்ளி இடப்பட்டுள்ள இடங்களைக் கவனி.

மனிதன் ஆறறிவு வாய்ந்தவன்; பேசக்கூடிய சக்தியையும் உடையவன் — இவ்வாறு இரண்டாவது வாக்கியம் எழுவாய் இல்லாமல் வரும்போது முதல் வாக்கியத்தின் இறுதியில் அரைப்புள்ளி இடவேண்டும்.

இவன் மனிதனா? மனிதன் ஏன் தாழ்ந்த நிலையை அடைந்தான்? — இவ்விதம் வினாவைத் தெரிவிக்கும்போது வினாக்குறி இடவேண்டும்.

அந்தோ பாவம்! ஆ-ஆ! என்ன அழகு! — இத்தகைய வாக்கியங்களில் உள்ள வியப்புக்குறிகளைக் கவனி.

III. இந்தப் பாடத்திலிருந்து வியப்புக்குறி, அரைப்புள்ளி, கேள்விக்குறி இவைகளுக்கு ஒவ்வோர் உதாரணம் கொடு.



13. காலத்தை வீணாக்காதே

"இதோ வந்தேன் ஒரே நிமிடத்தில் —"

"முடித்து விடமாட்டேனா ஒரு நொடியில் —"

என்றெல்லாம் நாம் சொல்வது வழக்கம். ஒரு நிமிடம் என்பது நமக்கு மிகவும் குறைந்த காலமாகத் தோன்றுகிறது. கவலை கொள்ளக்கூடிய ஒரு பெரிய விஷயமாக நாம் அதை நினைப்பதில்லை. ஆனால் அச்சிறு கால அளவையில் எவ்வளவு மகத்தான காரியங்கள் நிகழ்ந்தன, நிகழ்கின்றன என்பதை நாம் உணர்வதில்லை.

ஒரு மைல் தூரத்தை ஒரு நிமிடத்தில் கடந்து விடுகிறது புகைவண்டி. அதே காலத்தில் குறைந்தது ஐந்தாறு மைல் தூரம் பறந்துவிடும் ஆகாய விமானம். ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ள நண்பருடன் கம்பியில்லாத் தந்தி மூலம் பேசும்பொழுது, நம்முடைய பேச்சின் ஒலி

அங்குச் செல்வதற்கு அரை விஞடி கூட ஆவதில்லை. விழிப்பிலும், துயிலிலும் நம்மை அறியாமலே ஒரு பெரிய காரியம் நிகழ்கின்றது. இந்தப் பூமியானது நிமிஷத்திற்கு 1,200 மைல் வேகத்தில் நம்மை வெட்ட வெளியில், இழுத்துச் செல்கின்றது. நம்மை மாத்திரமா, மலைகளென்ன, மாநதிகளென்ன, கடல்களென்ன, காடுகளென்ன, நாடுகளென்ன, நகரங்களென்ன, யாவற்றையும் இழுத்துச் செல்கின்றதல்லவா ?

மற்றும், ஒரு நிமிட நேரத்தில் யந்திரங்கள் எவ்வளவு அதிகமான பொருள்களைத் தயாரிக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியுமா ? ஒரே நிமிடத்தில் ஒரு யந்திரம் 100 மின்சார விளக்குகளைத் தயாரிக்கிறது. 1200 மெழுகு வத்திகளையும், 2500 தையலூசிகளையும் ஒரே நிமிடத்தில் தயாரிக்கக்கூடிய யந்திரங்களுமுண்டு. ஹென்றி போர்டு (Henry Ford) துரையவர்களின் தொழிற் சாலையில் நிமிஷத்திற்கு ஒரு மோட்டார் யந்திரம் தயாரிக்கப்படுகின்றதென்பது நமக்கு வியப்பை விளைவிக்கவில்லையா ? இம்மாதிரியான தொழிற்சாலைகளில் ஒரு மணி நேரம் வீணுக்கப்பட்டால், எவ்வளவு நஷ்டம் ஏற்படுமென்பதை நீங்கள் யோசித்துப் பாருங்கள்.

இஃது இவ்வாருக, நமது தினசரி வாழ்க்கையில், நாம் ஒரு நிமிஷ நேரத்தைத் தக்க வழியில் பயன்படுத்துவதனுல் விளையும் நன்மைகள் மிகப் பல; அந்த நிமிஷத்தைப் புறக்கணிப்பதால் விளையும் தீமைகளும் பலப்பல.

உதாரணமாக, நீதிபதியின் உத்தரவின்படி ஒருவன் தூக்கிலிடும் சமயத்தில் இருக்கின்ருன் என்று வைத்துக் கொள்வோம். அதைத் தடுக்க அரசரின் ஆணை பெற்று

விரைந்து வருகின்றான் அவன் நண்பன். எவ்வளவு விரைவாகக் காரியங்களைச் செய்தும் சீக்கிரம் வர முடியவில்லை. தூக்கிலிடுவதற்கு அரை நிமிடம்தான் முன்னதாக அவனால் வர முடிந்தது. நண்பர் இருவரும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டனர். அதே அரை நிமிடம் தாமதமாகி இருந்தால் அந்த நண்பனின் நிலை எவ்வாறாகியிருக்கும் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

ஒருவர் நூறு ரூபா சம்பளமுள்ள ஓர் உத்தியோகத்திற்காக அதிகாரியைப் பார்க்கச் சென்றார். சென்ற இடத்தில் தமக்குமுன் ஒருவர் வந்து அங்குப் பேசிக்கொண்டிருப்பதை அவர் கண்டார்; தாம் தேடி வந்த உத்தியோகத்திற்குத் தமக்கு முன் வந்தவர் உத்தரவு பெற்று வெளிவருவதையும் அறிந்தார்; அங்கு நின்றிருந்த காவலாளி மூலம், ஒரு நிமிடத்துக்கு முன்புதான் அவர் அங்கு வந்ததாகத் தெரிந்து, "ஆ! ஒரு நிமிடம் முன்னதாக நான் வராமற்போனேனே!" என்று எண்ணி வருந்தினார். இத்தகைய நிகழ்ச்சிகளை நாம் எவ்வளவோ காணலாம்.

நம்முடைய சோர்பேறித்தனத்தால் நம்மையறியாமலே எத்தனையோ ஆயிரக்கணக்கான நிமிடங்கள் வீணாக்கப்படுகின்றன. சென்ற காலத்தை நாம் திரும்பப் பெற முடியாது. ஒவ்வொரு நிமிடமும் நம்மை வயோதிகராக்கிக் கொண்டே வருகின்றது. குழந்தையைச் சிறுவனாகவும், சிறுவனை இளைஞனாகவும், இளைஞனைக் கிழவனாகவும் மாற்றுவது காலமன்றோ! இதை நன்குணர்ந்த பெரியோர்கள் காலத்தை வீணாக்காது பயன்படுத்திக் கொள்வார்கள்.

புத்தர்பிரான் வருடக் கணக்காகத் தம் உடலை வருத்தித் தவமியற்றினர். ஆனல் அவருக்கு மெய்ஞானம் கிட்ட வில்லை. ஒருநாள் அவர் போதிவிருக்ஷத்தின் அடியிலமர்ந்து ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார். திடீரென அவருக்கு ஞானம் உதயமாயிற்று. ஞானேதயமான அந்த ஒரு நிமிடம் மிகப் புனிதமான நிமிடமாகவே இருந்திருக்கவேண்டும். அந் நிமிடத்திலிருந்து உலகிற்கு ஏற்பட்ட மாறுதல் கொஞ்ச மல்லவே! புத்த மதம் எங்கணும் பரவியதன்றே?

சுவாமி விவேகானந்தர் சிகாகோ நகரில் நடந்த உலக மத மாநாட்டிற்குச் செல்வதற்காகக் கப்பலேறி அமெ ரிக்கா சென்றார். அங்குப் போய்ச் சேர்வதற்குள் தம்மிடம் இருந்த பணம் எல்லாவற்றையும் அவர் செலவழித்து விட் டார்; தம்மை அறிமுகப்படுத்தக்கூடிய கடிதங்களையும் இழந்துவிட்டார்; இராப்பொழுது ஏதோ சிறிது அருந்தி, நீராவி வண்டி தங்குமிடத்தில் துயின்றார்; காலையில் எழுந்து கையில் தடியுடனும், காஷாய அங்கியுடனும் நடந்து கொண்டே உரக்கப் பாடினர். அதே சமயத்தில் அவ்வழியாக மோடாரில் வந்த அம்மாநாட்டின் காரிய தரிசியாராகிய ஓர் அம்மையார் அவரைக் கவனித்தார். அவ்வம்மையார் அந்த ஒரு நிமிடநேரம் வேறு சிந்தனையில் இருந்துவிட்டிருந்தாலும், எவனே பிச்சைக்காரன் என்று எண்ணி அவரை விசாரிக்காமல் போய்விட்டிருந்தாலும், அல்லது வேறு அவசர நிமித்தமாகப் போகவேண்டி யிருந் திருக்குமானலும், அவ்வம்மையாரது மோட்டார் வண்டி தொலைதூரம் சென்று விட்டிருக்கும்; விவேகானந்தர் சரிதமும் வேறு விதமாக எழுதப்பட்டிருக்கும். சிகா

கோவில் அன்று அவர் செய்த அரிய சொற்பொழிவை உலகினர் பெற்றிருக்க முடியாது அல்லவா?

ஆகவே பிள்ளைகளே, நிமிடத்தின் முக்கியத்தை நீங்கள் நன்குணர்ந்து, காலத்தை வீணாக்காது அதனை நல்வழியில் பயன்படுத்துங்கள்; படிக்கும் வேளையில் படியுங்கள்; உண்ணும் வேளையில் உண்ணுங்கள்; தேகப் பயிற்சியையும், இறைவழி பாட்டையும் குறித்த வேளையில் செய்யுங்கள்; 'செயற்கரிய காரியம் செய்யும் காலம் எப்பொழுது வாய்க்குமோ' என்று அதற்காவன செய்து அச்சமயத்தை எதிர்பார்த்திருங்கள்.

அரும்பதம்:

மகத்தான	துயில்	புனிதம்
நிகழ்தல்	வியப்பு	அங்கி
விழிப்பு	வயோதிகர்	வழிபாடு

அருந்தொடர்:

தினசரி வாழ்க்கை	சொற்பொழிவு
ஞானோதயம்	தொலைதூரம்

வினா:

1. ஒரு நிமிடத்தில் நடக்கக்கூடிய பெரிய காரியங்களுள் மூன்று சொல்.
2. இந்தப் பூமி ஒரு நிமிடத்துக்கு எத்தனை மைல் வேகத்தில் சுற்றுகிறது?
3. புத்தருக்கு எப்போது ஞானோதயமாயிற்று?
4. விவேகானந்தர் சரிதம் வேறு விதமாக எழுதப்பட்டிருக்கும் — எப்போது?

5. உலக மத மாநாடு என்றுல் என்ன? அது எங்கே நடந்தது?

பயிற்சி :

1. ஹேன்றி போர்டு (Henry Ford) - இந்தப் பிரபுவைக் குறித்து இரண்டு வாக்கியம் எழுது.
2. நீதிமன்றத்தில் வழங்கும் வார்த்தைகளுள் மூன்று எழுது.
3. மைல், நகரம், விளக்கு, ஊசி, நன்மை, தீமை, வாழ்க்கை, நண்பன், நிமிடம், வருடம் — இவை இன்னின்ன பெயர்ச் சொற்கள் என எழுது.
4. விவேகானந்தர், கையில் தடியுடன் நடந்துசென்றுர். — இவ்வாக்கியத்தில் உள்ள பெயர்ச் சொற்கள் எவை? அவை இன்னின்ன வேற்றுமை எனவும் எழுது.
5. இந்தப் பாடத்திலிருந்து முற்றுவினை இரண்டும், எச்ச வினை இரண்டும் எடுத்து எழுது.

இலக்கணம் :

I. காலம் மூன்று வகைப்படும் என்பதும், அவை இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என்பன என்பதும் உங்களுக்குத் தெரியும்.

வந்தான் கண்டார்	இறந்தகாலம்
படிக்கிறுன் தூங்குகின்றுன்	நிகழ்காலம்
படிப்பான் எழுதுவான்	எதிர்காலம்

கீழ் வருபவை என்ன என்ன காலங்களைக் குறிக்கின்றன?

1. வருகின்றுன்	2. இருந்தார்	3. சென்றுர்
4. வாழ்வீர்கள்	5. பாடினுர்	6. கேட்பாள்

II. வினைச்சொற்கள் காலத்தைக் காட்டும்; பெயர்ச்சொற்கள் வேற்றுமையைக் காட்டும்.

வேற்றுமையைக் காட்டுதற்கு, ஐ, ஆல், ஒடு, உடன், கு, இல், இன், நின்று, இருந்து, அது, உடைய, இடத்தில், கண் முதலிய உருபுகள் வரும்.

உதாரணம்: மரத்தை, இராமனால், சீதையோடு, அவனுக்கு, என்னுடைய, வீட்டில் — இவைகளில் தடித்த எழுத்தில் உள்ளவை வேற்றுமை உருபுகள்.

காலத்தைக் காட்டுதற்கு, த், ட், ற், இன், கிறு, கின்று, ப், வ் முதலியவைகளுள் யாதேனும் ஒன்று வினைச்சொல்லின் இடையில் வரும்.

உதாரணம்:	செய்தார்	— த்	(த்+ஆ=தா)
	கேட்டான்	— ட்	(ட்+ஆ=டா)
	சென்றாள்	— ற்	(ற்+ஆ=றா)
	ஓடினான்	— இன்	(ஓடு+இன்=ஓடின்)
	வருகிறது	— கிறு	(கிறு+அ=கிற)
	சொல்கின்றார்	— கின்று	(கின்று+ஆர்)
	நடப்பான்	— ப்	(ப்+ஆ=பா)
	பாடுவாள்	— வ்	(வ்+ஆ=வா)

குறிப்பு — வேற்றுமையின் உருபுகளும், வினைமுற்றின் இடைநிலையாக வரும் சொற்களும், போல, மற்று, பிற என்னும் சொற்களும் இடைச்சொற்கள் ஆகும்.

14. மகன் அளித்த பதில்

இராஜகோபால் செட்டியார் சத்திரம்,
சந்நிதித் தெரு, திருக்கழுக்குன்றம்,
25-9-1941.

அருமை அன்னையார் அவர்கட்கு :

வணக்கம். தாங்கள் எழுதிய கடிதம் கிடைத்தது. நான் தங்கள் கடிதத்தைக் கண்டதும் ஒருபுறம் மிக்க மகிழ்ச்சியும், மற்றொருபுறம் வெட்கமும் அடைந்தேன்; தங்கள் பழிச்சொல்லுக்கு இனியும் ஆளாகக் கூடா தென்று கருதி, இன்றே இக்கடிதம் எழுதுகிறேன். இது வரையில் பதில் எழுதாத என் பிழையைப் பொறுத் தருள வேண்டும். இது வேண்டுமென்று செய்த குற்ற மன்று. விளையாட்டுப் பராக்குதான் இதற்குக் காரணம்.

தாத்தாவும், ஆயாவும் என்னைக் கண்போல் பார்த்துக் கொள்கிறார்கள். தாத்தாவுக்கு எவ்வளவோ வேலையிருந் தும், அவைகளையெல்லாம் விட்டுவிட்டு, நான் போகுமிட மெல்லாம் என்னை நிழல்போல் தொடர்ந்து வருகிறார். நான் அவருக்கு இவ்வளவு வருத்தம் கொடுத்தேனென்று இது வரையில் தெரிந்துகொள்ளவில்லை; தங்களுடைய கடிதத்தி லிருந்துதான் அறிந்தேன்; இனிமேல் அவர் மனம் நோகும் படி நடக்க மாட்டேன். தங்கள் கடிதம் கண்டதும் நான் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டேன்.

தாங்கள் எழுதியதுபோல, திருக்கழுக்குன்றத்தில் எனக்கு யாவும் புதுமையாகவே இருக்கின்றன. இதைப்

போன்ற அழகான ஊரை நான் இதுவரையில் பார்த்ததே யில்லை.

இதை விட்டுவர எனக்கு மனமேயில்லை. இங்குமட்டும் ஒரு நல்ல பாடசாலையிருந்தால், இங்கேயே நான் தங்கி விடுவேன். பட்டணத்திலுள்ளதுபோல் இங்கே சாக்கடை நாற்றமும், தெருப் புழுதியும், ஜனநெருக்கமும், மக்கள் இரைச்சலும், வண்டிகளின் சப்தங்களும் இல்லை.

தங்களுடைய புத்திமதி எனக்கு நல்ல சமயத்தில் உதவியாய் இருந்தது. எனக்கு நேரிடக்கூடுமென்று தாங்கள் அஞ்சின ஆபத்துகளுக் கெல்லாம், ஒரு மயிரிழை தப்பியிருந்தால் நான் உள்ளாகி யிருப்பேன். வேதகிரீஸ்வரர் என்னை அந்த ஆபத்துகளினின்றும் காப்பாற்றினரென்றே சொல்லவேண்டும்.

நான் ஒருநாள் சங்கு தீர்த்தத்தின் படிக்கட்டுகளில் வேகமாக இறங்கும்போது கால் சறுக்கி விழப்போனேன்; மிகவும் சாமர்த்தியமாய்ச் சமாளித்துக் கொண்டேன். நல்ல வேளையாகத் தாத்தா அதைப் பார்க்கவில்லை. பார்த்திருந்தால் அவர் ஊரையே ஒன்று கூட்டியிருப்பார். மற்றொரு நாள், நான் மலைப்படிக்கட்டுகளின் மேல் மிக அவசரமாய் ஓடினேன். சிறிது நேரத்துக்கெல்லாம் எனக்கு மேல் மூச்சு உண்டாயிற்று. நான் உடனே பக்கத்தில் வளர்ந்திருந்த ஒரு மரத்தின் வேரைப் பற்றிக்கொண்டு நிதானித்து உட்கார்ந்தேன்.

29-ம் தேதி என்னைச் சென்னைக்கு அழைத்துப் போவதாகத் தாத்தா சொல்லியிருக்கிறார். நான் தங்களையும், அப்பாவையும் காண மிக்க ஆவலாயிருக்கிறேன். திருக்

கழுக்குன்றத்தைப் பற்றித் தங்களிடம் பேசுவதற்குப் பல சங்கதிகள் இருக்கின்றன. கழுகுகள் வந்து சாப்பிடுவதைப் பற்றி இந்த ஊரார் ஏதேதோ கதைகள் சொல்லுகின்றனர். அவைகள் உண்மைதானா என்று உங்களைக் கேட்டுத்தான் தெரிந்துகொள்ளவேண்டும். மகாபலிபுரம் விளக்குக் கூண்டை நான் இன்றுதான் பார்க்கப் போகிறேன். மலை சுற்றி வரும்போதெல்லாம் நான் "திருமலை சொக்கம்மா" என்று கூவி, எதிரொலி கேட்டு ஆனந்தப்படுகிறேன். தாங்கள் கடிதம் எழுதுவதற்கு முன்பே நான் தாத்தாவிடமிருந்து இதைத் தெரிந்துகொண்டேன். என் வணக்கத்தை அப்பாவுக்குத் தெரிவிக்கவும்.

இங்ஙனம்:

தங்கள் அன்புள்ள மகன்,

வ. பா. புருஷோத்தமன்.

விலாசம்:

திரு. வ. பா. தாமரைக்கண்ணி அம்மாள்,
"பொன்னரங்கம்",
15, முத்து கிருஷ்ணன் தெரு,
சென்னை.

அரும்பதம்:

சந்நிதி	புழுதி	நிதானம்
மன்னிப்பு	ஆவல்	இரைச்சல்

அருந்தொடர்:

பழிச்சொல்	புத்திமதி	மயிரிழை

வினு :

1. புருஷோத்தமன் தன் அன்னையின் கடிதத்தைக் கண்டதும் ஒருபுறம் மகிழ்ச்சியும், மற்ருெரு புறம் வெட்கமும் அடைந்தானும். ஏன்? காரணம் கூறு.
2. கண்போல் பார்த்துக் கொள்ளுதல் என்ருல் என்ன?
3. புருஷோத்தமன் ஏன் பட்டணத்தை வெறுத்தான்?
4. திருக்கழுக்குன்றத்தில் கழுகுகள் வந்து சாப்பிடுவதைக்குறித்து என்ன கதை சொல்லுகின்ருர்கள்?
5. மகாபலிபுரத்தில் விளக்குக்கூடு எதற்காக வைக்கப் பட்டிருக்கிறது?
6. கடிதம் எழுதும்போது என்னென்ன விஷயங்கள் அவசியம் இருக்கவேண்டும்?

பயிற்சி :

1. எந்த எந்த வகையில் நாட்டுப்புறம் சிறந்தது? எந்த எந்த வகையில் பட்டணம் சிறந்தது? தெளிவாக எழுது.
2. வ. பா. புருஷோத்தமன்—இதில் வ. பா. இவ்வெழுத்துக்கள் எவைகளைக் குறிக்கின்றன?
3. நான் நிதானித்து உட்கார்ந்தேன் — இதை நிகழ்கால வினைச்சொல் அமைத்து எழுது.
4. ஏதேதோ கதைகள் சொல்லுகிருர்கள் — இதை இறந்த கால வினைச்சொல் அமைத்து எழுது.
5. கீழ் வருபவைகளில் தடித்த எழுத்தில் உள்ளவை இன்ன வேற்றுமை என எழுது.

(1) தாத்தாவுக்கு எவ்வளவோ வேலை.
(2) திருக்கழுக்குன்றத்தில் எனக்கு யாவும் புதுமை.
(3) ஒரு மரத்தின் வேரைப் பற்றிக்கொண்டேன்.

இலக்கணம் :

I. எழுத்துக்களில் உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர் மெய்யெழுத்து, ஆயுத எழுத்து என நான்கு வகை உண்டு என்பது உனக்கு முன்பே தெரியும்.

(1)	உயிரெழுத்து	12	(அ முதல் ஔ வரையில்)
(2)	மெய்யெழுத்து	18	(க் முதல் ன் வரையில்)
(3)	உயிர்மெய்	216	(க, கா முதல் னௌ வரையில்)
(4)	ஆயுதம்	1	(ஃ)

கீழ்வரும் பதங்களில் உள்ள ஒவ்வோர் எழுத்தும் இன்ன இன்ன எழுத்து எனக் கூறு.

(1) அன்னையார் (2) இங்ஙனம் (3) சென்னை

II. உயிரெழுத்தில், குறில், நெடில் என இருவகை உண்டு.

குறில் : 5 — அ, இ, உ, எ, ஒ
நெடில் : 7 — ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

மெய்யெழுத்தில், வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகை உண்டு.

வல்லினம் : 6 — க், ச், ட், த், ப், ற்
மெல்லினம் : 6 — ங், ஞ், ண், ந், ம், ன்
இடையினம் : 6 — ய், ர், ல், வ், ழ், ள்

உயிர்மெய்யெழுத்து, குறில் நெடில் என்னும் இருவித ஓசை அளவினையும், வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவித இன வகையினையும் பெற்று வரும்.

உதாரணம் : பு து மை

1 பு — குறில்; வல்லினம்
2 து — குறில்; வல்லினம்
3 மை — நெடில்; மெல்லினம்

மேலே காட்டியபடி அடியில் வரும் எழுத்துக்களுக்கு ஓசை அளவும், இன வகையும் கூறு.

தா - ம - ரை, க - ழு - கு, தி - ரு - ம - லை

15. பிராணிகள் செய்துகொள்ளும் மருத்துவ முறைகள்

மாணவர்களே, நீங்கள் உங்கள் வாழ்நாளில் வைத்தியருடைய உதவியை நாடாமல் இருக்கமுடியுமா? அவ்விதம் இருக்க இயலுமானல் அஃது ஒரு பெரும் பாக்கியமேயாகும். பெரும்பாலும் சிறுவர்களும், சிறுமியரும் ஆண்டுக்கு ஒரு முறையாகிலும் மருத்துவரிடம் செல்லாமல் இருக்கமாட்டார்கள். ஜலதோஷம், காய்ச்சல், தலைவலி, இருமல், சிரங்கு முதலிய சாதாரண நோய்கள் குழந்தைகளுக்கு அடிக்கடி வருதல் உண்டு. அவைகளைத் தீர்த்துக்கொள்ள அவர்கள் மருத்துவரிடம் செல்வது நாம் கண்கூடாகக் காண்பதே ஆகும்.

மனிதர்களுக்கு நோய்கண்டால் அதைத் தீர்க்க மருத்துவ நிபுணர்கள் இருக்கின்றார்கள். ஆனால் பிராணிகளுக்கு நோய்கண்டால் அதை யார் தீர்ப்பது? "பிராணி வைத்தியர்கள் இருக்கின்றார்களே!" என்று நீங்கள் சொல்லலாம். வீட்டில் வளரும் பிராணிகளின் எஜமானர் பணக்காரராய் இருந்தால், அவர் அவைகளைப் பிராணி வைத்தியரிடம் அழைத்துச் செல்லலாம். இத்தகைய நிலையில் உள்ள பிராணிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கும். வீட்டில் வளராமல், மனிதருடைய ஆதரவின்றிக் காட்டிலும், மலையிலும் திரியும் பிராணிகள் கோடிக்கணக்காக இருக்கின்றன. அவைகட்கு நோய்

வந்தால் அவை எப்படித் தமக்குத் தாமே மருத்துவம் செய்து கொள்கின்றன என்பதைத்தான் நீங்கள் இந்தப் பாடத்தில் தெரிந்துகொள்வீர்கள்.

"பிராணிகளுக்குக்கூட நோய் வருகிறதா?" என்று உங்களில் சிலர் வியப்புடன் கேட்கலாம். நாய்களையும், பூனைகளையும் வளர்க்கும் பிள்ளைகள் இந்தக் கேள்விக்கு மிக எளிதில் பதில் சொல்லிவிடுவார்கள். முருகன் என்னும் சிறுவன் ஒருநாள் மாலை, பாடசாலையிலிருந்து வீட்டுக்குப் போனான். அவனால் மிகவும் அருமையாக வளர்க்கப்பட்ட 'வீரன்' என்னும் நாய் வழக்கம்போல் அன்று அவனை எதிர்கொண்டு அழைக்கவில்லை. அன்று அது அவனுடைய கண்களுக்கே தென்படவில்லை. முருகன் வீடு முழுதும் தேடிப்பார்த்தான். உபயோகமற்ற மரச் சாமான்கள் போட்டுவைக்கப்பட்டுள்ள ஓர் இருண்ட சிறு அறையின் ஒரு மூலையில், அது தன் வாலைப் பின்னங்கால்களுக்கு இடையில் வைத்துச் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தது. தன்னைக் கண்டதும் அது வழக்கம்போல் வாலை ஆட்டிக்கொண்டு வந்து மேல் விழுந்து ஆசையோடு விளையாடும் என்று முருகன் எதிர்பார்த்தான். ஆனால் அது அப்படிச் செய்யவில்லை. அதற்கு மாறாக அது முருகனைக் கண்டதும் பற்களை நறநறவென்று கடித்து ஒரு பயங்கரமான குரலை எழுப்பியது. முருகன் அதனிடம் போக அஞ்சினான். அதன் கண்களிலிருந்து மாலை மாலையாய் நீர் வடிந்தது. அதன் வாயிலிருந்து எச்சில் நூல் போன்று சொட்டிக் கொண்டிருந்தது. அதற்கு உடல் நலமில்லை என்பதை முருகன் அப்போதுதான் தெரிந்துகொண்டான்.

இவ்விதமே பூனை, மாடு, கோழி முதலியனவும் நோய் வாய்ப்பட்டு இருத்தலை நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

நோய் அடைந்திருக்கும்போது எதைச் சாப்பிட வேண்டும் எதைச் சாப்பிடக்கூடாது என்று மனிதர்கட்குத் தோன்றுதல் போன்று மிருகங்கட்கும் அவ்வுணர்ச்சி ஏற்பட்டுளது. இந்த விஷயத்தில் அவை மனிதர்களைக் காட்டிலும் மிகவும் திறமையைக் காட்டுகின்றன என்றும் நாம் சொல்லலாம்.

மனிதர்களுக்கு நோய் காணும்போது மருத்துவர் பேதி ஆகுதற்கு மருந்து தருகின்றார் அல்லவா? அந்தப் பேதி மருந்துகள் பெரும்பாலும் புல் பூண்டுகளிலிருந்தே கிடைக்கின்றன. பிராணிகள் நோயால் வருந்துங்காலத்து இத்தகைய புற்பூண்டுகளைத் தாமே தேடித் தின்கின்றன.

நீ உன் நாயைக் கூட்டிக்கொண்டு சாலையோரமாக உலாவச் செல்லும்போது அந்த நாய் சாலை யோரங்களில் உள்ள புற்பூண்டுகளின் அருகே சென்று ஏதோ ஒன்றைத் தேடுவதைப்போல் அங்குள்ள புற்களையும் பூண்டுகளையும் மோந்து மோந்து பார்த்தலை நீ கவனித்திருக்கக்கூடும். அது அங்குள்ள பலவற்றையும் இவ்விதம் மோந்து பார்த்து, முடிவில் ஏதோ ஒன்றை மிக ஆவலாய்க் கடித்துத் தின்பதையும் நீ கவனித்திருத்தல் கூடும். அறுகம்புல்லின் நுனியை நாய் இப்படிக் கடித்துத் தின்கின்றதென்று சிலர் சொல்லுகின்றார்கள். இதுவும் வேறு பலவும் நாய் நோய் கொண்டு இருக்குங் காலத்தில் தேடித் தின்னும் மூலிகைகளாகும். நாயுருவி, நாயுள்ளி, நரிவெண்காயம், நாய்க்கடுகு,

நாய்ச்சீரகம், நாய்ப்பயறு, நாய்த்துளசி முதலிய பெயர்களாலேயே, இவை நாய் நரி முதலிய மிருகங்களுக்கு மருந்தாக உதவும் மூலிகைகளாக இருக்கலாம் என்பது தெரிகின்றதல்லவா? இவ்விதமே ஆடுமாடு முதலியவைகளும் இத்தகைய மூலிகைகளைத் தேடித்தின்று தம் நோய்களைத் தீர்த்துக்கொள்கின்றன.

பிள்ளைகளே, நீங்கள் நாட்டுப்புறங்களுக்குச் சென்றிருப்பீர்கள். அங்கேயுள்ள மந்தைவெளிகளில் மாடு, எருமை, ஆடு முதலியவைகளின் முதுகின்மேல் காக்கை



யாவது, ஒருவிதக் கரிக்குருவியாவது உட்கார்ந்து சவாரி செய்வதையும், அவைகள் அவ்வப்போது இந்த மிருகங்களின் முதுகில் தம் அலகினல் குத்துவதையும் நீங்கள் கவனித்திருக்கலாம். சில வேளைகளில் இந்த மிருகங்கள் தம் தலையைத் தரையின்மேல் நீட்டிவைத்துப் படுத்துக்கொண்

டிருக்கும். அப்போது காக்கை பறந்து வந்து அவை களின் காதுகளுக்குள் தன் அலகை இட்டுக் குத்திக்கொண் டிருக்கும். “ஐயோ! ஈதென்ன கொடுமை! இந்தக் காக்கை இந்த எருமையை இப்படிச் சித்திரவதை செய்கிற தே! இந்த எருமைதான் ஏன் சும்மா இருக்கிறது? காக் கையை விரட்டி விடக்கூடாதா!” என்று நீங்கள் அப் போது இரங்குவீர்கள். ஆனால் உண்மை அதுவன்று. அந்த எருமைக்கு உகந்ததைத்தான் அந்தப் பறவை செய் கிறது. எருமையின் உடம்பின்மேல் மேய்ந்து அதற்கு இன்னலை விளைவிக்கும் புழு பூச்சிகளை அந்தக் காகம் கொத்தித் தின்னுவதோடு, அந்த எருமையின் காதுகளில் உள்ள அழுக்கு, புழு பூச்சி முதலியவைகளையும் கொத்தித் தின்கின்றது. எருமையும் அந்தக் காக்கை குத்துவதற்கு இசைவாகத் தன் காதுகளைத் திருப்பித் திருப்பிக் காட் டிக்கொண்டிருக்கும். இத்தகைய விலங்குகளுக்குக் காகமே காதுநோய் தீர்க்கும் வைத்தியராக விளங்குகிறது.

‘இலங்கணம் பரம ஔடதம்’ என்னும் மருத்துவ முறையை மிருகங்களே பெரும்பாலும் கடைப்பிடிக்கின் றன. சிசுக்களுக்கு மருத்துவம் புரிவதிலும் மிருகங்கள் சிறந்தவை என்பதைப் பூனை தன் குட்டிகளை வளர்ப்ப தைக் கவனிப்பவர்கள் நன்கு தெரிந்துகொள்ளலாம். இன் னும் மிருகங்கள் இரண வைத்தியமும் செய்துகொள்கின் றன. காட்டு மனிதன் என்று சொல்லப்படும் ஒரு வாலில் லாக்குரங்கின் விலாப்புறத்தில் ஒரு கூர்மையான மரக் கொம்பு ஆழமாகப் பாய்ந்துவிட்டது. அப்போது அந்தக் காயத்திலிருந்து இரத்தம் பெருக்கெடுத்தோடியது. இரத்தம்

வடிவது நிற்காவிட்டால், தான் இறந்துபோகநேரும் என்பதை அக்குரங்கு தெரிந்துகொண்டது போலும்! அது உடனே ஓர் ஆற்றங்கரைக்குச் சென்று, அங்கிருந்த சுத்தமான களிமண்ணோடு சில இலை தழைகளையும் தண்ணீர் விட்டுப் பிசைந்து ஒருவித பசை செய்தது. பிறகு அது அந்தப் பசையினைக் காயத்தின் மீது அப்பி, இரத்தம் வடிவது நிற்கும் வரையில், நெடுநேரம் அதைக் கையால் பிடித்துக்கொண்டு இருந்தது.

மாணவர்களே, மிருகங்கள் செய்துகொள்ளும் மருத்துவ முறைகள் மிகப் பல. நாம் அவைகளின் செயல்களைக் கவனித்து வந்தோமானால் நமக்குப் பயன்படும் பல புதிய மருத்துவ முறைகளை நாம் தெரிந்து கொள்ளலாம். மலச் சிக்கலுக்காகச் செய்து கொள்ளும் 'எனிமா' என்னும் மருத்துவ முறையைக்கூடச் சில பறவைகள் கையாளுகின்றன என்று ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றார்கள்.

நோய் வந்தபிறகு அதற்குச் சிகிச்சை செய்வதைவிட நோய் வராமல் தடுத்துக்கொள்ளுதல் மிகவும் சிறந்ததல்லவா? இந்த விதியைப் பிராணிகள் நன்றாகத் தெரிந்துகொண்டுள்ளன. மித உணவு கொள்ளுதல், உண்ட உணவு செரித்த பின்னரே வேறு உணவு உட்கொள்ளுதல், உள்ளும் புறமும் சுத்தமாக இருக்கப் பார்த்துக்கொள்ளுதல் முதலியவைகளையும் மிருகங்கள் கவனிக்கின்றன. உடம்பில் அழுக்குச் சேராதபடி பூனை தன் உடம்பில் உள்ள உரோமங்களை அடிக்கடி நாவினால் நக்கிக்கொள்கிறது; நாய் நீரில் விழுந்து குளிக்க விரும்புகிறது. இவ்விதமே பறவைகளும் புரிகின்றன. ஆனால் "குளிப்பதற்கு வாடா'

என்று தாயார் கூப்பிட்டால் எத்தனை சிறுவர்கள் அழுமூஞ் சித்தனம் பண்ணுகின்றார்கள்! அந்த அசுத்தப் பிள்ளைகள் நாய், பூனை, சிட்டுக்குருவி முதலியவைகளிடமிருந்தாகிலும் நல்ல பாடம் கற்றுக்கொள்வார்களாக.

அரும்பதம் :

கண்கூடு	வியப்பு	இன்னல்
நிபுணர்	விரட்டுதல்	இலங்கணம்
மூலிகை	உகந்து	சிகிச்சை

அருந்தொடர்:

நறநறவென்று புற்பூண்டு பரம ஔடதம்

வினு :

1. சாதாரண நோய்கள் எவை? அபாயகரமான நோய்கள் எவை? ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணம் கூறு.
2. மனிதருடைய ஆதரவில்லாமல் காட்டிலும், மலையிலும் வாழும் பிராணிகளுள் மூன்றின் பெயர் கூறு.
3. நாய்க்கு உடல் நலமில்லை என்பதை முருகன் எவ்வாறு உணர்ந்தான் ?
4. 'இவ்விஷயத்தில் மனிதனைக் காட்டிலும் மிருகங்கள் மிகவும் திறமையைக் காட்டுகின்றன' — எவ் விஷயத்தில் ?
5. விலங்குகளுக்குக் காதுநோய் தீர்க்கும் மருத்துவர் யார் ?
6. 'இலங்கணம் பரம ஔடதம்' — இப்பழமொழியின் பொருள் என்ன ? விளக்கமாகக் கூறு.

பயிற்சி :

1. முருகன் என்னும் சிறுவன், ஒருநாள் மாலை, பாடசாலையிலிருந்து வீட்டுக்குப் போனான் — தடித்த எழுத்தில் உள்ள பதங்கட்குத் திணை, பால், எண், இடம் முதலியன கூறு.

2. நீங்கள் உங்கள் வாழ்நாளில் வைத்தியருடைய உதவியை நாடாமல் இருக்கமுடியுமா? — தடித்த எழுத்தில் உள்ளவை இன்னின்ன வேற்றுமை எனக் கூறு.

3. அதைக்கண்ட குரங்கு மண்ணை எடுத்துப் புண்ணில் அப்பியது. — இதில் பெயரெச்சம் வினையெச்சம் வினைமுற்று இருப்பின் எடுத்து எழுது.

4. கீழ்வரும் சொற்களில் உள்ள பகுதிகளையும், இடைநிலைகளையும் எடுத்து எழுது.

(1) விரும்புகிறது (2) இருந்தது (3) கூறுகின்றார்கள்
(4) அஞ்சினான் (5) அழுவார்.

இலக்கணம் :

I. அ, இ, உ இம் மூன்று எழுத்துக்களும் சுட்டுப் பொருளில் வரும்பொழுது சுட்டெழுத்து எனப் பெயர் பெறும்.

உதாரணம் : அவன் அரசன் மகன் — அவன் என்பதில் உள்ள அ சுட்டெழுத்து; அரசன் என்பதில் உள்ள அகரம் சுட்டெழுத்து அன்று.

இது இந்த மரத்தின் இலை — இது, இந்த என்பவைகளில் உள்ள இ சுட்டெழுத்து; இலை என்பதில் உள்ள இகரம் சுட்டெழுத்து அன்று.

உது காண் ஓர் உல்லாசமான பூஞ்சோலை — உது என்பதில் உள்ள உ சுட்டெழுத்து ; உல்லாசமான என்பதில் உள்ள உகரம் சுட்டெழுத்து அன்று.

குறிப்பு : உகரம் சுட்டெழுத்தாக வருவது மிகவும் அருமை ; அகரமும் இகரமுமே சாதாரணமாக வரும். அகரம் தூரத்தில் உள்ள பொருளைக் குறிக்கும் ; இகரம் அருகில் உள்ள பொருளைக் குறிக்கும் ; உகரம் இடையில் உள்ள பொருளைக் குறிக்கும்.

கீழ்வரும் வாக்கியங்களில் சுட்டெழுத்து இருப்பின் கோடிட்டுக் காட்டு :

(1) ஆனால் அது அப்படிச் செய்யவில்லை.
(2) இந்த விதியை அவைகள் அறிந்திருக்கின்றன.
(3) அது உடனே சில இலைகளைப் பறித்தது.

II. வினைமுற்றின் இடையில் வரும் எழுத்துக்கள் காலம் காட்டும் என்பது உங்களுக்குத் தெரியும். அவைகட்கு இடைநிலை என்று பெயர்.

உதாரணம் :

1. செய்தான் (செய்+த்+ஆன்) த் இடைநிலை.
2. உண்டான் (உண்+ட்+ஆன்) ட் இடைநிலை.
3. போவான் (போ+வ்+ஆன்) வ் இடைநிலை.
4. தின்கிறான் (தின்+கிறு+ஆன்) கிறு இடைநிலை.

கீழ் வருபவைகளில் உள்ள இடைநிலைகளை எடுத்து எழுது :

(1) கூறினான்	(2) நகைத்தார்	(3) பாடுகின்றன
(4) நினைப்பான்	(5) சென்றான்	(6) வருகிறார்.

16. ஆலயம் தொழுவது சாலவும் நன்று



கீழ்வரும் பதங்களையும், தொடர்களையும் துணையாகக்கொண்டு இந்தப் படங்களையும் பார்த்து ஒரு கட்டுரை எழுது:

1. பெற்றோர் 2. ஒரு விரதநாள் 3. ஆடை ஆபரணங்கள் 4. மகிழ்ச்சி 5. புறப்பாடு 6. சுவாமி தரிசனம் 7. பூசை செய்பவர் 8. கடவுளை வேண்டுதல் 9. வலம் வருதல் 10. வீடு திரும்புதல்.

17. செங்கோல் முறைமை

இதனை மனதிற்குள் படி. கால அளவு : 5 நிமிஷம்.

சுல்தான் மகம்மது என்னும் ஓர் அரசன் ஒரு பகல் தன் கொலுமண்டபத்தில் வீற்றிருந்தான். அப்போது ஓர் ஏழைக் குடியானவன் அவ்வரசனை அடைந்து, "எம்பெருமானே, தங்கள் செங்கோல் ஓங்குக. சில நாட்களாகத் தங்கள் அரசாங்கத்தைச் சார்ந்த ஒருவன் கள்வனைப்போல் என் இல்லத்தில் நுழைந்து, எனக்கும்,என் மனைவி மக்களுக்கும் மிகவும் துன்பத்தைத் தந்து வருகின்றான். தங்கள் செங்கோல் ஆட்சியில் இத்தகைய சீர்கேடுகள் நிகழ்தல் அழகாகுமோ ?" என முறையிட்டான்.

அதுகேட்டு அம்மன்னன் மிகவும் வருந்தி, "ஐயா, நீ அஞ்சவேண்டாம். மற்றுமொருமுறை அக்கொடியன் நின் இல்லம் வரின் உடனேவந்து என்னிடம் தெரிவிப்பாயாக" எனக் கூறினன்.

ஒருநாள் இரவு அந்தக் குடியானவன், சுல்தான் மகம்மதுவின் மாளிகைக்கு ஓடோடி வந்து, "மன்னர் பெருமானே, அக்கள்வன் மறுபடியும் வந்து எங்களைத் துன்புறுத்துகின்றான்" எனத் தெரிவித்தான்.

இதனைக் கேட்ட மன்னன் வாளைக் கையிலேந்தி அப்போதே அந்த ஏழையின் இல்லம் சென்றான். மன்னன் அங்கே சென்றதும் விளக்கினை அணைத்து விடும்படி அவ்வேழைக் குடியானவனுக்குக் கட்டளையிட்டுச் சரேலென

அறைக்குள் புகுந்து, அக்கள்வனைத் தன் வாளினால் வெட்டி வீழ்த்தினான்.

பின்னர் அம்மன்னன், விளக்கேற்றும்படி குடியான வனைப் பணித்து, அவ்விளக்கின் உதவியால் இறந்து கிடக்கும் கள்வன் முகத்தை உற்று நோக்கி, மிகவும் ஆறு தல் அடைந்தவன் போல் முழங்காலிட்டு ஆண்டவனை வணங்கினான். பிறகு அவ்வரசன் சிறிது பாலும் ரொட் டியும் கொண்டுவருமாறு குடியானவனுக்குத் தெரிவித் தான். அந்தக் குடியானவன் அவ்விதமே கொண்டுவந்து கொடுக்க, மன்னன் அதனை ஆவலோடு அருந்தி அரண் மனை ஏக முயன்றான்.

அப்போது அந்த ஏழை, "அரசர் பெருமானே, தாங் கள் அந்தக் கள்வனைக் கொன்றபோது விளக்கினை அணைக் கக் கட்டளையிட்டதையும், இறந்த அக்கள்வனைப் பிறகு விளக்கொளியால் கண்டு இறைவனை வேண்டியதையும், முடிவில் தாங்கள் எளியேன் வீட்டில் உணவு கொண்ட காரணத்தையும் எனக்கு விளக்கி அருள்வீரோ?" என வேண்டினன்.

அதற்கு மன்னன், "நீ என்னிடம் முறையிட்டபோது, அக்கள்வன் என் சேனைத் தலைவனாகவேனும், என் அரு மைப் புதல்வனாகவேனும் இருத்தல் கூடும் என நான் எண் ணினேன். அவ்விதம் இருக்க நேரின் என் கை அவனைத் தண்டிக்க மறுத்தல்கூடும் என்னும் எண்ணத்தால் விளக் கை அணைத்து விடும்படி நான் கூறினேன். பிறகு விளக் கொளியில் பிணத்தைக் கண்டபோது நான் எண்ணியபடி இல்லாமையால் கடவுளுக்கு வணக்கம் செய்தேன். நீ என்

னிடம் முறையிட்டபோது நின் துன்பத்தைத் தீர்க்காமல் உணவு கொள்வதில்லை என நான் சபதம் செய்துகொண்டேன். அது தீர்ந்தமையால் பசியின் கொடுமையை நீக்கிக் கொள்ள நான் உன் வீட்டில் உணவு அருந்தினேன்" என்றான்.

அந்த அரசனின் நீதிவழுவா நெறியினை உணர்ந்த குடியானவன் மிகவும் வியந்து அவனை வாழ்த்தினான்.

இது "சித்தாந்தம்" என்னும் மாதப்பத்திரிகையில் காணும் 'சமநிலை' என்னும் கட்டுரையின் ஒருபகுதி.

அரும்பதம் :

இல்லம்	பணித்து	சபதம்
துன்புறுத்தல்	ஆண்டவன்	நெறி

அருந்தொடர் :

கொலுமண்டபம் முறையிடுதல் சீர்கேடு

வினா :

1. விளக்கினை அணைத்து விடும்படி அரசன் குடியானவனுக்குக் கட்டளை யிட்டான். — ஏன் ?
2. அரசன் கள்வன் முகத்தை உற்றுநோக்கி ஆண்டவனை வணங்கினான். — ஏன் ?
3. மன்னன் அந்த ஏழையின் வீட்டில் ரொட்டியும் பாலும் சாப்பிட்ட காரணம் என்ன ?

பயிற்சி :

1. இந்தக் கதையினை அந்த மகம்மதிய அரசனே சொல்வதுபோல் எழுது.
2. சபதம் செய்துகொள்ளுதல் என்றால் என்ன ?
3. இப்பாடத்தின் கடைசிப்பகுதியில் உள்ள வாக்கியத்திலிருந்து பெயரெச்சம் ஒன்றும் வினையெச்சம் ஒன்றும் எடுத்து எழுது.

இலக்கணம் :

I. எ, யா, ஆ, ஓ, ஏ என்னும் ஐந்து எழுத்துக்களும் வினைப் பொருளில் வரும்போது வினாவெழுத்துக்கள் என்னும் பெயரைப் பெறும்.

உதாரணம் :

எந்த எலி ? — இதில் 'எந்த' என்பதில் உள்ள எ என்னும் எழுத்து வினைப்பொருளில் வந்துளது.

யாருடைய யானை இது ? — 'யாருடைய' என்பதில் உள்ள 'யா' என்னும் எழுத்து வினா எழுத்து.

வந்தவன் கள்வனா ? — (கள்வன் + ஆ) 'கள்வனா' என்னும் பதத்தின் கடையில் உள்ள 'ஆ' என்னும் எழுத்து வினைப்பொருளில் வந்துளது.

அவன் வருவானோ ? — (வருவான் + ஓ) 'வருவானோ' என்னும் பதத்தின் கடையில் உள்ள 'ஓ' என்னும் எழுத்து வினா எழுத்து.

நீ ஏன் வந்தாய் ? — 'ஏன்' என்பதில் உள்ள 'ஏ' என்னும் எழுத்து வினா எழுத்து.

நான்தானே இதை எழுதினேன் — (நான்தான் + ஏ) 'நான்தானே' என்பதில், கடையில் உள்ள 'ஏ' என்னும் எழுத்து வினா எழுத்து.

குறிப்பு : 1. ஏ என்னும் எழுத்து ஒரு சொல்லுக்கு முதலிலாவது கடையிலாவது வந்து வினப்பொருளைத் தரும்.

2. ஆ, ஓ என்பவை சொல்லுக்குக் கடையில் வந்தே வினப் பொருளைத் தரும்.

3. எ, யா என்பவை சொல்லுக்கு முதலில் வந்தே வினப் பொருளைத் தரும்.

கீழ் வருபவைகளில் வின எழுத்து இருப்பின் கோடிட்டுக் காட்டு.

(1) நாய் என்ன செய்தது? (2) மிருகங்களுக்கு மருத்துவர் யார்? (3) பிராணிகளுக்கு நோய் வருமா? (4) நோய் வந்தால் நாய் வாலை ஆட்டுமோ? (5) நாம் ஏன் குளிக்கவேண்டும்? (6) எருமைக்குக் காதுநோய் வைத்தியர் காக்கை தானே?

II. கட்டுரைப் பயிற்சி:



இரண்டு சிறுவர்கள் தங்கள் பாடசாலை சம்பந்தமாகப் பேசிக் கொள்வதுபோல் இந்தப்படத்தைத் துணையாகக் கொண்டு ஒரு சம்பாஷணை எழுது.

18. காணா நட்பு

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு பாண்டி வள நாட்டிலே பிசிராந்தையார் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவரது இயற்பெயர் ஆந்தையார் என்பது. அவர் பிசிர் என்னும் ஊரில் வாழ்ந்து வந்த காரணத்தால் அவரைப் பலரும் பிசிராந்தையார் என்றே அழைத்தனர். அவர் கல்வி கேள்விகளிற் சிறந்திருந்ததோடு, நற்குண நற்செயல்களும் உடையராய்த் திகழ்ந்திருந்தனர். ஆதலால், அவர் பாண்டிவள நாட்டில் இருந்த பெரியோர் பலராலும் பெரிதும் போற்றப்பட்டு வாழ்ந்து வந்தார்.

பிசிராந்தையாரின் புகழ் பிற நாடுகளிலும் பரவத் தொடங்கியது. அப்போது சோழ நாட்டிலே கோப்பெருஞ் சோழன் என்னும் மன்னன் ஆட்சி புரிந்து வந்தான். அவன் பிசிராந்தையாரை நேரில் கண்டதேயில்லை. எனினும் அவன் அப்புலவர் பாடிய பாடல்களைப் பிறர் சொல்லக் கேட்டும், அவர்தம் அறிவு, குணம், செயல்களைப் பிறர் மூலமாக அறிந்தும் அப்புலவர் பெருமான்மீது அளவில்லாத அன்பு வைத்திருந்தான். பாண்டி நாட்டிலிருந்து வரும் பெரியோர்களைக் காண நேரும்போதெல்லாம் கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையாரின் உடல் நலம் கேட்டறிந்து உவகை கொள்வான்.

கோப்பெருஞ் சோழன் செங்கோல் வழுவாது ஆட்சி புரிபவன்; அன்றியும் அவன் செந்தமிழறிவும் நிரம்பப் பெற்றவன்; புலவர் பலரையும் ஆதரிக்கும் அருங்குணமும் வாய்ந்தவன். ஆதலின், கோப்பெருஞ் சோழன் புகழும்

நம் தமிழ் நாடெங்கும் பரவலாயிற்று. அவன் புகழ் நம் பிசிராந்தையாரின் காதிற்கும் எட்டியது. அப்போது பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனின் அருங்குணம் பலவும் கேட்டு அவனிடம் அளவிலா அன்புடையராய் இருந்தார். கோப்பெருஞ் சோழனைப் பிசிராந்தையார் நேரிற் காணுதவராய் இருந்தும் அவர், தம்மிடம் வருவாரிடமெல்லாம் கோப்பெருஞ் சோழன் குணத்தையே புகழ்ந்து கொண்டாடுவாராயினர். இந்த அன்பு நாளுக்கு நாள் வளர்ந்து முதிர்ந்த காரணத்தால் நம் புலவர் பெருமான், தாம்வேறு அந்த அரசர் வேறு எனவும் எண்ணிலர். அவர் சில சமயங்களில் தம்மையே கோப்பெருஞ்சோழன் எனவும் சொல்லிக்கொள்ள விழைந்தனர் என்றால் வேறு யாது கூறுதல் வேண்டும்!

இங்ஙனம் பல ஆண்டுகள் கழிந்தன. கோப்பெருஞ் சோழன் வயதில் முதிர்ந்தனன். அவனுக்குப் புதல்வர் இருவர் தக்க பருவமுடையவராய் இருந்தும் அவ்விருவரும் ஆட்சிபுரியும் திறனில் குறைந்து இருந்தமையால் கோப்பெருஞ் சோழனே அம்முதுமைப் பருவத்தும் அரசாண்டு வந்தனன். குணச்சிறப்பில்லாத அந்தப் புதல்வர் இருவரும் தம் தந்தையின்மீது வெகுண்டு போருக்கு எழுந்தனர். கோப்பெருஞ்சோழன் அம்முதுமைப் பருவத்தும் தன் மக்களை வெல்லுதல் கூடும். எனினும் அவன் அவர்களுடன் போர் புரிய விரும்பாது பெரியோர் பலரின் விருப்பப்படி அவர்கட்கு ஆட்சியைத்தந்தான். பிறகு அவன் வடக்கு நோக்கி இருந்து உண்ணுவிரதம் பூண்டு உயிர் துறக்க எண்ணினன்.

கோப்பெருஞ் சோழனின் அருஞ்செயல் கேட்டு அங்குள்ள பெரியோர் பலரும் இறும்பூதுற்றனர். தன் கருத்தை முடிக்கக் கருதிய கோப்பெருஞ் சோழன் தனக்கென வகுத்திருந்த இடத்தின்கண் வந்து அங்கிருந்தோரை நோக்கி, "என் ஆருயிர் நண்பர் பிசிராந்தையாருக்கும் இடம் வகுத்து வையுங்கள்" என்றனன்.

சோழன் கூறியதைக்கேட்ட பெரியோர்கள், "அரசே, பிசிராந்தையார் இத்துணை யாண்டுகளாகத் தங்களை நேரில் கண்டதேயில்லை. தங்கள்மீது அவர்க்கு அன்பு உண்டு என்பதுமட்டும் உண்மையே. எனினும் தங்கள் முகத்தையே பாராது நெடுந்தூரத்தில் உள்ள அவர், தாங்கள் உயிர்விடும் சமயம் வந்து தாமும் உண்ணாவிரதம் இருந்து உயிர் விடுவார் என்று தாங்கள் கருதுவது சிறிதும் பொருத்த மானதன்று" என நவின்றனர்.

அதற்குக் கோப்பெருஞ் சோழன், "பெரியோர்களே, நீங்கள் பிசிராந்தையாரின் அருங்குணத்தை அறிந்திலீர் போலும்! நான் செம்மையுடன் வாழ்ந்திருந்த காலத்து அவர் என்னை நேரில் வந்து காணாதிருந்தது உண்மையே. நான் இவ்வுலகை வெறுத்து உயிர்விடுங்காலத்து அவர் வாளா இரார். ஆதலின், உடனே அவர்க்கு இடம் வகுத்து வையுங்கள்" என்று பணித்தனன்.

அரசன் கட்டளையை மறுத்தற்கு மனமில்லாது அவ்வாறே அவர்கள் பிசிராந்தையார் என்னும் நம் புலவர் பெருமானுக்கும் இடம் வகுத்து வைத்தனர்.

என்ன ஆச்சரியம்! கோப்பெருஞ்சோழன் வடக்கு நோக்கி இருந்து உயிர் துறத்தலைக் கேட்டவுடனே பிசிராந்தையார் சிறிதும் தாமதியாது ஓடோடி வருதலை அங்குள்ள பெரியோர் பலரும் நேரிற் கண்டு அதிசயித்து நின்றனர். ஈருடலில் ஓருயிர் போன்று நட்பு பூண்டு வந்த கோப்பெருஞ் சோழனும் பிசிராந்தையாரும் ஒருவரை யொருவர்



கண்டதும் கட்டித் தழுவி அளவளாவினர். பின்னர்ப் புலவர்களும், மற்றவர்களும் வியப்போடு நிற்கப் பிசிராந்தையாரும் தமக்கென வகுத்துவைத்த இடத்தின்கண் அமர்ந்து, அவ்வரசனைப் போன்றே உண்ணா விரதம் பூண்டு உயிர் துறந்தனர்.

மாணவர்களே, இவர்தம் நட்பின் பெருமையினை நீங்களே ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்.

அரும்பதம் :

திகழ்தல்	விழைதல்	துறத்தல்
ஆட்சி	திறன்	நவில்
உவகை	வெகுண்டு	அளவளாவுதல்

அருந்தொடர் :

நற்குண நற்செயல்   ஈருடலில் ஓருயிர்

வினு :

1. காணு நட்பு என்றால் என்ன ?
2. பிசிராந்தையார் காலத்திலே இருந்த சோழ அரசன் பெயர் என்ன ?
3. கோப்பெருஞ் சோழன் வடக்கு நோக்கி உயிர் துறக்க எண்ணினுன். — ஏன் ?
4. 'பிசிராந்தையார் வாரார்' என்று சொன்ன பெரியோர்க்குச் சோழன் யாது விடையளித்தனன் ?
5. இவர்கள் நட்பு மற்றவர்கள் நட்பினும் சிறந்தது.— எவ்வாறு ?

பயிற்சி :

1. அளவளாவுதல் — இதனை ஒரு வாக்கியத்தில் வைத்து இதன் பொருள் விளங்கும்படி எழுது.
2. அழைத்தனர், எட்டியது — பகுதி என்ன ?
3. இந்தப் பாடத்தில் உள்ள படத்தைப் பார்த்துச் சில வாக்கியங்கள் எழுது.

இலக்கணம் :

I. கால்புள்ளி, அரைப் புள்ளி, முற்றுப்புள்ளி, வினக்குறி, வியப்புக்குறி முதலியன இடவேண்டிய இடங்களை நீங்கள் முன்னரே அறிந்திருக்கிறீர்கள். மேல் வளைவுக்குறிகள் இடுவதைக் குறித்து நாம் இங்கே கவனிக்கலாம். ஒருவர் பேசுவதை அப்படியே எழுதும்போது இக்குறிகள் இட்டு எழுதுதல் வேண்டும்.

உதாரணம் : தந்தை தன் மகனைப் பார்த்து, "இராமா, நீ இவ்வளவு நேரம் எங்கே சென்றிருந்தாய் ?" என்று வினவினர்.

அதற்கு மகன், "அப்பா, நான் உதை பந்து (Foot-Ball) விளையாடச் சென்றிருந்தேன்" என்றான்.

II. இந்தப் பாடத்தில் மேல்வளைவுக் குறிகளோடு வரும் வாக்கியங்கள் இருப்பின் அவைகளை எடுத்து எழுது.

III. கீழ்வரும் கட்டுரைக்கு எங்கெங்கே என்ன என்ன குறிகள் இடல்வேண்டும் ?

ஒரு பாம்பு சிவபெருமான் திருமுடியின் மேல் படமெடுத்து ஆடிக்கொண்டிருந்தது அப்பொழுது ஒரு கருடன் அந்த வழியே வந்தது அதைப் பார்த்துப் பாம்பு ஏனடா கருடா சுகமா என்று கேட்டது அதற்குக் கருடன் இருக்கிற இடத்தில் உள்ளவரையில் சுகம்தான் என்றது.

IV. இந்தப் பாடத்தில் வரும் ஒவ்வொரு பகுதிக்கும் தனித் தனியாக என்னென்ன தலைப்புக்கள் கொடுக்கலாம் ?



19. நீலகிரித் தொதவர்

(மௌன பாடம்)

(இது, சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில், தமிழ்ப் பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் 15-3-1930 அன்று நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.)

நீலகிரி என்பது மலைக்குகைகளை உடைய இடம். ஒத்தகமந்த் என்னும் பெயர் சிதைந்து வழங்குகிறது. அங்கு வாழ்வோர் தொதவர் என்னும் ஜாதியார். அங்கேயுள்ள பழங்குடிகள் தொதவர், படுகர், இருளர், குறும்பர், கோத்தர் என்பவர். தொதவர் நீலகிரியிலே வாழும் உயர்ந்த மக்கள். இவரே நிலத்தலைவர்களாகவும் உளர். இவர் நிலங்களைப் படுகர் என்பார் பயிரிட்டுத் திறை செலுத்து

கின்றனர். இவ்விருவரும் பொய்யும், வழுவும் இன்றிக் கொடுக்கல் வாங்கல் செய்து வருகின்றனர்.

தொதவர் இளம்பருவத்திலேயே மணம் புரிந்து கொள்ளுகின்றனர். ஆண்பிள்ளை பிறந்தால் பல சடங்குகளைத் தொதவர் செய்கின்றனர். பாட்டன் பெயரிடுவான். பெண்பிள்ளைகட்குச் சடங்குகள் கிடையா.

மந்து என்னும் சொல் மந்தை என்பதன் சிதைவெனக் கருதுவர் சிலர்; சோலை அடர்ந்த இடம் என்றும் பொருள் உண்டு.

தொதவர்கட்கு எருமைகளே செல்வம். அவர்கள் திண்ணையின்மேல் மான் தோலை விரித்துப் படுப்பர். அவர்கள் வீடுகள் குடில்களே. அவை மிகத்தூய்மையாக விளங்கும். அவற்றில் சில பித்தளைப் பாத்திரங்களுமுண்டு. அவர்கள் உண்பது பாலும் சோறும். வெல்லத்தில் அவர்கட்கு விருப்பமதிகம்.

நீலகிரித் தொதவர்கள், எருமைகளையே தமக்குப் பொருளாக எண்ணுவதால் ஒருவர் செல்வ மிகுதியை அவர் வைத்திருக்கும் எருமைகளைக் கொண்டே மதிப்பிடுவார்கள். ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தி இளவரசாக இருந்த பொழுது இந்தியாவுக்கு விஜயம் செய்தனர். அப்போது அவர் வருகை காரணமாகக் கிறிஸ்தவ குரு ஒருவர் அவர்களிடம் போய், இளவரசரைப் பற்றிப் புகழ்ந்து பேசினர். அவ்வமயம் தொதவன் ஒருவன், "அவருக்கு எத்தனை எருமைகள் இருக்கின்றன?" என்று கேட்டானாம்.

அவர்கட்கு உலகமே தெரியாது. தொதவர் கோயில் கட்டியிருக்கின்றனர்; பூசைசெய்யப் பூசாரிகளை ஏற்படுத்தி

யுள்ளனர். பூசாரிகள் பெண்களை ஏறிட்டுப்பார்க்கலாகாது. அவர்கள் இனத்தைச் சார்ந்தவர்களுக்கே கோயிலின் உள்ளே இன்னதுதான் இருக்கிறது என்பது தெரியாது. தொதவர்கள் யாரையும் உள்ளே விடமாட்டார்கள். சிலர் அக்கோயிலில் ஒரு பொன் உருண்டை இருப்பதாகக் கூறுகின்றனர்.

தொதவர் நீண்ட வாழ்நாள் உடையவர்கள். அதற்குக் காரணம் அவர்களுடைய இயற்கை வாழ்க்கையே ஆகும். அவர்கள் பிணத்தைப் பல மருந்துகளைக்கொண்டு சுற்றத்தார் எல்லோரும் வரும்வரையில் வைத்துப் பாதுகாப்பர். குளிர் நாடாக இருத்தலால் பிணம் அழுகிப் போவதில்லை. இறந்தவருக்காக அவரவர் நிலைமைக்கேற்றபடி எருமைகளைப் பலியிடுதல் அவர்கள் வழக்கம். இப்போது அரசாங்கத்தினர் அத்தீய வழக்கத்தைக் குறைத்திருக்கின்றனர். இரண்டு எருமைக்குமேல் இப்போது யாரும் பலியிடக்கூடாது. நாட்டாண்மைக்காரன் வந்து சடங்குகளை நடத்துவான். அவன் காலைத் தூக்கிச் சடங்கு செய்பவன் தலைமேல் வைப்பான்.

தொதவருடைய பெருமிதமான தோற்றத்தையும், தலைமயிர், கூரிய மூக்கு முதலியவற்றையும் பார்த்து ஐரோப்பியர் சிலர் அத்தொதவர் கிரேக்க வமிசத்தினராக இருக்கலாமென ஊகிக்கின்றனர். பெண்கள் மிகவும் அழகாக இருப்பார்கள். அவர்கள் குழலைப் பலவாறு முறுக்கிவிடுவார்கள். தொதவப் பெண்கள், உடம்பு முழுவதும் ஓர் ஆடையைப் போர்த்துக் கொள்வர். அவ்வுடைக்குப் 'போர்த்துக்கொ' என்று பெயர். பெண்கள் பூத்தையல்

வேலை செய்வர். அவர் அவ்வேலையை ஒரு முள்ளைக்கொண்டே செய்து வந்தனர். இப்பொழுதுதான் ஊசியை உபயோகித்து வருகின்றனர். தொதவர் சோம்பலே உருவெடுத்தாற் போன்றவர்கள். தொதவர் குறி சொல்லும்போது மலையாளம் பேசுகின்றனர். தொதவரிடம் பொய், களவு, வழி மறித்தல் முதலிய தீய குணங்கள் காணப்படவில்லை. விருந்து புரந்தரும் குணமும், உபகாரத்தன்மையும் அவரிடம் காணப்படுகின்றன. அவர்கள் வரவரத் தொகையில் குறைந்து வருகிறார்கள். துரைத்தனத்தார் அவர்களை விருத்திக்குக் கொண்டுவரப் பலவகையிலும் முயன்று வருகின்றனர்.

— தமிழரசு.

அரும்பதம் :

சிதைந்து	பெருமிதம்	ஊகித்தல்
திறை	தோற்றம்	குழல்
வழு	விஜயம்	புரந்தரல்

அருந்தொடர் :

கொடுக்கல் வாங்கல் ஏறிட்டுப் பார்த்தல்

வினா :

1. நீலகிரி — இது எங்கே இருக்கிறது? நீ இந்த இடத்திற்கு போயிருக்கிறாயா?
2. தொதவர்கள் எவ்விதம் ஜீவிக்கின்றனர்?
3. தொதவர்களைப் போன்ற பழங்குடி மக்கள் வேறு இருப்பின் அவர்கள் யார் யார்?
4. "அவருக்கு எத்தனை எருமைகள் இருக்கின்றன?" இது யார் யாரிடம் எப்போது கூறியது?

5. தொதவர்கள் நீண்ட வாழ்நாள் உடையவர்கள். — காரணம் கூறு.

6. மந்து என்பதற்கு என்னென்ன பொருள் கூறுகின்றனர்?

7. தொதவரிடம் உள்ள சிறந்த குணங்கள் யாவை?

பயிற்சி:

1. விஜயம், ஊகித்தல், திறை இவை இந்தப் பாடத்தில் எங்கெங்கே வருகின்றன? அந்த இடங்களில் இப் பதங்களை நீக்கி வேறு பதம் இட்டுப் பொருள் கெடாமல் எழுது.

2. இப்பாடத்தில் உள்ள படத்தைப் பார்த்துச் சில வாக்கியங்கள் எழுது.

3. இந்தப் பாடத்திலிருந்து இரண்டு பெயரெச்சங்களும், இரண்டு வினையெச்சங்களும் எடுத்து எழுது.

4. வழங்குகிறது, கேட்டான், செய்வர் — இவைகட்குப் பகுதியும் இடைநிலையும் எழுது.

உரைநடைப்பயிற்சி:

இந்த விஷயங்களையெல்லாம் ஒரு தொதவனே சொல்லுவதாய் இருந்தால் எவ்விதம் சொல்லுவான்?

20. தாயில்லாக் குழந்தைகள்

(ஒரு சிறு நாடகம்)

இடம் : ஓர் அழகிய பூஞ்சோலை

காலம் : காலை, சுமார் ஆறு மணி

[ஒரு பட்டுப்பூச்சி இன்பமாகப் பாடிக் கொண்டு பறந்து வருகிறது.]

பாடல்

1. இன்பம் இன்பம் இன்பம் — இங்கே
இரவும் பகலும் இன்பம்.

2. ஆடல் பாடல் புரிவேன் — ஆஹா!
அன்பாய் முத்தம் தருவேன்.

3. மலரே, மலரே, மலரே — உன்னால்
மகிழ்வார் இங்கே இலரே.

4. தேனே, தேனே, தேனே -- உன்னைத்
தேடி உண்பேன் நானே.

பட்டுப்பூச்சி : ஆஹா! என்ன இன்பமான இடம்! இங்கே எனக்கு இரவும் பகலும் இன்பமாகவே தோன்றுகின்றன. நான் இங்கே ஆடிப்பாடி ஆனந்தமாய் இருக்கின்றேன். ஆ! அழகான சோலையே, அற்புதமான மலரே, அருமையான நறுமணமே, உண்ண உண்ணத் தெவிட்டாமல் இனிக்கும் இன்பமான தேனே,

உங்களுக்கு நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்! —

[மறுபடியும் அதே பாட்டினைப் பல முறை பாடுகிறது. முடிவில களைத்து விழுகிறது.]

ஆ! நான் என்ன செய்வேன்! ஐயோ! துன்பம் - துன்பம் - என்னல் பொறுக்க முடியாத துன்பம்—

[பாடி வருந்துகிறது.]

பாடல்

1. துன்பம் துன்பம் துன்பம் — ஆஹா!
சொல்ல இயலாத் துன்பம்.

2. ஐயோ என்னே செய்வேன் — இந்த
ஏழை எவ்வா றுய்வேன்?

3. போதும் போதும் தொல்லே — என்னல்
பொறுக்க முடிய வில்லே.

4. உதவி செய்வார் இல்லே — உயிர்
போகும் இந்த எல்லே.

[பட்டுப்பூச்சி, களைத்துத் தரையில் விழுந்து உயிர்போகும் நிலேயில் இருக்கின்றது. அதன் அருகே சில முட்டைகளும் இருக்கின்றன. அப்போது ஒரு புழு ஓர் இலேயைத் தின்று கொண்டே அங்கே வருகிறது.]

புழு : தாயே, நீர் யார்? உமக்கு நேர்ந்துள்ள துன்பம் என்ன? இங்கே ஏதோ சில முட்டைகளும் கிடக்கின்றனவே! [பூச்சி மெதுவாக எழுகின்றது.]

பூச்சி : ஐயா, நான் ஓர் ஏழை. என்னைப் பட்டுப் பூச்சி என்பார்கள். இந்த முட்டைகளே என் அருமைக் குழந்தைகள். இவை இப்போது தூங்குகின்றன; இன்னும் சிறிது நேரத்தில் விழித்துக்கொள்ளும்; 'உணவு வேண்டும்' என்று அழும் — ஆ! நான் என்ன செய்வேன்! நானோ இறக்கும் தறுவாயில் இருக்கின்றேன். — ஐயோ! திக்கற்ற குழந்தைகளே, உங்களை யார் காப்பாற்றப் போகின்றார்கள்!

[வருந்தித் தரையில் விழுகின்றது.]

புழு : அம்மையே, அதற்காக நீங்கள் வருந்த வேண்டாம். நான் இந்தக் குழந்தைகளை அன்போடு காப்பாற்றுகின்றேன்.

[பட்டுப்பூச்சி மகிழ்ச்சியுடன் தலை நிமிர்ந்து பார்க்கிறது.]

பூச்சி : ஐயா, உங்கள் அன்பிற்கும், அருங்குணத்திற்கும் பலமுறை வணக்கம். என் அருமைக் குழந்தைகளை — இந்தத் திக்கற்ற ஏழைக் குழந்தைகளை — தாயில்லாப் பாலகர்களைத் தாங்கள்தாம் பாதுகாக்க வேண்டும் — ஆ! என் கண்கள் சுழலுகின்றன! — காதுகள் அடைந்து போகின்றன! — வாய் — குழறு — கிறது — ஆ! — குழந் — தாய் — என் — என் — அன்பே! — ஆ — ஆ! [கீழே விழுந்து இறந்துவிடுகிறது.]

புழு: ஐயோ! இந்தப் பூச்சி இறந்தே போய்விட்டதே! நான் இந்தத் தாயில்லாக் குழந்தைகளை எவ்விதம் காப்பாற்றுவேன்! — ஆம் — இவை இப்போது நன்ருகத் தூங்குகின்றன. விழித்துக் கொண்டவுடன் இவை உணவு கேட்குமே! ஐயோ! அப்போது நான் என்ன செய்வேன்! எதனைத் தேடி உணவாகத் தருவேன்!

[ஒரு தேனீ ரீங்காரம் செய்துகொண்டு வருகிறது.]

தேனீ: ரீங் - ரீங் - ரீங் - ரீங்

புழு: ஓ தேனீயே, தேனீயே, என் அருமை நண்பனே, இங்கே வருவாய் - வருவாய்.

தேனீ: ரீங் - ரீங் - ரீங் - ரீங்

புழு: நண்பனே, இதோ இந்தத் தாயில்லாக் குழந்தைகளைப் பார். நான் இவைகளைக் காப்பாற்ற வேண்டும். தயை செய்து சிறிது உணவு தருவாயா!

தேனீ: புழுவே, இவைகட்குத் தகுதியான உணவு எது? எனக்குத் தெரிய வில்லையே!

புழு: தேனீயே, இவைகள் பட்டுப்பூச்சியின் குழந்தைகள். ஆதலால் இவைகளும் அதைப்போல் தேனைத் தான் குடிக்கும்.

தேனீ: அப்படியா! இதோ கொடுக்கின்றேன் — ஆனல் இவை தேன் குடிக்க விரும்புமா? இது எனக்குச்

சந்தேகமாகவே இருக்கிறது. அதோ ஒரு பொன் வண்டு வருகிறது. அதைக் கேட்கலாம்.

பாட்டு

பொன்வண்டு : தனனு தனனு தனனு தனனு
தந்தன தனனு தனதன தனனு

தேனீ : பொன் வண்டே, பொன் வண்டே, இங்கே வா ; இதோ இந்தப் பட்டுப் பூச்சிக் குழந்தைகளைப் பார் ; பாவம் ! தாயில்லாக் குழந்தைகள் ! இவைகட்கு என்ன உணவு தரலாம் ?

புழு : இவைகளின் தாய் எதைச் சாப்பிட்டதோ அதைத் தானே குழந்தைகளும் சாப்பிடும் ! இதில் சந்தேகம் என்ன ?

வண்டு: புழுவே, நீ ஒன்றும் அறியாமல் பேசுகின்றாய். இந்தக் குழந்தைகள் யார்? இவர்கள் உன் தம்பிமார்கள். நீ எதைத் தின்று வாழ்கின்றாயோ அதுதான் இவர்கட்கும் ஆகாரம். இதோ இவர்கள் விழித்துக் கொண்டார்கள். தங்கள் இருப்பிடம் விட்டும் வருகின்றார்கள் — பார்.

[சூரிய உஷ்ணத்தால் அந்த முட்டைகள் வெடிக்கப் புழுக்கள் வெளி வருகின்றன.]

புழு: ஆ! என்ன ஆச்சரியம்! இவர்கள் என்னைப்போலவே இருக்கின்றார்களே! — அப்படியானால், பொன் வண்டே, நானும் பட்டுப் பூச்சியின் குழந்தைதானே!

வண்டு: ஆம்; அதில் என்ன சந்தேகம்?

தேனீ: நீ முசுக்கட்டை இலையைத் தின்பதிலிருந்தே நன்றாகத் தெரிகிறதே.

புழு: அப்படியானால் நான் என் தாயைப்போல் அவ்வளவு அழகாக இல்லையே! ஏன்? பறப்பதற்கு எனக்கு இறக்கைகள்கூட இல்லையே!

வண்டு: புழுவே, அவசரப்படவேண்டாம். இன்னும் சில நாட்கள் சென்றால் உனக்கு உன் உடம்பிலிருந்து ஒருவிதப் பசை உண்டாகும். நீ அதனை நூலாகத் திரித்து ஓர் அழகிய கூடு கட்டிக்கொண்டு சில நாட்கள் தனிமையாக இருக்க விரும்புவாய். அப்போது உனக்குக் கடவுள் உன் தாயைப்போல் அழகான

உடலையும், இறக்கைகளையும் அளிப்பார். நீ உடனே அந்தக் கூட்டிலிருந்து வெளியே வந்து ஆனந்தமாகப் பறக்க ஆரம்பிப்பாய்!

புழு: அப்படியா! ஆனந்தம் — ஆனந்தம் — என் அருமைத் தம்பிகளே, ஆனந்தம் — ஆனந்தம்.

[தன் தம்பிமாரைத் தழுவிக்கொண்டு குதிக்கின்றது.]

தேனீ: புழுவே, இதற்குள் நீ ஆனந்தம் அடைந்துவிட வேண்டாம்.

புழு: ஏன் ?

தேனீ: நீ கூடு கட்டிக்கொண்டு வாழும்போது உன் உயிருக்கே ஒரு பெரிய ஆபத்து நேரலாம்.

புழு: பொன் வண்டே, இது உண்மைதானா!

வண்டு: ஆம்; நீ கூட்டில் வசிக்கும்போது மனிதர்கள் உன்னைக் கொதிக்கின்ற வெந்நீரிலே இட்டு உன்னைக் கொன்று விடவும் கூடும்.

புழு: ஐயையோ! அவ்விதம் அவர்கள் ஏன் செய்ய வேண்டும்? நான் அவர்கட்கு என்ன தீங்கு செய்தேன்!

வண்டு: நீ அவர்கட்கு ஒன்றும் தீங்கு செய்யமாட்டாய்; அவர்கட்கு உன் மீது சிறிதும் கோபம் இராது. உன்னிடம் உள்ள பட்டு நூலின்மீது அவர்கட்கு மிகவும் ஆசை; அதனால் தான் —

புழு: ஐயோ! கடவுளே, அதற்கு நாங்கள்தாமா அகப்பட்டோம்?

தேனீ: புழுவே, மனிதர்கள் உங்களைமட்டுமா துன்புறுத்துகின்றார்கள்? அவர்களால் எங்களுக்கும் எவ்வளவோ துன்பம்! நான் சீக்கிரம் போகவேண்டும். பல நாட்களாக வருந்திக் கட்டிவரும் தேன் கூட்டை அவர்கள் கவர்ந்து கொண்டால் நான் என் செய்வேன்?

[போக முயல்கின்றது.]

வண்டு: தேனீயே, நானும் வருகின்றேன். அதோ பார் - ஒரு சிறுவன் வருகின்றான். அவன் என்னைக் கண்டுவிட்டால் என் கழுத்தில் கயிற்றைக் கட்டி என் உயிரைப் போக்கிவிடுவான்.

[இரண்டும் பறந்து செல்கின்றன.]

புழு: கடவுளே, இந்த மனிதர்கட்கு எப்போதுதான் எங்கள்மீது இரக்கம் உண்டாகுமோ! திக்கற்ற எங்களைத் தாங்கள்தாம் காப்பாற்றவேண்டும்.

[கடவுளைத் துதிக்கின்றது.]

அரும்பதம்:

கைம்மாறு	ரீங்காரம்	கவர்தல்
தறுவாய்	பசை	

அருந்தொடர்:

ஆடல் பாடல்

வினு :

1. தாயில்லாக் குழந்தைகள் — யார் ?
2. பட்டுப்பூச்சியின் மூவகை மாறுதல்கள் யாவை ?
3. பட்டு எவ்வாறு தயாரிக்கப்படுகின்றது ?
4. பட்டு நமக்கு எவ்வெவ்வாறு பயன்படுகின்றது ?
5. இப்பாடத்தினுல் நீ அறிந்துகொள்ளும் நீதிகள் யாவை ?

இலக்கணம் :

சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும் என்பதை நீங்கள் முன்பே அறிவீர்கள். அவைகளுள் இடைச்சொல்லையும் உரிச்சொல்லையும் குறித்து மேலும் விளக்கமாக ஆராயலாம்.

I. இடைச்சொல் சொற்களின் இடையே நின்று ஆச்சரியம், இரக்கம், இழிவு முதலிய பொருள்களைத் தரும் ; சில சமயங்களில் ஓசை அழகுக்காக யாதொரு பொருளும் குறிக்காது அசை நிலையாகவும் வரும்.

உதாரணம் :

(1) ஆகா ! இந்த வனம் என்ன அழகு ! - ‘ஆகா’ என்பது ஆச்சரியத்தைக் குறிக்கும்.

(2) பேஷ் ! நீ மிகவும் சமர்த்தன் - ‘பேஷ்’ என்பது உவகையைக் குறிக்கும்.

(3) ஏ ! புழுவே, இங்கே வராதே - ‘ஏ’ என்பது இழிவைக் குறிக்கும்.

(4) ஐயோ ! நாங்கள் தாமா அகப்பட்டோம் ! - ‘ஐயோ’ என்பது அச்சத்தைக் குறிக்கும்.

(5) “பயனில்லை எழுந்தானே” - ‘தான்’ - ‘ஏ’ இவை யாதொரு பொருளும் இன்றி ஓசைக்காக வந்தன.

செய்யுள் பகுதி

I. பரம்பொருள் வாழ்த்து

ஆத்திசூடி இளம்பிறை அணிந்து
மோனத் திருக்கும் முழுவெண மேனியான்
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே அதனியல் ஒளியுறு அறிவாம்
அதன்நிலை கண்டார் அல்லலை அகற்றினர்
அதனருள் வாழ்த்தி அமரவாழ் வெய்துவோம்.

— பாரதியார்

பரம்பொருள் - மேலான பொருள் ; கடவுள்; ஆத்தி - ஒரு வகை மரத்தின் பூ; மோனம் - மௌனம்; முழுவெண் மேனியான் - வெண்மையான திருநீற்றைத் தம் உடல் முழுதும் அணிந்து கொண்டுள்ள சிவபெருமான் ; கடல்மிசை - கடலின்மீது ; பாற்கடல் மிசைக்கிடப்போன் - மகாவிஷ்ணு; நபி - தீர்க்கதரிசி. மறை - வேதம்; (இங்கே குர்ஆன்) ; உருவகத்தால் - தாங்கள் விரும்பிய வடிவத்தால்; உணர்ந்து உணராது - ஒரு வகையில் கடவுளின் இருப்பை அறிந்தும் அறியாமலும் ; பரவிடும் - வணங்கும் ; இயல் - இலக்கணம்; ஒளியுறு - பிரகாசந் தங்கிய ; அல்லல் - துன்பம் ; அகற்றினர் - நீக்கினர் ; அருள் - கருணை ; அமரர் - தேவர் ; எய்துவோம் - அடைவோம்; பாரதி - சரஸ்வதிக்கு ஒரு பெயர்; பல கலைகளையும் கற்றுணர்ந்தவர்கட்கும் பெயர்; இங்கே இது சுப்பிரமணிய பாரதியாரைக் குறிக்கும்.

II. தனிப் பாடல்

பயனில்லாதன :

ஆபத்துக் குதவாப் பிள்ளை அரும்பசிக் குதவா அன்னம
தாபத்தைத தீராத் தண்ணீர் தரித்திரம் அறியாப் பெண்டிர்
கோபத்தை அடக்கா வேந்தன் குருமொழி கேளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பயனில்லை ஏழுந் தானே. 1

செருப்பின் பயன் :

கல்லும் உறுத்தாது ; காலில் முள் தையாது
எல்லைமார்த் தாண்டன் சூடேறுது — தொல்லை வரும்
மாலை இருளில் வழிநடக்கக் கூசாது
காலில் செருப்பிருந்தக் கால். 2

குடையின் பயன் :

பகலோன் தெறுகிரணம் பாய்பறவை எச்சம்
மிகமேல் உருதகற்றும் விண்ணின் — முகிலதனுல்
பெய்யுமழை யைத்தடுக்கும் பேரழகுமாம் ஒருவன்
கையில் குடை இருந்தக் கால். 3

அன்பும் அன்பு இன்மையும் :

ஒப்புடன் முகம லர்ந்தே உபசரித்து உண்மை பேசி
உப்பிலாக் கூழ்இட் டாலும் உண்பதே அமிர்த மாகும்
முப்பழ மொடுபால் அன்னம் முகங்கடுத் திடுவா ராயின்
கப்பிய பசியி னேடு கடும்பசி ஆகுந் தானே. 4

தனிப்பாடல் - புலவர் சிலரால் அவ்வப்போது பாடப்பட்ட பாடல்கள் ; (1) தாபம் - தாகம்; தீர்த்தம் - தெய்வ சம்பந்தம் பெற்ற ஆறு, குளம் முதலியன. (2) உறுத்தாது - துன்பம் செய் யாது; மார்த்தாண்டன் - சூரியன்; தொல்லை வரும் - துன்பம் தரும். (3) பகலோன் - சூரியன் ; தெறு - சுடுகை ; எச்சம் - மலம்; உருது - படாதபடி ; விண் - ஆகாயம் ; முகில் - மேகம். (4) ஒப்பு - சமம் ; (இங்கே உள்ளமும் முகமும் சமமாக இருக்கும்படி என்பது பொருள்) ; முப்பழம் - மா, வாழை, பலா ஆகிய கனிகள் ; முகங் கடுத்து - முகத்தைக் கடுமையாகக் காட்டி ; கப்பிய - முன்பே நிறைந்துள்ள ; கடும் பசி - மிக்க பசி.

III. நீதிப் பாடல்கள்

1. நன்னெறி :

என்றும் முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர் — துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து. 1

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி ஆக்குபவர் பேறும் — பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல்நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 2

நீக்கம் அறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் — பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 3

உள்ளம் கவர்ந்தெழுந்து ஓங்கு சினங்காத்துக்
கொள்ளும் குணமே குணம்என்க — வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. 4

மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர் தமைத்தாம் மருவில் — பலியேல்
கடவுள் அவிர்சடைமேல் கட்செவியஞ் சாதே
படர்சிறைய புள்ளரசைப் பார்த்து. 5

இல்லானுக்கு அன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்துமவற் கென்செய்யும — நல்லாய்,
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு? 6

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ ? — பைந்தொடீஇ,
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. 7

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே — பொன்செய்
அதிர்வளையாய், பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். 8

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்விழிவு வேண்டற்க — நீக்கு
பவரார் அரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு. 9

உண்டு குணமிங் கொருவர்க் கெனினும்கீழ்க்
கொண்டு புகல்வதவர் குற்றமே — வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி. 10

— சிவப்பிரகாச சுவாமிகள்

2. நான்மணிக்கடிகை :

கள்ளி வயிற்றில் அகில்பிறக்கும் ; மான்வயிற்றில்
ஒள்ளரி தாரம் பிறக்கும் ; பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் ; அறிவார்யார்
நல்லாள் பிறக்கும் குடி. 1

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம் ;
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம் ;
கிளைஞரில் போழ்தில் சினங்குற்றம் ; குற்றம்
தமரல்லார் கையகத் தூண். 2

— விளம்பிநாகனார்

3. திரிகடுகம் :

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன் ;
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான் ;
கோளாளன் என்பான் மறவாதான் ; இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது

தன்னை வியந்து தருக்கலும், தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும், — முன்னிய
பல்பொருள் வெஃகும் சிறுமையும் இம்மூன்றும்
செல்வம் உடைக்கும் படை. — நல்லாதனுர்

4. இன்னு நாற்பது :

ஆற்றல் இலாதான் பிடித்த படையின்ன ;
நாற்றம் இலாத மலரின் அழகின்ன ;
தோற்றம் இலாதான் துணிபின்ன ; ஆங்கின்ன
மாற்றம் அறியான் உரை.

பொருள் உணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்ன ;
இருள்கூர் சிறுநெறித் தான்தனிப் போக்கின்ன ;
அருளில்லார் தங்கண் செலவின்ன ; இன்ன
பொருளில்லார் வண்மை புரிவு. — கபிலர்

5. இனிது நாற்பது :

தங்கண் அமர்வுடையார் தாம்வாழ்தல் முன்னினிதே ;
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே ;
வாய்ப்புடைய ராகி வலவைகள் அல்லாரைக்
காப்படையக் கோடல் இனிது.

குழவி பிணியின்றி வாழ்தல் இனிதே ;
கழறும் அவையஞ்சான் கல்வி இனிதே ;
மயரிகள் அல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவும் தீர்வின்றேல் இனிது. —பூதஞ்சேந்தனுர்

1. நன்னெறி - நல்ல வழி ; (இங்கே இது நீதியாகிய நல்ல வழியைக் குறிக்க வந்துளது.)

(1) முகமன் - உபசாரம் ; இயம்பாதவர் - சொல்லாதவர் ; கண் - இடம் ; தீது அற்றோர் - தீமையான குணங்களை இல்லாதவர். துன்று சுவை - மிக்க இனிமை ; துன்று - நெருங்கிய ; பொலி - அழகாக விளங்குகின்ற ; குழல் - கூந்தல் ; பூங்கை - அழகிய கை ; நயந்து - விரும்பி.

(2) பேறு - செல்வம் ; புயல் - மேகம் ; முகந்து - மொண்டு ; பெய்யா - பெய்து.

(3) நீக்கம் அறும் - நீங்குதல் இல்லாத ; புணர்ந்தாலும் - சேர்ந்தாலும் ; நொய்து - அற்பமானது ; குழல் - கூந்தல் ; புல்லினும் - சேர்ந்தாலும் ; திண்மை - உறுதி.

(4) உள்ளம் - மனம் ; கவர்ந்து - மூடி ; அரிதோ - அருமையானதோ ; தடம் - விசாலமான ; விளம்பு - சொல்.

(5) விரவலர் - பகைவர் ; மருவில் - சேரின் ; பலி - பிச்சை ; ஏல் - எடுத்தல் ; பலியேல் கடவுள் - தாருகாவனத்து ரிஷி பத்தினிகளிடம் பிச்சைக்குச் சென்ற சிவபெருமான் ; அவிர் - விளங்குகின்ற ; கட்செவி - கண்களையே காதுகளாக உடைய பாம்பு ; படர் சிறைய - படர்ந்த இறக்கைகளையுடைய ; புள்ளரசு - பட்சிகளுக்கு அரசனாகிய கருடன்.

(6) ஏவல் - வேலை ; இங்கே இது வேலை செய்வோரைக் குறிக்கும். அவற்கு - அவனுக்கு ; நல்லாய் - பெண்ணே ; மொழியிலார் - ஊமைகள் ; முதுநூல் - பழமையான சாஸ்திரம் (வேதம் ஆகமம் முதலியன).

(7) எந்தை - என் தந்தை ; நல்கூர்ந்தான் - தரித்திரனானன் ; இரப்பார் - பிச்சை யெடுப்பவர் ; (இறப்பார் - சாகின்றவர்

ஈந்து - கொடுத்து; மைந்தர் - புதல்வர்; (மைந்து - வலிமை: பிற்காலத்தில் தந்தையைத் தாங்கத் தக்கவர்) ஈகை - கொடுக்கும் குணம்; பைந்தொடி (பசுமை + தொடி) - பசும் பொன்னால் ஆகிய ஆபரணம்; பைந்தொடீஇ - பெண்ணே (ஆபரணத்தை அணிந்த வளே); பயன் - பலன்; அரம்பை - வாழை; கனி - பழம்.

(8) இன்சொல் - இனிமை + சொல்; வன்சொல் - வன்மை + சொல்; இன்சொல் × வன்சொல்; இரு - பெரிய; இருநீர் - கடல்; வியன் - பெரிய; அதிர் - சப்திக்கின்ற; வளையாய் - பெண்ணே (வளையலை அணிந்தவளே); அழல் - நெருப்பு; அழற்கதிர் - சூரியனது கிரணம்; தண் - குளிர்ச்சி; தண் கதிர் - சந்திரனது கிரணம்; வரவு- வருகை.

(9) ஆக்கும் - செல்வம், கல்வி முதலியவற்றைத் தரும்; அலது - அல்லது; மீ - மேன்மை; உயர்வு × இழிவு; அரவு - பாம்பு; பருமணி - பெரிய இரத்தினம்; கவரார் - பெற விரும்பமாட்டார்; கடல் - இங்கே திருப்பாற் கடல்; கடு - விஷம்; (இங்கே ஆலகாலம்)

(10) குணம் - நற்குணம்; கீழ் - கெட்ட குணம்; புகல்வது - சொல்வது; சேக்கை - படுக்கை; செழுமை - வளப்பம்; பொழில் - சோலை; வாய் - இடம்; கனி - பழம்.

2. நான்மணிக்கடிகை - நன்னான்கு இரத்தினங்களால் ஆகிய மாலை; இது இங்கே நன்னான்கு நீதிகளோடு வரும் பாடல்களால் ஆகிய புத்தகத்தைக் குறிக்கும்.

(1) கள்ளி - ஒருவகை மரம்; அகில் - வாசனையைத்தரும் ஒரு வகைக் கட்டை; ஒள் - சிறந்த; அரிதாரம் - கஸ்தூரி; பல்விலைய - மிகவும் விலையுயர்ந்த; முத்தம் - முத்து; நல்லாள் - பெண்; இலக்குமி. (சிறந்த மகன் என்றும் பொருள் கூறுவர்); குடி - குடும்பம்.

(2) கற்றல் × கல்லாமை; வளம் - செல்வம்; போழ்தத்து - பொழுது; வள்ளன்மை - கொடுக்கும் குணம்; கிளைஞர் - சுற்றத்தார்; போழ்து - பொழுது; தமர் - தம்மவர், சுற்றத்தார்; தமர் அல்லார் - அயலார்; கையகத்து - கையில் (அயலாரிடம்); ஊண் - உண்ணுதல்.

3. திரிகடுகம் - சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய இம் மூன்றும் சேர்ந்த ஒரு மருந்து. இது உடலின் நோயைப் போக்கும். இங்கு அறியாமையாகிய நோயைப் போக்கவல்ல மும்மூன்று நீதிகள் அமைந்த பாடல்களால் ஆகிய நூலுக்குப் பெயராகியது.

(1) தாளாளன் - முயற்சி யுடையவன்; வேளாளன் - உழவுத் தொழில் புரிபவன்; விருந்து - புதிதாக ஊரிலிருந்து வந்தவர்; (சுற்றத்தினரையும் குறிக்கும்); கோளாளன் - நூலின் பொருளை எளிதில் அறிந்துகொள்ளக்கூடியவன்; கேள் - சுற்றம் (தன் சொல் கேட்டு அதன்படி நடப்பவர்); இனிது - நல்லது.

(2) வியந்து - புகழ்ந்து; தருக்கல் - கர்வப்படுதல்; தாழ்வு இன்றி - பணிந்து ஒழுகும் குணம் இல்லாமல்; கொன்னே - வீணாக; வெகுளி - கோபம்; பெருக்கல் - வளர்த்தல்; முன்னிய - நினைத்த; வெஃகும்-மிகுதியும் விரும்பும்; சிறுமை - கீழான குணம்; படை - ஆயுதம்.

4. இன்னா நாற்பது - துன்பம் வருதற்குக் காரணமான விஷயங்களைக் கூறும் நாற்பது பாடல்களால் ஆகிய நூல். இனிது - நல்லது; இன்னா - நல்லதல்லாதது; இனிது × இன்னா.

(1) ஆற்றல் - வல்லமை; படை - ஆயுதம்; இன்னா - துன்பம் தருவதாகும்; நாற்றம் - வாசனை; தோற்றம் - நல்ல உருவ அமைப்பு; துணிபு - ஒன்றைச் செய்யும் முயற்சி; மாற்றம் - சொல், பேச்சு; உரை - பேச்சு.

(2) பொருள் - பாட்டின் கருத்து; இல்வழி - இல்லாதபோது; இன்னு - நன்மை தராது; கூர் - மிகுந்த; நெறி - வழி; போக்கு - செல்லுதல்; அருள் - கருணை; செலவு - செல்லுதல்; வண்மை - கொடுக்கும் தன்மை; புரிவு - செய்தல்.

5. இனிது நாற்பது - நன்மை விளைதற்குக் காரணமான விஷயங்களைக் கூறும் நாற்பது பாடல்களால் ஆகிய நூல்.

(1) தங்கண் - தம்மிடம்; அமர்வு - அமைதியான குணம்; முன் இனிது - மிகவும் இனியது; பாற்பட்டார் - துறவிகள்; பால் - பகுதி; பயம் - நன்மை; மாண்பு - பெருமை; வாய்ப்புடையர் - தகுதியுடையவர்கள்; வலவைகள் - நாணம் இல்லாதவர்கள்; காப்படைய - துணையாக; கோடல் - கொள்ளுதல்.

(2) குழவி - குழந்தை; பிணி - நோய்; (பிணி - கட்டு) கழறும் - பாராட்டிச் சொல்லப்படும்; மயரிகள் - அறியாமையுடையவர்கள்; மாண்பு - பெருமை; திரு - செல்வம் (Gift); தீரவு இன்றேல் - நீங்காது இருக்குமானால்.

IV. எந்நாளோ!

தமிழ் நாட்டார் எல்லோரும தம்மொழியை நாளும்
அமிழ்தெனவே போற்றி அகமகிழ்தல் — எந்நாளோ 1

சுற்றத்தார் போலிவர்கள் சூழவிருந் தன்புடனே
ஒற்றுமையாய் வாழும் உணர்வுறுநாள் — எந்நாளோ 2

கல்வியிலே முன்னோர்போல் காதல் சிறந்திவர்தாம்
நல்லியல்பு பற்பலவும் நாடிடுதல் — எந்நாளோ 3

கோத்திரப்பே ரால்மகிழும் கோதகற்றி விஞ்ஞானச்
சாத்திரத்தால் சீர்த்திபெறும் சால்புடைநாள்—எந்நாளோ 4

வாணிபமும் கைத்தொழிலும் வல்லவுழ வுத்தொழிலும்
பேணிஇவர் பொற்குவையால் பீடுபெறல் — எந்நாளோ 5

எந்திரங்கள் செய்குவதில் இல்லைஇணை இவர்க்கென்னும்
சுந்தரநற் காலமது சூழ்ந்திடுதல் — எந்நாளோ 6

வீரரெனத் தீரரென வெற்றிபெறும் சூரரெனப்
பார்புகழ நம்மவர்கள் பேர்பெறுதல் — எந்நாளோ 7

துன்பேதும் இல்லாது தோழமைகொண் டென்றென்றும்
இன்போடு நம்மவர்கள் இலகிடுதல் — எந்நாளோ 8

அஞ்சாமற் போர்புரியும் ஆற்றலுடன் போய்ப் பிறர்பால்
கெஞ்சாமல் வாழ்ந்திடுநற் கீர்த்திபெறல் — எந்நாளோ 9

சாதிமத பேதமெனும் சச்சரவு நீங்கி இவர்
ஆதியிலே வாழ்ந்ததுபோல் அன்புறுதல் — எந்நாளோ 10

— மயிலை. சிவ - முத்து

V. கதைப் பாடல்



1. முயலும் சிங்கமும்

புத்திமான் பலவா னவான் பலமுளான் புத்தியற்றால்
எத்தனை விதத்தினாலும் இடரது வந்தே தீரும்
மற்றொரு சிங்கந் தன்னை வருமுயல் கூட்டிச்சென்றே
உற்றதோர் கிணற்றில் சாயல் காட்டிய உவமை போலாம்.

— பஞ்சதந்திரப் பாடல்

2. வானரமும் தூக்கணம் குருவியும்

வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக் குரைத்திடில் இடர தாகுமே.

பஞ்சதந்திரம் - ஐந்து வகையான உபாயம்; அவை யாவன: (1) மித்திரபேதம் (சிநேகத்தைக் கெடுத்துப் பகையை உண்டாக்கல் (2) சுகிர் லாபம் (தங்களுக்குச் சமமானவர்களோடு கூடிப் பகையில்லாமல் வாழ்தல்) (3) சந்தி விக்கிரகம் (பகைவரை அடுத்து உறவு செய்து வெல்லுதல்) (4) லப்தஹானி (தன் கையிற் கிடைத்த பொருளை அழித்தல்) (5) அசம் பிரேக்ஷிய காரித்துவம் (ஒரு காரியத்தை நன்கு ஆராயாமற் செய்தல்).

(1) அற்றால் - நீங்கினால்; உற்ற - அடைந்த; சாயல் - நிழல்; உவமை - உதாரணம்.

காட்டிலுள்ள பல மிருகங்களைக் கொன்று தின்று வந்த ஒரு சிங்கத்தை ஒரு சிறு முயல் மற்றோர் சிங்கம் இருப்பதாக அதன் நிழலையே காட்டி அதனைப் பாழ்ங்கிணற்றில் தள்ளிவிட்டது என்பது கதையின் சுருக்கம்.

(2) வானரம் - குரங்கு; தூக்கணம் - தொங்கும் கூடுகட்டும் குருவி வகை; நெறி - வழி; ஞானம் - அறிவு; நவின்ற - சொல்லப் பட்ட; ஈனர் - இழிந்த குணமுடையவர்; இடர் - துன்பம்.

மழையால் நனைந்துகொண்டிருந்த குரங்கைப் பார்த்து "நீயும் என் என்னைப்போல் ஒரு வீடு கட்டிக்கொள்ளக்கூடாது" என்று குருவி கேட்க "எனக்குக் கட்டத் தெரியாது; ஆனால் பிய்க்கத் தெரியும்" என்று கூறிக் குருவியின் கூட்டைக் குரங்கு பிய்த்து விட்டது என்பது கதையின் சுருக்கம்.

VI. ஆறு

கல்லும் மலையும் குதித்துவந்தேன் - பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்
எல்லை விரிந்த சமவெளி எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன். 1

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன் - அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன் - மடைச்
சீப்புகள் மோதித் திறந்துவந்தேன். 2

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன் - அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன்
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன் - அங்கென்
ஆசை தீரவிளை யாடிவந்தேன். 3

ஏருத மேடுகள் ஏறிவந்தேன் - பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன் - மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன். 4

ஆயிரம் காலால் நடந்துவந்தேன் - நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்
நேயமுறப் புன்செய்க் காட்டிலும் அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன். 5

பஞ்சை அரைத்துநூல் நூற்றுவந்தேன் - சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரிற் - குழாய்
நீராக வும்சென்று பாய்ந்துவந்தேன். 6

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன் - நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்
தீங்கரும் பாயிரம் தள்ளிவந்தேன் - மிகத்
தேனும் தினையுமே சேர்த்துவந்தேன். 7

அல்லும் பகலும் அலைந்துவந்தேன் - எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்
நில்லும் எனக்கினி நேரமில்லை - இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும்அம்மா. 8

— திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளை.

(1) கடந்து - தாண்டி. (2) சாடி - மோதி; கண்ணறை - அணைக்கட்டில் உள்ள கண்கள்; திடர் - திட்டு அல்லது தீவு; மடைச் சீப்பு - மதகுப் பலகை. (3) அழல் - நெருப்பு; ஆயும் - ஆராயும்; பொழில் - சோலை. (4) ஓடை - நீர் ஓடும் வழி. (5) ஆயிரம் கால் - கணக்கற்ற வாய்க்கால்; நேயம் - ஆசை. (6) சீனி - வெள்ளைச் சர்க்கரை. (7) வாசம் - மணம்; தீங் கரும்பு - இனிய கரும்பு. (8) அல் - இரவு; ஆழி - கடல்; இறைவன் - தலைவன்.



VII. ஓர் ஏழைச் சிறுவன்

தந்தையும் தாயும் இல்லான் ;
தாங்கிடு துணைவர் இல்லான் ;
சொந்தமாய்ப் பூமி காணி
சொத்திவை சிறிதும் இல்லான் ;
மந்தையாய் மாடு மேய்த்தான் ;
மதியினுல் விதியை வென்ருன் ;
விந்தையாய்க் கல்வி கற்ருன் ;
வீறுடைச் சிறுவன் அம்மா ! 1

கற்றதே போதும் என்றே
கருதினன் இல்லை அன்னன் ,
பெற்றதை மேலும் மேலும்
பெருக்கியே பெருமை பூண்டான் ;
மற்றவர் தமக்கும் ஆங்கே
மகிழ்வுடன் உணர்த்த லானுன் ;
நற்றமிழ்க் கவிகள் செய்தே
நானிலப் புகழும் கொண்டான். 2

அன்னவன் உண்மைப் பேரும்
அவனியோர் அறிய மாட்டார்;
மன்னவன் முன்னர் ஓர்நாள்
மாண்புடன் கம்பு தாங்கிச்
சின்னவன் சென்றான் அந்தச்
செய்கையால் 'கம்பன்' என்றே
சொன்னவன் சோழன் என்பர்
சொன்னஅப் பெயரும் நன்றே! 3

கம்பர்தாம் கல்வி கற்ற
காதையும் கூறக் கேண்மோ;
நம்பிஇச் சிறுவர் மாடு
நலனுற மேய்த்ததோடு
தெம்புடன் சுவடி தூக்கிச்
செல்லுமோர் தொழிலும் கொண்டார்
அன்பராம் சடைய வள்ளல்
அருந்தவச் சேயர் கட்கே. 4

சேயர்தாம் கற்கும் போதிச்
சிறுவரும் கூர்ந்து நோக்கி
நேயமாய்ப் பாடம் யாவும்
நெட்டுருப் போட்டு வந்தார்,
ஆயநற் கலைகள் எல்லாம்
அவர்கள்தாம் கற்கு முன்பே
தூயவர் கற்க லானார்
தொலைவினில் நின்று நின்றே, 5

நல்லதோர் கனியி ருந்தால்
நறுமணம் வீசு மாபோல்
வல்லவர் கம்பர் என்னும்
வாய்மொழி வெண்ணெய் நல்லூர்ச்
செல்வராம் சடைய ஞர்தம்
செவியிலும் சென்று தாக்க
ஒல்லையில் அழைக்க லானர்
உயர்தமிழ்ப் புலவர் தம்மை. 6

புலவர்தம் ஆற்றல் கண்ட
புண்ணியச் சடைய ஞர்தாம்
நிலமிசை தமது பேரும்
நிலவிட இருந்த தாலே
பலகலைப் பொருள்கள் யாவும்
பாலனர் கற்றற் கான
நலனெலாம் நாட லானர் ;
நன்றிவீண் போத லுண்டோ ? 7

புண்ணிய ராய கம்பர்
புலமையிற் பெரிய ராஞர் ;
கண்ணெனக் காத்த வள்ளல்
கவின்பெயர் மிளிர நன்றே
எண்ணருங் குணத்து ராமன்
எழிற்கதை தமிழில் யாத்தார் ;
திண்ணிய உறுதி வாய்ந்தோர்
திகழ்தர வாழ்வர் அன்றே ? 8

பொருள் இலை கற்க என்றே
புகன்றிடு மாண வர்க்கோர்
தெருளுரை யாகும் இந்தத்
தெய்வநற் புலவர் காதை;
மருளுடை மனத்த ராகி
மண்ணில் நாள் கழிக்க வேண்டா;
அருளுடைச் செல்வ மெல்லாம்
அடைகுவீர் முயற்சி யாலே.

— மயிலை. சிவ - முத்து

(1) விந்தையாய் - ஆச்சரியப்படும்படி; வீறு - பெருமை. (2) நானிலம் - பூமி. (3) அவனி - பூமி; மாண்பு - பெருமை; காதை-கதை, வரலாறு; கேண்மோ - கேளுங்கள். (4) வள்ளல்-ஓர் அளவு இல்லாமல் கொடுப்பவர்; சேயர் - குழந்தைகள். (5) கூர்ந்து - கவனித்து; நேயம் - ஆசை; கலை - சாத்திரம்; தூயவர் - பரிசுத்த மான குணமுடையவர். (6) வீசுமாபோல் - வீசுவதுபோல; ஒல்லை - சீக்கிரம். (7) ஆற்றல் - வல்லமை; நிலமிசை - பூமியின்மீது; நாடல் - தேடுதல். (8) புலமை - அறிவு; கவின் - அழகு; மிளிர - ஒளிர; எண்ணரும் குணம் - எண்ணிப் பார்த்தற்கும் இயலாத அருமையான நற்குணம்; எழில் - அழகு; யாத்தார் - பாடல் செய் தார்; திண்ணிய - உறுதியான; திகழ்தர - புகழோடு விளங்க. (9) புகன்றிடும்- சொல்லும்; தெருளுரை-அறிவு புகட்டும் விஷயம்; மருள் - அறியாமை; அருள் - கருணை.

The Model Press, Madras.